


விலை ரூபா 80
பக்கங்கள் - 12 + xII

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 08 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (01.12.2024)




# சீனத்தூதுவரின் கருத்துக்கு யாழ். பல்கலை மாணவர் பதிலடி

## தேர்தல் பெறுபேற்றை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியாது!

தமிழ் மக்கள் தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் தொடர்ந்தும் எமது உரிமைகளுக்காகப் போராடி வரும் இனமாகவே தமிழினம் காணப்படுகின்றது என்றும், அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியாது என்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சோம பாலன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த இலங்கைக்கான சீனத் தூதவர், தமிழ் மக்கள் தற்போதைய அரசுடன் இணைந்து மாற்றத்துக்காகப் பயணிக்கின்றனர் எனவும், இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஒன்றிணைந்து பயணிப்பார்கள் எனவும் தெரிவித்த கருத்து தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

02 →




# பணவீக்கம் வீழ்ச்சி

பாலகணேஷ் டிலுக்ஷா

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் படி, கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் நவம்பர் மாதத்திற்கான பணவீக்க வீதம் குறைவடைந்துள்ளது.

இதன்படி, ஒக்டோபர் மாதத்தில் -0.8 வீதமாக இருந்த பணவீக்கம் நவம்பர் மாதத்தில் -2.1 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

இதேவேளை, ஒக்டோபர் மாதத்தில் 1 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் நவம்பரில் 0.6 சதவீதமாகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், ஒக்டோபர் மாதத்தில் -1.6 சதவீதமாக இருந்த உணவு அல்லா பணவீக்கம், இந்த மாதத்தில் -3.3 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

# கிழக்கில் கரையோரப் பகுதிகளில் துக்கம் அனுஷ்டிப்பு; விசேட துஆ

## வெள்ளைக் கொடிகள் பறக்க விட்டு சோகம்

முகம்மட் முக்தார்

காரைதீவு, மாவடிப்பள்ளி தாம்போதியில் உழவு இயந்திரம் கவிழ்ந்து வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்டு மரணமடைந்த மாணவர்கள் உட்பட ஏனையோரது மரணத்திற்கு துக்கம் அனுஷ்டிக்கும் பொருட்டு அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரியில் ஷரீஆ மற்றும் ஹிப்ழ் பிரிவில் முழு நேரமாகக் கல்வி கற்று வந்த அனைத்து மத்ரசா மாணவர்களுக்கும் கால நிலை சீற்றத்தின் காரணமாக மத்ரசாவினால் கடந்த 26ந் திகதி செவ்வாய்க்கிழமை மாலை விடுமுறை வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சம்மாந்துறை பகுதியை சேர்ந்த மாணவர்கள் தமது பிரதேசத்திற்கு

02 →



# ஆட்சி முடிவதற்குள் வடக்கில் உள்ள காணிகள் விடுவிப்பு

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் யாழில் உறுதி

வடக்கில் பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள காணிகள், தேசிய மக்கள் சக்தியின் இந்த ஆட்சிக் காலத்தில் விடுவிக்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பந் துயகொத்தா உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புக்கமைய வெள்ள அனர்த்த நிலைமை தொடர்பில் நேரில் பார்வையிட யாழ்ப்பாணம் சென்றிருந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம், வடக்கில் பாதுகாப்புப் படைகளின் வசமுள்ள காணிகள் விடுவிக்கப்படுமா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

02 →



# திருமலை, மட்டக்களப்பு அபிவிருத்தி குழு தலைவராக பிரதி அமைச்சர் அருண்

எஸ்.கீதபொன்கலன்



திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் அபிவிருத்திக்குழு தலைவ ராக, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை பிரதி அமைச்சரும், திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினருமான அருண் ஹேமச்சந்ரா, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

# சீரற்ற காலநிலை: உயிரிழந்தோர் 14 ஆக அதிகரிப்பு

சுப்ரமணியம் நிஷாந்தன்

சீரற்ற காலநிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை வெள்ளிக்கிழமை (29) நண்பகல் 12.00 மணி நிலவரப்படி 14 ஆக உயர்ந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 09 பேரும், புத்தளம் மாவட்டத்தில் இருவரும், பதுளை, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் தலா ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 02 பேர் காணாமல் போயுள்ளதாகவும், பல்வேறு அனர்த்த சம்பவங்களினால் 20 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் திருகோணமலையிலிருந்து 100

02 →

# பட்ஜெட்டின் பின்னரே உள்ளூராட்சித் தேர்தல்

## புதிய வேட்புமனுக்களை கோர இணக்கம் கட்சித் தலைவர்கள் பச்சைக்கொடி

சுப்ரமணியம் நிஷாந்தன்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை புதிய வேட்புமனுக்களைக் கோரி நடத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பச்சைக்கொடி காட்டப்பட்டுள்ளது.

இதனால் 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஏப்ரல் மாதம் நடத்த

02 →

# இன்சுலின் பற்றாக்குறை : 4 நாட்களுக்குள் இறக்குமதி




பாலகணேஷ் டிலுக்ஷா

பற்றாக்குறையாக உள்ள இன்சுலின் வகையை அடுத்த நான்கு நாட்களுக்குள் இலங்கைக்கு கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெள்ளிக்கிழமை (29)அறிவித்தது.

விநியோகப் பதிவு செயற்பாட்டில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இன்சுலினிற்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதி பணிப்பாளர்

02 →

# கல்முனை கிட்டங்கி தாம்போதியில் பாண்டிருப்பு வாசியின் சடலம் மீட்பு



ஏ.எல்.எம்.ஷினாஸ்

கல்முனை கிட்டங்கி பாலத்தில் நீரில் மூழ்கி கரை ஒதுங்கிய நிலையில் ஒருவருடைய சடலம் வெள்ளிக்கிழமை (29) மீட்கப்பட்டது.

சடலம் கல்முனை -பாண்டிருப்பை வசிப்பிடமாகக் கொண்ட 47 வயதுடைய ஜெகன் என அழைக்கப்படும் நாகலிங்கம் சுரேஷ் என அடையாளம் காணப்பட்டுள்ளார். நாவிதன்வெளி – சவளக்கடை மரம் அரியும் ஆலை

02 →

# மட்டக்களப்பில் வெள்ளம் வடிந்தாலும் தொடர்ந்தும் அனர்த்த நிலை : 1885.7 மி. மீ மழை வீழ்ச்சி பதிவு



வெல்லாவெளி நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது மழை ஓய்ந்துள்ள நிலையில், வெள்ளநீரும் வெகுவாக கடலை நோக்கி வழிந்தோடி வருகின்றது. எனினும் படுவாங்கரைக்கும் எழுவாங்கரைக்குமான போக்குவரத்துக்கள் வெள்ளிக்கிழமை(29) வரையிலும் தடைப்பட்டே காணப்பட்டது .

இந்நிலையில் பட்டிருப்பு பெரியபோரதீவு பிரதான வீதியில் சூழ்ந்திருந்த வெள்ளம் வற்றியுள்ளதனால் அவ்வீதியூடாக மக்கள் மிகுந்த சிரமத்தின்

02 →

# எம்.பிகளின் ஓய்வூதியம், தீர்வையற்ற வாகன லைசென்ஸ் இரத்து



நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் மற்றும் வரியில்லா வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வது தொடர்பில் அரசாங்கத்தின் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தற்போது அமைச்சுக்களுக்கு சொந்தமான 150 சொகுசு வாகனங்களை விற்பனை செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்

02 →

# சபாநாயகர் ரன்வலவுக்கு சீன நாடாளுமன்று வாழ்த்து

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் சபாநாயகர் கலாநிதி அசோக ரன்வலவை அண்மையில் நாடாளுமன்றத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

சீன தேசிய மக்கள் காங்கிரசின் நிலைக்குழுவின் தலைவர் (சீன நாடாளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜி (Zhao Leji)யின் வாழ்த்துக்களை இதன்போது சீனத் தூதுவர் பத்தாவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள

02 →



# மறு அறிவித்தல் வரை கடலுக்கு செல்ல வேண்டாம்

பாலகணேஷ் டிலுக்ஷா

புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை மற்றும் திரு கோணமலை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளுக்கு மறு அறிவித்தல் வரை செல்லவேண்டாம் என மீனவர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையை சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளிலும் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் தாக்கம் காரணமாக இன்று நண்பகல் வரை இந்த எச்சரிக்கை அமுலில் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்று வடமேற்கு திசையிலிருந்து மேற்கு திசை நோக்கி வீசக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40 முதல் 50 கிலோ மீற்றர் வரை காணப்படும். புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளத்திலிருந்து காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகவும் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்பதுடன் நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்புடன் காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளுக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் 2.5 முதல் 3.0 மீற்றர் உயரத்தில் அலைகள் வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 40 இலட்சம் மதிப்புடைய மஞ்சள் பறிமுதல்

கொழும்பு 15 இல் உள்ள தனியார் களஞ்சிய வளாகத்தை சுற்றி வளைத்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகளால் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 765 கிலோகிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இம் மஞ்சளின் பெறுமதி சுமார் 40 இலட்சம் ரூபாய் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

எந்தவொரு தகவலும் இல்லாமல் சந்தைக்கு வெளியிடத் தயாரான நிலையிலேயே இது கைப்பற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இம் மஞ்சள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

# சீரற்ற காலநிலையால் மரக்கறிகளுக்கு தட்டுப்பாடு

கனுஷியா புஷ்பகுமார்

தற்போது நிலவும் காலநிலை காரணமாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு பெறப்படும் மரக்கறிகளின் அளவு 60 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்காரணமாக, மரக் கறி களை கொள்வனவு செய்ய வரும் வியாபாரிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்துள்ளதாகபொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பலத்த மழையுடன் கூடிய வானிலை காரணமாக குறித்த வர்த்தக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் தரமான மரக்கறிகள் விற்பனை செய்யப்படாமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக குறித்த சங்கத்தின் செயலாளர் ஐ.ஜி. விஜேனந்த தெரிவித்தார்.

அதன்படி, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் வெளி மாகாணங்களில் இருந்து வரும் மரக்கறிகள் மற்றும் கிராமப்புறங்களில் இருந்து வரும் மரக்கறிகளின் அளவு வெகுவாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மழை காரணமாக மரக்கறி விளைச்சல்கள் சேதமடைந்து ள்ளதால் இந்நிலை உருவாகியுள் ளதாக தெரிவித்த அவர், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் கரட் மற்றும் லீக்ஸ் கிலோ ஒன்றின் தொகை விலை 100 ரூபாய் முதல் 140 ரூபாய் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### சீனத்தூதுவரின்...

அவர் மேலும் தெரிவிக்கையில், ”தமிழ் மக்கள் எந்தவொரு நாட்டினையும் நட்பு நாடாகவோ அல்லது எதிரி நாடாகவோ பார்ப்பது கிடையாது.

இவ்வாறான நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சீனத் தூதுவர் தெரிவித்த கருத்து தொடர்பில் சில விளக்கத்தைத் தெரிவிக்கலாம் என நினைக்கின்றேன்.

தமிழ் மக்கள் வாழ்வியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் தொடர்ந்து இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்கள் விவகாரம், சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் மற்றும் இனப்படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதி இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

தமிழ் மக்கள் தமக்கு விளைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கிப் பயணித்தவர் நிலையில் அதற்கான தீர்வு கிடைக்கப் பெற வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க முடியாது. ஏனெனில் அதையும் தாண்டி பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் ஒருவர் காணாமல்போனவர்களை 15 வருடங்களாகக் காணவில்லை என்றால் காணவில்லைதான் என்ற கருத்துப்பட கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவருடைய கருத்தைப் பார்த்தால் 2009 இற்கு முன்னர் அவர்களுடைய கட்சி பலரைக் காணாமல் ஆக்கியது. அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக இதை அவர் அவ்வாறு காணாமல்போனது காணாமல்போனதுதான் என்ற கருத்துப்படத் தெரிவித்திருக்கின்றார்.

ஆகவே, தமிழ் மக்கள் தமது தேசிய விடுதலைக்காகப் போராடி வரும் ஒரு இனமாகக் காணப்படுகின்ற நிலையில் அதனை வென்றெடுப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் எங்களால் முடிந்தவரை தொடர்ந்தும் பயணிப்போம்.” – என்றார்

### சீரற்ற காலநிலை:...

கிலோமீற்றர் தொலைவில் தென்கிழக்கே நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் ஓரளவு குறையும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை சூறாவளியாக மாற வாய்ப்பு இருப்பதால் அதற்கு “ஃ பெங்கல்“ என இந்திய வானிலை ஆய்வு மையம் பெயர் சூட்டியது.

என்றாலும், இலங்கையில் சூறாவளி அவதானங்கள் எதுவும் இல்லை என்பதால் பெயர்கள் எதுவும் சூட்டப்படவில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளதுடன், ஆனால், காற்றின் வேகம் தொடர்ந்து கரையோர மாவட்டங்களில் நிலவும் எனவும் தெரிவித்துள்ளது.

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடந்த திங்கட்கிழமை முதல் இலங்கையில் சீரற்ற காலநிலை நிலவி வருகிறது. சீரற்ற காலநிலையால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியிருந்தன.

132,071 குடும்பங்களைச் சேர்ந்த 441,373 பேர் நாடு முழுவதும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 70,321 குடும்பங்களைச் சேர்ந்த 231,525 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடமாகாணத்தில் 46,034 குடும்பங்களைச் சேர்ந்த 154,268 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வடமேல் மாகாணத்தில் 7828 குடும்பங்களைச் சேர்ந்த 25,348 பேரும், வடமத்திய மாகாணத்தில் 3071 குடும்பங்களைச் சேர்ந்த 10,361 பேரும், மேல் மாகாணத்தில் 2983 குடும்பங்களைச் சேர்ந்த 12,773 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய மாகாணங்களிலும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. அதிக பாதிப்புக்கு உள்ளாகிய மாவட்டமாக அம்பாறை மாவட்டம் இருப்பதுடன், இங்கு 43,631 குடும்பங்களைச் சேர்ந்த 149,491 பேர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

சீரற்ற காலநிலை இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் ஓரளவு வழமைக்குத் திரும்பும் என வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளதுடன், சீரற்ற காலநிலை வழமைக்குத் திரும்பும் வரை வளிமண்டலவியல் திணைக்களம், இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் வழங்கும் அறிவுரைகளைப் பின்பற்றுமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் துரிதமாக நிவாரணப் பணிகளை முன்னெடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதேவேளை, தொடர்ந்து நாட்டின் சில பகுதிகளில் 40 முதல் 50 மில்லி மீற்றர் மழை பதிவாக வாய்ப்பு இருப்பதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### ஆட்சி முடிவதற்குள்...

அதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,”காணி விடுவிப்பு தொடர்பில் நாம் சிந்தித்து வருகின்றோம். அது தொடர்பில் நாம் மதிப்பீடு செய்துள்ளோம். பாதுகாப்பு மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் நாம் சில முடிவுகளை எடுத்துள்ளோம். நிச்சயமாக இந்த விடயத்தில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவோம்.

நாம் ஏற்கனவே சில வீதிகளை விடுவித்துள்ளோம். காணிகளையும் விடுவிப்போம். இந்த நாட்டு மக்களின் நலன் குறித்து நாம் எப்போதும் கரிசனையுடையவர்களாகவே உள்ளோம்.” – என்றார்.

### கிழக்கில் கரையோரப்...

செல்லும் வழியில் காரைதீவு,மாவடிப்பள்ளி பாலத்தடியில் வெள்ள அனர்த்தத்தின் அகப்பட்டு மரணமடைந்த சம்பவமானது முழு நாட்டையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இம்மாணவர்களுக்கு சடுதியான மரணம் ஏற்பட்டமை காரணமாக தமது துக்கத்தை வெளிப்படுத்தும் நோக்குடன் சமூக நலன் விரும்பிகளால் அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை ஆகிய பிரதேசங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

நிந்தவூர் ஜ/ம்ஆ பெரிய பள்ளிவாசலின் பரிபாலனத்தின் கீழ் உள்ள அனைத்து ஜ/ம்ஆ பள்ளிவாசல்களிலும் , ஜ/ம்ஆ தொழுகையினைத் தொடர்ந்து மரணமடைந்த மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்காக விசேட ஜனாஸா தொழுகை நடாத்த ஏற்பாடு செய்யப் பட்டு அதனைத் தொடர்ந்து விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச பள்ளிவாசல்களிலும் விசேட ஜனாசாத் தொழுகை, விசேட துஆ பிரார்த்தனை என்பனவும் இடம்பெற்றன.

மேற்படி சம்பவத்தில் சுமார் 06 மாணவர்கள் உட்பட 10 பேர் மரணமடைந்தனர். வெள்ளத்தில் சிக்குண்ட 05 மாணவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

### பட்ஜெட்டின்

அரசாங்கம் ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடத்தப்படும் என அண்மையில் கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார். என்றாலும், கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

“ஜனவரி மாதம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் இல்லை. இடைக்கால கணக்கறிக்கையின் ஊடாக தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலைகளும் இல்லை என்பதால் புதிய வரவு – செலவுத் திட்டத்திலேயே தேர்தலை நடத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ள முடியும்” என்றார்.

இந்த நிலையில் இந்த வாரம் ஆரம்பத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பிலும் அது தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தேர்தலை ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுக்களின் கீழ் நடத்துவதில் உள்ள சிக்கல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுள்ளன. பழைய வேட்புமனுக்களின் கீழ் தேர்தலை நடத்த முடியாதென்பதை ஏற்றுக்கொள்வதாக எதிர்க்கட்சிகளின் சார்பில் பங்குபற்றியிருந்த கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொண்டதால் புதிய வேட்புமனுக்களைக் கோரி தேர்தலை நடத்த இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடவும் கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர். அதன் பிரகாரம் எதிர்வரும் வாரம் கட்சித் தலைவர்கள் இதுதொடர்பில் கலந்துரையாடல் நடத்தி இறுதி தீர்மானமொன்றை எட்டவும் உள்ளனர்.

இந்த நிலையில், 2025ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நடத்த அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது. கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முழுமையான இணக்கப்பாடுகளை எட்டிய பின்னர் இந்த அறிவிப்பை அரசாங்கம் வெளியிடத் தயாராகி வருவதாகவும் தெரியவருகிறது.

என்றாலும், 2023 மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைத்தமைக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் என்ற வகையில் ஜனாதிபதியும், நிதியமைச்சரும் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் கடந்த அரசாங்கத்துக்கு தீர்ப்பளித்திருந்தது.

அதன்படி,உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவில் நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. என்றாலும், ஆட்சி மாற்றத்தை அடுத்து பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தப் பின்புலத்தில் மீண்டும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பிலான கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த 27ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பிலான கலந்துரையாடல்களை நடத்தியது. என்றாலும், உயர்தரப் பரீட்சை காலம் என்பதால் இதுதொடர்பிலான அறிவிப்புகளை பின்னர் வெளியிடலாம் என தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பில்...

மத்தியில் போக்குரத்தில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் சில சிறியகுளக்கட்டுகளும் உடைப்பெடுத்துள்ளதுடன், பல வீதிகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல நூற்றுக்கணக்கான வயல் நிலங்களும், வெள்ளத்தில் அள்ளுண்டுபோயுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை காலை 6மணி வரையில் உன்னிச்சைக்குளத்தின் நீர்மட்டம் 30அடி 4அங்குலம், உறுகாமத்து குளத்தின் நீர்மட்டம் 16அடி 5அங்குலம், வாகனேரிக்குளத்தின் நீர்மட்டம் 19அடி 5அங்குலம், கட்டுமுறிவுக்குளத்தின் நீர்மட்டம் 11அடி 8அங்குலம், கித்துள்வெவக் குளத்தின் நீர்மட்டம் 12அடி 1அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 15அடி 5அங்குலம், வடமுனைக்குளத்தின் நீர்மட்டம் 12அடி 8அங்குலம், நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 30அடி 8அங்குலமாகவும் உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க,மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 1885.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

### சபாநாயகர்

கலாநிதி அசோக ரன்வலவிடம் தெரிவித்தார்.

இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்ட கால ஒத்துழைப்புக்களை நினைவு கூர்ந்த புதிய சபாநாயகர், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் தலைமையிலான புதிய அரசாங்கத்திலும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சீனத் தூதுவர் குறிப்பிடுகையில், இரு நாடுகளின் சட்டவாக்க நிறுவனங்களின் உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும் எனவும், புதிய நாடாளுமன்றத்திலும் இலங்கை – சீன நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தை ஸ்தாபிக்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

அத்துடன், பொருளாதார அபிவிருத்தி, கலப்பின விதை வகைகளை விருத்தி செய்தல் உள்ளிட்ட விவசாயம் சம்பந்தப்பட்ட விடயங்கள், நீர் முகாமைத்துவம், மசகு எண்ணெய் சுத்திகரிப்பு, வெளிநாட்டு முதலீடு மற்றும் ஏற்றுமதித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

### கல்முனை கிட்டங்கி

ஒன்றில் வேலை பார்க்கும் இவர்,கடந்த 3 தினங்களுக்கு முன்னர் காணாமல் போனதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (29) திரவந்தியமேடு பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவுகளை எடுத்துச் சென்ற கடற்படையினர் குறித்த பகுதியில் சடலம் மிதப்பதைக் கண்டு அதனைக் கரை சேர்த்தனர்.

மேலதிக விசாரணைகளுக்காக சடலம் அங்கிருந்து கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டது.

### இன்சுலின்...

நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது அந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் முதல் தொகுதியாக இன்சுலின் கலவையை நாட்டிற்கு விமானத்தில் கொண்டு செல்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதுவரை மட்டுப்படுத்தப்பட்ட இருப்புக்களை உரியமுறையில் பயன்படுத்துமாறு வைத்தியசாலைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் மூன்று வகையான இன்சுலின் வகைப் பயன்படுத்தப்படுவதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

### எம்.பிகளின்

தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏ8 மற்றும் ஆழவெநசழ போன்ற சொகுசு வாகனங்களை வழங்குவதில்லை எனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான உண்மைகளை மீளாய்வு செய்த பின்னர் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு துப்பாக்கி மற்றும் துப்பாக்கி பயிற்சி வழங்குதல், மக்கள் பிரதிநிதிகளுக்கான வீடுகள் தொடர்பாகவும் இதுவரை எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

அமைச்சர்களின் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதி அனுரகுமார திஸ ாநாயக்கவினால் விசேட குழுவொன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

அக் குழுவின் பரிந்துரையைக் கருத்தில் கொண்டு அமைச்சர்களின் சிறப்புரிமைகள் குறித்துத் தீர்மானிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறப்புரிமைகள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை உத்தியோகபூர்வ அறிவித்தல் வழங்கவில்லை என நாடாளுமன்ற அதிகாரி ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவித்துள்ளார்.

அதுவரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான வீடுகள் மற்றும் ஏனைய வசதிகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வில் அவர்களின் சிறப்புரிமைகள் தொடர்பான விடயங்கள் தெளிவுபடுத்தப்பட இருந்த போதிலும் அது நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தயார்



(கனூஷியா புஷ்பகுமார்)

ஜனாதிபதி மற்றும் தற்போதைய அரசாங்கம் எடுக்கும் சரியான தீர்மானங்களுக்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது மதிப்பாய்வில் எட்டப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் நாட்டிற்கு 300 மில்லியன் டொலர்கள் கிடைக்கும், இது நாட்டுக்கு மிகவும் நல்லது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி உரிய முறையில் நிர்வகித்து வருவதாகவும் அது சாதகமான அறிகுறி எனவும் சாணக்கியன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ஜனாதிபதி மேற்கொள்ளும் நாட்டிற்கு முக்கிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தமது கட்சி தயாராகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் 391 குடும்பங்கள் பாதிப்பு!

மருதங்கேணி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 391 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மருதங்கேணி பிரதேச செயலாளர் கே.பிரபாகர மூர்த்தி தெரிவித்தார். 364 குடும்பங்களைச் சேர்ந்த 1069 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். நான்கு நலன்புரி முகாம்களில் ஏனையவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குடத்தனை – பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரும், அடம்பன் பிரதேசத்தில் சிவனொளி முன்பள்ளியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேரும், நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 70 பேரும், மருதங்கேணி கிராம சேவகர் அலுவலகத்தில் ஒரு குடும்பங்களைச் சேர்ந்த 4 பேருமாக 27 குடும்பங்களைச் சேர்ந்த 91 பேர் நான்கு நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் அதிகரித்த வெள்ளம் காரணமாக வடமராட்சி கடல் நீரேரியில் அமைந்துள்ள மருதங்கேணி பிரதேசத்திற்கான ஒரே ஒரு போக்குவரத்து மார்க்கமாகவும் ஏனைய பிரதேசங்களை இணைக்கும் வகையில் இருக்கும் தாழையடி புதுக்காடு பாதையில் அமைந்துள்ள மருதங்கேணி பாலம் உடைந்து போகும் நிலை காணப்பட்டது.

இதையடுத்து பாலத்தினுடைய இரு முனைகளிலும் மண் அரிக்கப்பட்டதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மண் அரிப்பு ஏற்பட்ட இரு பகுதிகளிலும் மணல் மூடைகளை அடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது செம்பியன்பற்று இராணுவ முகாம் கட்டளை அதிகாரியுடன் தொடர்புகொண்டு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அந்த முகாமை சேர்ந்த 70 இராணுவத்தினரும் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவ்வாறு மணல் மூடைகள் அடுக்கப்பட்டு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மருதங்கேணி பாலத்தின் ஊடான போக்கு வரத்து சீர்செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் நித்தியானந்தன் தெரிவித்திருந்தார். இருப்பினும் கனரக வாகனங்கள் பயணிப்பதனை இயன்றவரை குறைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு தெரியப்படுத்தியிருப்பதாக மருதன்கேணி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

அத்துடன் கொடுக்கிளாய் – இயக்கச்சி பாதையில் இருக்கும் அபாய வெளியேற்றப் பாதை, வெள்ளம் மற்றும் அதிகரித்த வெள்ளம் காரணமாக முழுமையாக சேதமடைந்திருபனால் அவ்வீதியூடான போக்குவரத்து செய்ய முடியாத நில ஏற்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை

**மேஷம்:** சமயோசித புத்தி மற்றும் புரிதலுடன் நீங்கள் செய்யும் தொடர்ச்சியான முயற்சியால் வெற்றி உறுதி

**ரிஷபம்:** தொழில்துறையினர் மற்றும் வியாபாரிகள் தடை தாமதங்களை சந்தித்தாலும் அவற்றை வெற்றிகரமாக கடந்து செல்வார்கள்.

**மிதுனம்:** துல்லியமாக திட்டமிட்டு செயற்பட்டால் நல்ல மாற்றங்களை பெறலாம

**கடகம்:** இந்தவாரம் பல இடங்களுக்கு பிரயாணம் செய்வதன் மூலம் புதிய நபர்கள் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** பொருளாதார நிலையை பொறுத்தவரை செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.

**கன்னி:** குடும்பநிலையை பொறுத்தவரை அனைவரையும் அனுசரித்துச்சென்று சிக்கல்களை சமாளிப்பீர்கள்.

**துலாம்:** உற்சாகமாக செயல்பட்டு தங்கள் திட்டங்களை நிறைவேற்றுவார்கள்.

**விருட்சிகம்:** வியாபாரிகள் நீண்ட நாட்களாக திட்டமிட்ட தொழில் விரிவாக்க பணிகளை மேற்கொள்ளலாம்.

**தனுசு:** குடும்ப பொருளாதாரநிலை எதிர்பார்த்தவரவுகள் தாமதம் ஆனாலும் சாதிக்கலாம

**மகரம்:** தொழில்துறையினர் மற்றும் வியாபாரிகள் புதிய முதலீடு செய்து தொழில்விரிவாக்க பணிகளை மேற்கொள்ளலாம்.

**கும்பம்:** பொருளாதாரத்தில் புதியகடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள்.

**மீனம்:** உத்தியோகஸ்தர்கள் தொழில்நுட்பங்களைகற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** சதுர்த்தசி திதி காலை 11:03 யுஆ அதன் பிறகு அமாவாசை திதி.
**நட்சத்திரம்:** விசாகம் நட்சத்திரம் மதியம் 01:39ழஆ அதன் பிறகு அனுஷம் நட்சத்திரம்.
**யோகம்:** சித்த யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** ரேவதி, அசுவினி.
**இராகு காலம்:** காலை 09:00 AM முதல் 10:30 AM வரை,
**குளிகை:** காலை 06:00 AM முதல் 07:30 AM வரை,
**எமகண்டம்:** மதியம் 01:30 PM முதல் 03:00 PM வரை,

# உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களின் இறக்குமதி முற்றாக நிறுத்தம்

## கைத்தொழில் அமைச்சர் அறிவிப்பு

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடிய அனைத்துப் பொருட்களும் எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்படமாட்டாது என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கட்டுபெத்த பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொண்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

“இதுவரை காலமும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைவாக கைத்தொழில் துறை செயல்பட்டது. ஆனால், நாட்டின் முழு கைத்தொழில் துறையையும் கட்டியெழுப்பி உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கு புதிய அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

கைத்தொழில்துறையினருக்கு வசதிகளை வழங்கும் பிரதான அரச நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிகளைச் சிறப்பாக வழிநடத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். கைத்தொழில்துறை மற்றும் நிறுவன மேம்பாட்டு அமைச்சின் கீழ், உள்ளூர் தொழிலதிபர்கள் தங்கள் தொழில்களைக் கட்டியெழுப்ப சரியான திசையில் பயணிப்பதற்கான வழிகாட்டல்கள் செய்யப்படும்.

கைத்தொழில் அமைச்சகத்தின் கீழ் 33 நிறுவனங்களும், தொழில் முயற்சியாண்மை அமைச்சின் கீழ் மேலும் 17 நிறுவனங்களும் உள்ளன. ஆனால், பெரும்பாலான தொழில் வலயங்கள் அரசியல் காரணிகளுக்காக பயன்படுத்தப்பட்டன. இந்த தொழில் வலயங்கள் தேசிய திட்டத்தில் செயல்படாமல் அரசியல் திட்டத்துக்காக செயல்பட்டன. தற்போதைய அரசாங்கம் தேசிய தொழில் திட்டத்தின்படி தொழில் வலயங்கள் உட்பட நாட்டின் ஏனைய தொழில்களைக் கட்டியெழுப்புவதற்கு செயற்பட்டு வருகின்றது. இந்த தேசிய திட்டத்தின் கீழ், தேசிய உற்பத்தியை அதிகரிக்கவும் அதன் மூலம் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கவும்

# மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கிழக்கு ஆளுநர் கலந்துரையாடல்



(கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ள நிலைமைகள் மற்றும் அதன் பாதிப்புக்கள் தொடர்பாகக் கண்காணித்து, ஆராய்வதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னாயக்க மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

வெள்ளிக்கிழமை (29) மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜெஸ்டினா முரளிதரன், உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி ஸ்ரீநாத், ஏ.எல். எம்.ஹிஸ்புல்லா, மற்றும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நவரூபரஞ்சனி முகுந்தன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.சியாத், உட்பட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

இதன் போது, மாவட்டத்தின் பட்டிப்பளை, வெல்லாவெளி, வவுணதீவு, போரதீவுப்பற்று, கிரான், சித்தாண்டி, வாகரை என சகல பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்கள், அவர்களுக்கான போக்குவரத்து, தற்காலிக படகு சேவை, சுகாதாரம், நீர் விநியோகம், அத்தியாவசிய தேவைகள் , மற்றும் அமைக்கப்பட்டுள்ள 56 இடைத்தங்கல் முகாம்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னாயக்க பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அரச அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார். இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக ஆளுநர் 500 உலர் உணவு பொதிகளை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்தார்.

# நீர்ப்பாசனப் பிரதி அமைச்சர் ஆலையடிவேம்பு பிரதேசத்துக்கு விஜயம்

(வி.சுகிர்தகுமார் )

காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க மற்றும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஞ்சுள ரத்நாயக்க ஆகியோர் வியாழக்கிழமை (28) ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தந்தனர்.

கன மழை காரணமாக பாதிக்கப்பட்டு தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் நீர் வழிந்தோடும் பனங்காடு தில்லையாற்றுப் பகுதியினையும் பார்வையிட்டனர்.



இதன்போது பனங்காடு பாலம் புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் முறையான வடிகாலமைப்பு ஏற்படுத்த வேண்டிய தேவையும் பற்றி பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் பிரதி அமைச்சருக்கு எடுத்துரைத்தார்.

# வளிமண்டலத்தில் தூசி துகள்கள் அதிகரிப்பு சுகாதாரத்துக்கு பாதகம்

நாட்டை அண்மித்த கடற்பரப்புகளில் நிலைகொண்ட ஆழமான காற்றமுத்த தாழ்வானது நகர்ந்து செல்வதால் காற்றின் தரக் குறியீடு சற்று எதிர்மறையாக மாறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு உட்பட இலங்கையின் பல பகுதிகளில் காற்றின் தரக் குறியீடு அதிகரித்துள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி அஜித் குணவர்தன தெரிவித்துள்ளார். நாட்டை பாதித்துள்ள சீரற்ற வானிலையுடன் ஏற்பட்டுள்ள இருள் சூழந்த நிலை குறித்து விளக்கமளித்து அவர் இதனை தெரிவித்தார். இந்நாட்டில் வழமையாக காற்றின் தரக் குறியீடு 50 என்ற குறைந்த மதிப்பில் இருப்பதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.ஆனால் அண்மையில் பெய்த கனமழை காரணமாக குறியீட்டெண் உயர்வினால், நாட்டின் பல பகுதிகளில் மூடுபனி போன்ற தூசி நிறைந்த நிலை காணப்படுவதாக அவர் கூறினார். பாதகமான வானிலை காரணமாக வடக்கு மற்றும் உள்நாட்டு எல்லைகளில் உள்ள காற்று மாசுபாடுகள் இந்நாட்டினுள் பிரவேசித்தமை இந்த நிலைமைக்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டினார்.

# அனர்த்த நிலை தொடர்பில் திருகோணமலையில் ஆராய்வு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தின் தற்போதைய வெள்ள பாதிப்பு மற்றும் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் மற்றும் எடுக்கவேண்டிய அவசர மற்றும் நீண்டகால தீர்வுகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சரும்,திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான அருண் ஹேமச்சந்ரா தலைமையில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை(29) நடைபெற்றது. இவ் விசேட கூட்டத்தில் கிராமிய அபிவிருத்தி,சமூகப்பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி உப்பாலி பன்னலகே,வலுசக்தி வளத்துறை அமைச்சர் பொறியியலாளர் குமார ஜயக்கொடி,நீர்ப்பாசனத்துறை மற்றும் காணி பிரதி அமைச்சர் கலாநிதி சுசில் ரணசிங்க,போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குமார குணசேன மாவட்டுப் நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமனகமகே ரொஷான் பிரிய சஞ்ஞன, அரசாங்க அதிபர்,பிரதேச செயலாளர்கள்,பிரதேச சபை செயலாளர்கள்,மாகாண திணைக்களங்களின் செயலாளர்கள் மற்றும் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மன்னார் மாவட்ட நிவாரண நிதியை அரசு துரித கதியில் வழங்க நடவடிக்கை

(வாஸ் கூஞ்ச)

மன்னாரில் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதித் தேவையை, வரலாற்றில் முதன் முறையாகத் துரித கதியில் எமது அரசாங்கமே பூர்த்தி செய்துள்ளதென. கூட்டுறவுப் பிரதியமைச்சரும், வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக்குழு கூட்டத்தில் (29) கலந்து கொண்டு அரசாங்க அதிபர் மற்றும் அனைத்து திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இங்கு மேலும் தெரிவித்த வன்னி மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க, பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உணவு , சுகாதார வசதிகள் மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்குத் தேவையான பணம் அரசாங்கத்திலிருந்து கிடைத்துள்ளதாகவும், ஆனாலும் தினந்தோறும் அனர்த்தங்கள் அதிகமாகி வருவதனால், ஒதுக்கப்பட்டுள்ள பணம் போதாமல் உள்ளதாகவும் , அங்குள்ள மக்களது அத்தியாவசியத் தேவைகளான , உணவு , தண்ணீர் மற்றும் வடிகால்களை திருத்துவதற்கான இயந்திரங்களுக்கு செலவிட அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள பணம் போதாமை காரணமாகவும் மேற்கொண்டு பணிகளைச் செய்ய முடியாமல் இருக்கிறது எனவும் அரசாங்க அதிபர் எமக்குத் தெரிவித்தார். இது தொடர்பாக, நானும் எனது கட்சியைச் சேர்ந்தவர்களும் கலந்துரையாடினோம் , அதன் பின் இது குறித்து போக்குவரத்து , நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்னாயக்கவிடம் தொலைபேசி வழியாக அறிவித்தோம்.

அவர் ஜனாதிபதி செயலகம் , மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருடன் பேசி வெள்ளிக்கிழமை (29) காலை 10 மணிக்கு முன்னர் தேவைப்படும் பணத்தை, மன்னார் அரச அதிபரது அனர்த்தம் தொடர்பான வங்கிக் கணக்குக்கு அனுப்புவதாக உறுதியளித்தார். எனவே வரலாற்றில் முதல் முறையாக உடனடியாக எமது அரசினால் இவ்வளவு வேகமாக நிதித் தேவை நிறைவேற்றப்படுகிறது.

அத்துடன், இவ்வளவு பெரிய தொகைப் பணம் அமைச்சர் பிமல் ரத்னாயக்கவின் செயற்பாட்டினால் உடனடியாகவே கிடைக்கப் பெற்றது. ஜனாதிபதியின் தலைமையில் மக்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் உடனடியாகச் செய்ய எங்கள் அரசு முன்வந்துள்ளது. மக்களை மீள்குடியேற்றுவதற்கான பணிகளை எமது அரசாங்கம் உடனடியாக முன்னெடுத்து வருகிறது . மக்கள் வெகு வேகமாக மீண்டும் தமது வீடுகளில் வாழ்வதற்காகவே நாம் செயற்படுகிறோம் எனத் தெரிவித்தார்.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## ரணிலின் இந்திய காய் நகர்த்தலும் அநுரவும்

இலங்கைத்தீவில் இன நெருக்கடி ஆரம்பிப்பதற்கு முன்னரான காலத்தில் இருந்தே இந்திய - இலங்கை உறவு சுமூகமாக இருந்தது என்று சொல்வதற்கில்லை. இந்தியா தமிழர்களுக்குச் சாதகமான நாடு என்ற உணர்வு கொழும்பை மையமாகக் கொண்ட அனைத்துச் சிங்களக் கட்சிகளுக்கும் இருக்கின்றது. தற்போது அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துள்ள அநுரகுமார திசாநாயக்க அரசாங்கத்துக்கும் அவ்வாறான உணர்வு உண்டு.

தேசிய மக்கள் மக்கள் சக்தியின் மூலக் கொள்கைப் பிரிவு என்று அவதானிக்கப்படும் ஜேவிபி இந்திய எதிர்ப்புத் தன்மை கொண்டது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987 ஆம் ஆண்டு செய்யப்பட்டது முதல் மிகக் கடுமையாக எதிர்த்து வந்தது ஜேவிபி.

இப் பின்னணியில் தற்போது தேசிய மக்கள் சக்தியாக ஆட்சிக்கு வந்துள்ள ஜேவிபி தனது நிழல் செயலணி ஊடாக இந்திய உறவை பலப்படுத்த முற்படுகின்றது. இது ஏற்கனவே எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கு முன்னரே இந்திய, அமெரிக்க நாடுகளுக்குச் சென்றிருந்தார்.

இப்பின்னணியில் அநுரவின் ஆட்சியமைந்த பின்னரான சூழலிலும் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை எதுவாக இருக்கும் என்ற கேள்விகள் பொதுவாக எல்லோரிடமும் எழுந்துள்ளன.

இக் காரண காரியத்துடனேயே புதிய அரசாங்கம் இந்தியாவுடனான உறவை பலப்படுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் அறிவுரை வழங்கியுள்ளார். ரணில் இந்தியாவுக்குச் சென்றுள்ள நிலையில் இவ்வாறு கூறியிருக்கின்றார். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் டிசம்பர் மாதம் இந்தியாவிற்குப் பயணம் செய்யவுள்ள நிலையில் ரணில் புதுடில்லிக்குச் சென்றுள்ளமை அரசியல் - பொருளாதார நோக்கில் கேள்விகளை எழுப்பியுள்ளன.

இலங்கைத் தீவைப் பிரதானப்படுத்தி இந்திய- சீன போட்டியானது மையம் கொள்ள ஆரம்பித்துள்ள நிலையில், அநுரவின் அரசாங்கத்தை ரணில் பரீட்சித்துப் பார்க்கின்றார். அதாவது, அநுர அரசாங்கம் இந்தியாவுடன் நெருக்கமாகப் பயணிக்கப் போகின்றதா அல்லது சீனாவுடன் பயணிக்கப் போகின்றதா என்பதே ரணிலின் எதிர்பார்ப்பாக உள்ளது.

ரணிலின் அரசியல் அணுகுமுறை என்பது ஜே.ஆர்.ஜயவர்த்தன கையாண்ட இராஜதந்திரத்தை ஒத்தது. அதே அணுகுமுறையை தான் 1994 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்த சந்திரிகாவும் கையாண்டிருந்தார். 2005 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரை பதவியில் இருந்த மகிந்த ராஜபக்சவும் இந்தியாவுடன் இணைந்துதான் பயணித்திருந்தார். ஆனால், 2015 இலிருந்து 2020 வரை பதவியில் இருந்த மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் இந்தியாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்ததாகக் கூற முடியாது.

இங்கே வேடிக்கை என்னவென்றால், மைத்திரி ஜனாதிபதியாக இருந்த நிலையில் ரணில் பிரதமராக பதவி வகித்திருந்தார். அப்போது இந்திய - இலங்கை உறவில் விரிசல் ஏற்படுவதற்கு ரணில் கையாண்ட அணுகுமுறையும் ஒரு காரணம் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

ஆனால், இப்போது அநுரகுமாரவின் அரசாங்கத்தை ரணில் பரிசோதனைக்கு உட்படுத்துகிறார். ஜேவிபியின் இந்திய எதிர்ப்பை தெரிந்த பின்னணியில் ரணில் அவ்வாறு பரிசோதித்தாலும், பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்திய மற்றும் மேற்கு நாடுகளைக் கையாளக்கூடிய ஆற்றல் கொண்டவர்.

ஹரிணி தொடர்பாக ஜேவிபிக்கு அதிருப்திகள் இருந்தாலும் தற்போது தேசிய மக்கள் சக்தியின் வெளித்தோற்றத்துக்கு குறிப்பாக இந்திய மற்றும் மேற்கு நாடுகளை கையாளக்கூடிய ஒருவர் ஹரிணிதான் என்ற அடிப்படையில், ரணில் போன்றவர்கள் விடுக்கும் சவால்களை அநுரகுமார முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆகவே இந்தியாவும், சீனாவும் இலங்கையை இன்னும் சற்று அதிகமாக உற்று நோக்க ஆரம்பித்துள்ள சூழலில் ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய அரசியல் காய்நகர்த்தல்களை ஆரம்பித்திருக்கிறார் என்பது பகிரங்கமாகின்றது.

ஆட்சிக்கு வந்து முதலாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்குச் செல்லவுள்ளார் அநுரகுமார திசாநாயக்க. அதன் பின்னர், இந்தியா அதிக ஈடுபாட்டை கொண்ட நகர்வுகளை இலங்கையில் மேற்கொள்ளும் என்றொரு எதிர்பார்ப்பு தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளது.

ஆனால், காலங்காலமாக மாறி மாறி ஆட்சியில் இருந்து வந்த பழம் பெரும் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் 2016 இல் மகிந்த ராஜபக்ச உருவாக்கிய ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனக் கட்சி ஆகியன அநுரவின் ஆட்சியில் இலங்கை வெளியுறவுக் கொள்கை ஆபத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று எதிர்பார்க்கின்றன.

இக்கட்சிகளைப் பொறுத்தவரை 1994 ஆம் ஆண்டில் இருந்து எதிர்க்கட்சியில் இருந்த ஜேவிபி தற்போது தேசிய மக்கள் சக்தியாக மாறியிருந்தாலும் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவர்கள் இந்தியா தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் பற்றி வெளியிட்ட அபாயகரமான கருத்துக்களை தற்போது மீட்டல் செய்து ஜேவிபியின் உண்மை விம்பம் இதுதான் என்று பகிரங்கப்படுத்த முற்படுகிறார்கள். அவர்களின் விரும்பமும் அதுதான்.

அதனையே இந்தியாவுடன் உறவைப் பேண வேண்டும் என்று ரணில் வெளியிட்ட கருத்து எடுத்துக் காட்டுகின்றது. சந்திரிகா, மகிந்த மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் மௌனமாக இருந்தாலும் மறுபுறம் ரணில் அவ்வாறு கருத்திடுவதன் ஊடாக தன்னுடைய அரசியல் புலமையை வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

அதாவது, கடந்த இரண்டு வருடங்களாக தான் ஜனாதிபதியாக இருந்தபோது மேற்கொண்ட பொருளாதார செயற்திட்டங்களை அநுர அப்படியே கையாளுகின்றார் என்பதே ரணிலின் வாதம். சஜித் பிரேமதாசவும் அது பற்றிச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, எதிர்க்கட்சியில் இருந்தபோது ஒரு கதை ஆட்சிக்கு வந்த பின்னர் திட்டிக் கவிழ்த்த முன்னைய அரசாங்கத்தின் அரசியல் - பொருளாதார அணுகுமுறைகளையே அநுர கையாள்கிறார் என்பதை மக்கள் அறிய வேண்டும் என்பதே ரணிலின் ஆவல் என கருத முடிகின்றது.

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர்களுக்கான கலைக் களங்கள்..



### நாடக விழாவும் சர்வதேச குறுந்திரைப்பட விழாவும்

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்கள் இன்றிமையாத பிரிவினராகின்றனர். அவ்வாறு பெறுமதி மிகு இளைஞர்களின் திறமைகளை இனம் கண்டு அவற்றை விருத்திசெய்து தலைமைத்துவ பண்பினை மேம்படுத்த வேண்டியது அந்தந்த காலக்கட்டங்களின் அரசின் தலையாய கடமைகளில் ஒன்றாகின்றது. அதற்கமைய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர்களை முறையாக வழிநடாத்த வேண்டிய, பொறுப்புக்கூற வேண்டிய அரச நிறுவனம் என்ற வகையில் இந்நாட்டின் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்த கல்வி, விளையாட்டு, தொழிநுட்பம், தொழிற்பயிற்சி, முயற்சியான்மை, விவசாயம் மற்றும் கலை,கலாசாரம் முதலிய விடயங்களில் கவனம் செலுத்தி சிறப்பான பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அவற்றில் இம்மாதங்களில் நிறைவுக்கு வரும் தேசிய இளைஞர் விருதுப் போட்டிகள் மற்றும் சர்வதேச இளைஞர் திரைப்பட விழா என்பன முக்கிய இடம் பெறுகின்றன.

1969ஆம் ஆண்டின் 69ஆம் இலக்கத்தைக் கொண்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாப்பில், குறிப்படப்பட்டுள்ள இம்மன்றத்தின் தோற்றத்திற்கான 14 நோக்கங்களில் ஆறாவது(ஊ) நோக்கமாகிய “இளைஞர் பரம்பரையினரின் கலாசார மற்றும் கலைத்திறமைகளுக்கான செயற்பாடுகளை ஊக்குவித்தல் எனும் நோக்கத்திற்கமைய பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் தேசிய இளைஞர் நாடக விழா மற்றும் சர்வதேச இளைஞர் திரைப்பட விழா என்பன முக்கிய இடம்பெறுகின்றன. முதலாவது தேசிய இளைஞர் நாடக விழா 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அதனைத்தொடர்ந்து இன்றுவரையிலும் நாடு பூராகவும் இலைமறை காய்களாக இருக்கும் இளம் நாடகக் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்ந்து களம் அமைத்துக் கொடுக்கும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படும் தேசிய இளைஞர் நாடக விழா இம்முறை 43 வது முறையாகவும் நடாத்தப்படுகின்றது. இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடாத்தப்படும் இவ்விழாவானது இம்முறை இரு பிரிவுகளாக இரண்டு கால கட்டங்களில் நடாத்தப்படுகின்றமையும் விஷேட அம்சமாகும்.

அதன் அடிப்படையில் நெடு நாடகங்கள் நவம்பர் மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மருதானை டவர் அரங்கிலும் குறுநாடகங்கள் டிசம்பர் மாதம் 26ஆம் திகதியிலிருந்து 31ஆம் திகதி வரை லும்பினி அரங்கிலும்: பி.ப 6.00 மணிக்கு மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நாடகப் போட்டியின் முதலாவது சுற்றுக்காக நாடுபூராவும் இருக்கும் 15-35 வயது வரையான இளம் கலைஞர்களினால் அனுப்பப்பட்ட நாடகப்பிரதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிறந்த பிரதிகளைக்கொண்ட நாடகங்கள் இரண்டாம் சுற்றுக்காக மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டிகளில் மேடையேற்றப்பட்டதுடன் அவற்றில் சிறந்த நாடகப்பண்புகளைக் கொண்ட நாடகங்கள் இந்நாடக விழாவின் போது மேடையேற்றப்படவுள்ளன.

மொத்தமாக 6 நெடுநாடகங்களும் 24 குறுநாடகங்களும் இறுதி சுற்றுக்காக மேடையேற்றப்பட்டதுடன் நவம்பர் மாதம் 25ஆம் திகதி குமாரவேலு யசோத்குமாரின் “சந்தர்ப்பம்” மற்றும் 27ஆம் திகதி பரமநாதன் நிஷாந்தனின் “ஊசி” ஆகிய இரு நெடுநாடகங்கள் மேடையேற்றப்பட்டன. அத்துடன் டிசம்பர் 26ஆம் திகதியிலிருந்து லும்பினி அரங்கில் ஆரம்பமாகும். குறு நாடகப்போட்டிக்காக பாத்திமா இஷாராவின் “வீரனின் மனைவி”, பாஸ்கர் கிருஷ்ணனின் “மடையர்”, கிருஷ்ணன் ஹமீஷா தேவியின் “மாங்கல்யம்” அகிலேஸ்வரன் கிருஸ்ணராஜின் “இளவந்திகை” இராமச்சந்திரன் திருக்குமரனின் “மறுதழிப்பு“ இ இராமலிங்கம் ஸ்ரீகாந்தின் “மயிர்கடவுள்” ஆகிய நாடகங்கள் முறையே 26 தொடக்கம் 31 ஆம் திகதி வரை மேடையேற்றப்படவுள்ளன. 43 தேசிய இளைஞர் நாடக விழாவின் போது போட்டிக்காக மேடையேற்றப்படும் இந்நாடகங்கள் அனைத்தையும் கண்டு இரசிப்பதற்கான அனுமதியை இலவசமாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.இவற்றில் வெற்றி பெறும் இளம் கலைஞர்களுக்கும் ஏனைய கலை இலக்கியப் போட்களில் தேசிய மட்டதில் வெற்றிபெறுபவர்களுக்கும் வருடாந்த தேசிய இளைஞர் விருது வழங்கல் விழாவின் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**சுப்பையா சிவராஜா,**
அறிவிப்பாளர்.
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

## லெபனானை தொடர்ந்து காசாவிலும் போர் நிறுத்தம்

### அமெரிக்கா பெரும் நம்பிக்கை



வாஷிங்டன்: அதிபர் ஜோ பைடனின் பதவிக் காலம் வரும் ஜனவரி மாதம் முடிவதற்குள், காசாவில் போர் நிறுத்தம் ஏற்படும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவத்துக்கும் பாலஸ்தீனத்தின் காசா பகுதியை சேர்ந்த ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் கடந்த ஆண்டு அக்டோபர் முதல் போர் நடந்து வருகிறது. காசா பகுதியில் இதுவரை 44,282 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த சூழலில் எகிப்து அரசின் சமரசத் தின் பேரில் இஸ்ரேல் - காசா இடையே போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக எகிப்து அரசின் உயர்நிலைக் குழு இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் நேற்று முக்கிய பேச்சுவார்த்தை நடத்தியது.

கடந்த ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி ஹமாஸ் தீவிரவாதிகள் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலில் 254 இஸ்ரேலியர்கள் பிணைக் கைதியாக பிடித்துச் செல்லப்பட்டனர். இதில் 154 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னமும் 100 பேர் ஹமாஸ் தீவிரவாதிகளின் பிடியில் உள்ளனர். அவர்களை விடுவிக்க, இஸ்ரேல் சிறைகளில் உள்ள 1,000 ஹமாஸ் தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இவை உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இதுகுறித்து ஹமாஸ் வட்டாரங்கள் கூறும்போது, “லெபனான் உடன் எந்த நிபந்தனையும் இன்றி இஸ்ரேல் அரசு போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொண்டிருக்கிறது. காசாவிலும் போர் நிறுத்தத்தை அமல்படுத்த விரும்புகிறோம். ஆனால், இஸ்ரேல் அரசு போர் நிறுத்தத்தை விரும்பவில்லை” என்று தெரிவித்தன.

இதுகுறித்து அமெரிக்க அரசு வட்டாரங்கள் கூறும்போது, “தற்போதைய அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் பதவிக் காலம் வரும் ஜனவரியில் முடிவடைகிறது. அதற்குள் காசாவில் போர் நிறுத்தம் அமலாகும். இதுதொடர்பாக இஸ்ரேல் அரசு - காசா நிர்வாகம் இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும்” என்று தெரிவித்தன. இதற்கிடையில், கடந்த ஆண்டு அக்டோபர் முதல் இஸ்ரேல் ராணுவத்துக்கும், லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகளுக்கும் இடையே போர் நீடித்து வந்தது. கடந்த செப்டம்பர் 27-ம் தேதி லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார். இதைத்தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே போர் தீவிரமடைந்தது.

இந்த சூழலில் அமெரிக்கா, பிரான்ஸின் சமரச முயற்சியால் இஸ்ரேலுக்கும், லெபனானுக்கும் இடையே நேற்று முன்தினம் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. இதுகுறித்து இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் கூறும்போது, “எல்லைப் பகுதிகளில் இருந்து 40 கி.மீ. தொலைவுக்கு ஹமாஸ் தீவிரவாதிகள் பின்வாங்க வேண்டும். அந்த பகுதிகளில் ஐ.நா. அமைதிப் படை வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். லெபனானில் இருந்து இஸ்ரேல் படைகள் முழுமையாக வாபஸ் பெறப்படும். 28-ம் தேதி அதிகாலை முதல்போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ளது. எனினும், லெபனானில் இருந்து இஸ்ரேல் படைகள் முழுமையாக வெளியேற சில நாட்கள் ஆகலாம். இந்த போர் நிறுத்தம் 60 நாட்கள் அமலில் இருக்கும்” என்று தெரிவித்தன.



இதுகுறித்து லெபனான் அரசு வட்டாரங்கள் கூறும்போது, “போர் நிறுத்தம் அமலுக்கு வந்திருப்பதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர். பெய்ரூட்டில் பெரும்பான்மையான வீடுகள் இடிந்து தரைமட்டமாகி இருப்பதால் புதிய வீடுகளை கட்ட சர்வதேச நாடுகளின் உதவியை எதிர்பார்க்கிறோம்” என்று தெரிவித்தன.

இஸ்ரேல் ட்ரோன் தாக்குதல்: தெற்கு லெபனான் பகுதியில் இஸ்ரேல் ராணுவ வீரர்கள் முகாமிட்டு உள்ளனர். போர் நிறுத்தம் அமலுக்கு வந்த நிலையில் அப்பகுதியில் சில மர்மநபர்கள் நேற்று வாகனத்தில் ஆயுதங்களுடன் வந்தனர். அவர்களை குறிவைத்து இஸ்ரேல் ராணுவம் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியது. இதில் 2 பேர் படுகாயம் அடைந்தனர்.

**நன்றி இந்து**



ஏ.எல்.எம்.ஷினாஸ்
-மருதமுனை

# மாவடிப்பள்ளியில் பறிபோன ஆறு உயிர்கள்

## சோகமும் கதையும்

அம்பாறை மாவட்டம் மாவடிப்பள்ளி பாலத்தில் உழவு இயந்திரம் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டதில் நிந்தவூர் ஹாஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்கள் உட்பட எட்டு பேர் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டு காவு கொள்ளப்பட்ட சம்பவம் முழு கிழக்கு பிராந்தியத்தையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த 25ம் திகதி பெய்த தொடர் அடை மழை காரணமாக மாவட்டத்தின் தாழ்நில பிரதேசங்களில் வெள்ள நீர் பெருக்கெடுத்தோடியதுடன், வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக பொதுமக்களை பாதுகாப்பாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்களை வெளியிட்டது.

இந் நிலையில் நிந்தவூர் ஹாசிபுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்கள் விடுமுறையில் வீடு சென்ற போது அவர்களை ஏற்றிச் சென்ற ரெக்டர் ரக உழவு இயந்திரம் பாலத்தில் குடைசாய்ந்து வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டதால் இந்த பாரிய அனர்த்தம் நிகழ்த்து.

இதனையடுத்து உடனடியாக தேடும் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் பொலிசார் சிவில் அமைப்புக்குள் இரவோடு இரவாக ஐந்து மாணவர்களை உயிருடன் மீட்டெடுத்தனர்.

மூன்று தினங்களுக்கு மேலாக இரவு – பகல் பாராது பல சிரமங்களுக்கு மத்தியில் கடற்படையினரின் உதவியோடு சாய்ந்தமருது ஜனா ஸா நலன்புரி அமைப்பு, மாளிகை காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், பிரதேச செயலகங்கள், காரைதீவு கோவில் நிர்வாகத்தினர், காரைதீவு பிரதேச மக்கள், சம்மாந்துறை பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் என பலரது ஒத்துழைப்போடு தேடும் பணிகள் தீவிர படுத்தப்பட்டிருந்தன.

இதுவரை மத்ரஸா மாணவர்களுடைய ஐந்து ஜனாஸாக்கள், உளவு இயந்திரத்தின் சாரதி, அதில் பயணம் செய்த நபர் ஒருவர் என ஏழு பேருடைய சடலங்கள் (ஜனாஸாக்கள்) வெள்ள நீரிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு மாணவனை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நீரில் மூழ்கிய நிலையில் ஜனா ஸாக்களாக மீட்கப்பட்டவர்களின் விபரம்

மதரஸா மாணவர்கள்

01. பாறூக் முஹம்மட் நாஸிக் (15) மலையடி கிராமம், சம்மாந்துறை

02. முஹம்மட் ஆஸிக் முஹம்மட் அப்னான் (15) மலையடி கிராமம், சம்மாந்துறை

03. பாறுக் முஹம்மட் சஹ்றான் – மலையடி கிராமம், சம்மாந்துறை

04. முஹம்மட் ஜெசீல் முஹம்மட் சாதிர் (17) – உடங்கா, சம்மாந்துறை

05. அலியார் முஹம்மது யாசின் (12) சென்னல் கிராமம் –சம்மாந்துறை

06. பஸீர் முஹம்மட் மின்ஹான் (15) மலையா கிராமம், சம்மாந்துறை (தற்போது வரை தேடப்பட்டு வருகின்றவர்)

இவர்களுடன்

07. எம்.ஏ.எம்.அக்கீத் (18) சாய்ந்தமருது – 14– உழவு (இயந்திசத்தின் சாரதி)

08.ஏ.ஆர்.அஜ்மீர் (28) –சம்மாந்துறை

உழவு இயந்திரத்தில் பயணம் செய்தவர்.

இதே நேரம் சம்பவ இடத்திற்கு

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம, மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன், மாவட்டத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயர் அதிகாரிகள், விசேட அதிரடிப்படையின், கடற்படையினர், இராணுவத்தினர், பிரதேச செயலாளர்கள், ஜனாஸா மீட்பு குழுவினர் என பலரும் வருகை தந்து நிலைமைகளை கண்டறிந்ததுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்ட இரு மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானம் ஆகாய வழியாகவும் வெள்ள அனர்த்தம் தொடர்பான கண்காணிப்பு பணிகளை முன்னெடுத்தனர். இந்நிலையில் நிந்தவூர் ஹாசிபுல் உலூம் அரபுக் கல் லூரி பொறுப்பு அதிபர் தாஹிர் மௌலவி ஆசிரியர் நஸீம் மௌலவி ஆகியோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாவடிப்பள்ளி விபத்தின் ஆறாத்துயரால் நிந்தவூர், சம்மாந்துறை உட்பட பல ஊர்களிலும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருக்கின்றன. இதேவேளை பல சமூக சிவில் அமைப்புகள் தமது ஆழ்ந்த அனுதாபங்களையும் வெளியிட்டுள்ளனர். எதிர்பாராத விதத்தில் நடைபெற்ற இந்த சம்பவம் தமக்கு பேர் அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அரபுக் கல்லூரி யின் நிர்வாகத்தினர் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். அதில், குறித்த மாணவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு மாணவர்களின் பெற்றோரோடு கலந்துரையாடி தனியார் வாகனம் ஒன்றை தயார்படுத்தி அனுப்பிய போதிலும் மாவடிப்பள்ளி வெள்ளத்தில் வாகனம் செல்ல முடியாத நிலையில் அவர்கள் உழவு இயந்திரத்திற்கு மாற்றப்பட்டு பயணித்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் மத்ரஸா நிர்வாகத்தினர், கற்பிக்கும் ஆசிரியர்கள் உட்பட நாம் எல்லோரும் ஆராத் துயரத்தில் இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்

சீரற்ற காலநிலையின் இக்கட்டில் துயருற்றிருந்த மக்களுக்கு மாவடிப்பள்ளி ரெக்டர் விபத்து மிகப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. தங்கள் பிள்ளைகளைப் பொறுப்பேற்க அக்கரையில் உறவினர்கள் பார்த்திருக்க பிள்ளைகள் நீரில் அடித்துச் செல்லப்பட்ட துயரச் சம்பவம் இலகுவில் ஆறுதல்படுத்திவிட முடியாதொன்றாகும்.

இறை நாட்டத்தினை யாராலும் உணரவும் முடியாது. அவ்வகையில் அதனைப் பொருந்திக் கொள்வதே மனதுக்கு ஆறுதலளிக்கும் கைங்கரியமாகும்.

எது எவ்வாறானாலும் அனர்த்தங்களின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் இது போன்ற பல்வேறு சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் பதிவாகி இருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாமல் இருக்க அதிகாரத்திலுள்ள அரசியல் வாதிகள், சிவில் மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து பாதுகாப்பான பாலம் ஒன்றினை அமைப்பதற்கான செயற்பாட்டினை நோக்கி நகர வேண்டிய அவசர தேவைப்பட்டுள்ளதாக சகலரும் உணர வேண்டும்.









**மூன்று தினங்களுக்கு மேலாக இரவு - பகல் பாராது பல சிரமங்களுக்கு மத்தியில் கடற்படையினரின் உதவியோடு சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி அமைப்பு, மாளிகைகாடு ஜனாஸா நலன்புரி அமைப்பு, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், பிரதேச செயலகங்கள், காரைதீவு கோவில் நிர்வாகத்தினர், காரைதீவு பிரதேச மக்கள், சம்மாந்துறை பொதுமக்கள், சிவில் சமூக அமைப்புக்கள் என பலரது ஒத்துழைப்போடு தேடும் பணிகள் தீவிர படுத்தப்பட்டிருந்தன.**








# இயற்கை இடரும் வரவிருக்கும் மார்கழியும்!



(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

**உலக நாடுகளிடையே சமூகங்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளில் ஒன்றாக இப்போது இயற்கை இடர் மேலெழுந்து நிற்கிறது.**



அபாயகரமான அளவுக்கு இயற்கை இடர்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. எல்லா நாடுகளும் இயற்கை அழிவினால் சிக்குண்டு மிகவும் மோசமான நிலையில் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டுள்ளன.

வெள்ளப் பெருக்கு, வறட்சி, மண்சரிவு, சூறாவளி, சுனாமி, என்பன எமது நாட்டில் வாழும் மக்களுக்கு ஒரு புதிய அனுபவம் அல்ல. ஆனாலும், இவற்றை எதிர்கொள்வதற்கான சரியான திட்டமிடலுடன் கூடிய முகாமைத்துவம் செயற்படவில்லை என்பதுதான் அதிருப்திகளாக நிலவுகிறது.

2004ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமியின் பின்னர் இலங்கையில் இடர் முகாமைத்துவத்தின் அவசியம் உணரப்பட்டு நாடாளுமன்றத்தில் 2005ம் ஆண்டின் 13ம் இலக்க பேரழிவுச் சட்டம் ஃ இடர் முகாமைத்துவ சட்டம் உருவாக்கப்பட்டு அதன் பின்னர் தேசிய இடர் முகாமைத்துவ பேரவை ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது .

இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படுகின்ற இடர் அபாயங்களைக் கண்டறிந்து சமூகத்திலும், தேசத்திலும் பாதுகாப்பு பயன்பாடு ஒன்றை உருவாக்கி பாரிய அளவில் சமூகத்தில் நின்று நிலைக்கக் கூடிய அபிவிருத்தியை மேற்கொள்ளல் வேண்டும் என்பதே இதன்நோக்காகும்.

இருப்பினும் உள்ளூர், பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் உரிய பதில் இயக்க முறைமைச் செயற்பாட்டுத் திட்டங்கள் இல்லாமையால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட முகாமைத்துவ முன்னேற்பாடுகளிலும், அபிவிருத்தி வேலைத்திட்டங்களிலும் பல சிக்கல்கள் ஏற்பட்டன.

எவ்வாறெனில், குறிப்பாக நிவாரணம், புனர்நிர்மாணம், இடர் தவிர்ப்பு போன்றவற்றை சரிவர முன்னெடுத்துச் செல்ல முடியாமல் போய்விட்டது.

இதன் அடிப்படையில் மேற்கூறப்பட்ட குறைபாடுகளை எதிர் காலத்தில் நிவர்த்தி செய்து இடர்களிலிருந்து பாதுகாப்புப் பெற வேண்டும் என்ற நோக்குடன் அரசாங்கம் சில முகாமைத்துவ வேலைத் திட்டங்களை முன் வைத்துள்ளது. அவற்றுள் முக்கியமானவை :

தகவல் முகாமைத்துவம், நீண்டகால இடர்க் குறைப்பு, முன் கூட்டியே எதிர்வு கூறல், தகவல் பரப்புதல், இடர் இடம்பெறுகின்றபோது அதிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கை, அவசர முகாமைத்துவம், இடருக்குப் பின்னரான அவசர உதவி என்பனவற்றை உள்ளூர், பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் நடைமுறைப் படுத்துவதற்காக பல்வேறுபட்ட இடர் முகாமைத்துவ, முன் ஆயத்த வேலைத் திட்டங்களை அரசாங்கம் மேற்கொண்டு வந்துள்ளது.

இடர் முகாமைத்துவ முன் ஆயத்த வேலைத்திட்டங்கள் தற்போது கிராம மட்டத்திலும் நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கிராமத்தில் உள்ள மக்களுக்கு இடர்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்துதல் வேண்டும், கிராம மக்களால் தங்களுடைய கிராமத்தின் வரைபடம் வரையப்படுதல் வேண்டும், குறிப்பிட்ட சில இளைஞர், யுவதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும், அத்துடன் இடராயத்தங்கள் சம்பந்தமாக ஆறு வகையான செயற்பாடுகளைக் கொண்டு இயங்குவதற்கு 15 -25 அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

அபாய முன் அறிவிப்புக்குழு, தேடுதல் காப்பாற்றுதல், அப்புறப்படுத்துதலுக்கான குழு, முகாம் அமைத்தல் மற்றும் நிவாரண முகாமைத்துவக் குழு, சுகாதாரம் மற்றும் முதலுதவிக் குழு, நீர் மற்றும் உணவுக்கான குழு, மேற்பார்வை மற்றும் ரோந்து நடவடிக்கைக் குழு போன்ற ஆறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி கிராம மட்டத்தில் சிறந்த இடர் முகாமைத்துவத்தை உருவாக்குதல் என்பவை இவற்றில் உள்ளடங்கும்.

இடம் பெயர்ந்து செல்லும்போது கவனிக்க வேண்டியவை

ஏற்கனவே பாதுகாப்பான இடமாக தெரிவு செய்யப்பட்ட இடத்தை நோக்கிச் செல்லவேண்டும், வீட்டின் மின் இணைப்பைத் துண்டிக்கவேண்டும், சான்றிதழ்கள், காணி உறுதிகள், வங்கிக்கணக்குப் புத்தகம், அடையாள அட்டை, கடவுச் சீட்டு, தங்க ஆபரணங்கள், மருந்துப் பொருட்கள், குழந்தைகள் கர்ப்ணித்தாய்மார், வயோதிபர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை கொண்டு செல்லுதலும் வேண்டும்.

இடம் பெயர்ந்து எங்காவது கூட்டமாகத் தங்கியிருக்க நேர்ந்தால் தொற்று நோய்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. எனவே அதற்கு முன் ஏற்பாடாக கொதித்தாறிய நீரைப் பருகவும் வேண்டும்.

நீரில் நனைந்த உணவுகளை உட்கொள்வதைத் தவிர்த்தல் நல்லது.

அடித்துச் செல்லும் நீருக்கருகில் நடந்தோ, வாகனத்திலே செல்லக்கூடாது.

கீழே விழுந்திருக்கும் மின் கம்பத்திற்கு அருகில் செல்லவும் கூடாது.

**இடம் பெயர்ந்து செல்லும் போது கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டிய பொருட்கள்.**

நாளாந்த உபயேகத்திற்கான மருந்துப் பொருட்கள்.

வயது முதிர்ந்தவர்கள், வலது குறைந்தவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள். (ஊன்று கோல்)

கற்பிணித்தாய், சிறு குழந்தைகளுக்குத் தேவையான பொருட்கள் (பால் மா, மருந்து)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ், காணி உறுதி, அடையாள அட்டை, கடவுச் சீட்டு போன்ற முக்கிய ஆவணங்கள், தங்க ஆபரணங்கள் ஏனைய பெறுமதியான பொருட்கள், பணம், அத்தியாவசிய ஆடை, அணிகலன்கள்.

அநேகமான இடர்களில் பலரின் உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன. உடமை அழிவுகள் ஏற்படுகின்றன.

ஆகவே, நாங்கள் எப்போதும் இடர்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும், பக்கத்திலுள்ள உற்றார் உறவினர், நண்பர்களுக்கும் உதவி செய்யக் கூடிய மன நிலையினை உடையவராகவும் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்வதும் சிறந்த ஒரு விடயமாகும். இதனால் பாதிப்புக்களை குறைந்தளவில் எதிர்கொள்ளலாம்.

இவ்விதமான இடர்களைச் சந்தித்த மக்களை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசாங்க அதிகாரிகள் உட்பட சமூகத்திலுள்ள எல்லோருக்கும் உண்டு. பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, குடிநீர் உட்பட அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

பாதிக்கப்பட்ட சமூகத்தினரை மீண்டும் பழைய நிலைக்கு நிலைக்குக் கொண்டு வந்து அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பதுடன், அவர்களது வாழ்வாதாரத்திற்கும் வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு சமூகத்திலுள்ள அனைவருக்கும் உண்டு.

ஒரு நாடோ அல்லது கிராமமோ அபிவிருத்தியில் சென்று கொண்டுள்ளபோது இயற்கை அல்லது செயற்கை அழிவுகளை தொடர்ச்சியாக எதிர் நோக்குவதனால் சலிப்படைந்து போவதுடன், மன உழைச்சலுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

இடர்கள் எல்லா அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பாரதூரமான அச்சுறுத்தல்களை நிலைக்கச் செய்கின்றது. அழிவுகள் மரணத்தையும், ஏனைய சேதங்களையும் விளைவிப்பதோடு சில பௌதீகச் சூழல் பொருளாதார நாசங்களையும் உண்டுபண்ணுகின்றன. அவை சமூக உறுதிப்பாட்டினை வலுவிழக்கச் செய்வதோடு இடர்களை எதிர் கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிப்படைந்து மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவது மிகவும் கடினமானதொன்றாக மாறிவிட்டிருப்பதையே கடந்த கால அனுபவங்களில் கண்டிருக்கின்றோம்.

ஏற்கெனவே அரிதாகிப் போயுள்ள உள்ளூர் வளங்களை அவசரத் தேவைகளுக்குத் திசை திருப்பி அபிவிருத்தி செய்வது பெரும் சவால் நிறைந்த ஒன்றாகவும் உள்ளது.

தனிமனித வாழ்விலும், எந்தவொரு அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் இடர் முகாமைத்துவம் என்பது முக்கிய இடத்தில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டால் ஏற்படக்கூடிய எல்லா வகையான இடர்களையும் கூடியபட்சம் தவிர்க்க முடியும்.

பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள், துரித பொருளாதார வளர்ச்சிக்கான முன்னெடுப்புக்கள், மற்றும் இன்னபிற மனித நடவடிக்கைகளினால் உண்டான செயற்கை மாற்றங்களினால் இப்பொழுது இயற்கையின் காலநிலைச் சமநிலையில் தளர்வு ஏற்பட்டு அது பல பாதிப்புக்களைத் தந்து கொண்டிருக்கின்றது.

இது உலகளாவிய சவாலாக உருவெடுத்திருக்கின்ற தற்போதைய சூழ்நிலையில் அதனைத் தணிப்பதற்கும் அந்த சவாலை இயற்கையோடு ஒத்திசைவானதாகவும் நீடித்து நிலைக்கக் கூடியதாக மாற்றுவதற்கும் பிரதேச, மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்ட ஒத்திசைவுத் திட்டங்கள் வேண்டும்.

இதனை ஒரு சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்தி தோதான, காலநிலை மாற்றத்திற்கு ஈடுகொடுக்கக் கூடிய திட்டங்களை முன்வைத்து அவற்றை அமுல்படுத்த வேண்டும்.

காலநிலை மாற்றத்தைப் பற்றிக் கரிசனை கொள்வது மற்றெல்லாத் திட்டங்களையும் விட கரிசனைக்குரிய, முன்னுரிமைப்படுத்தக் கூடிய விடயமாக மாறியிருக்கின்றது.

பொருளாதார அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, உணவுற்பத்தி, குடிநீர், நீர்ப்பாசனம், சுகாதாரம் சமூக ஸ்திரத்தன்மை என்பவனற்றில் காலநிலையின் தாக்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிக பாதிப்புக்களைச் செயலுத்துவதாகக் கண்டறியப்பட்டு உலகம் அதன்பால் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

சமீப காலமாக இலங்கையிலும் எதிர்பாராத காலநிலை மாற்றங்களால் இடர்கள் அதிகரித்து ஈடுசெய்ய முடியாத இழப்புக்களை ஏற்படுத்தி வருவதை நாமறிவோம்.

**உள்ளூர் வளங்களை அவசரத் தேவைகளுக்குத் திசை திருப்பி அபிவிருத்தி செய்வது பெரும் சவால் நிறைந்த ஒன்றாகவும் உள்ளது..!**










# ஆசிரியர் இடமாற்ற பட்டியல் வெளியானது

## 147 பேருக்கு இடமாற்றம்; 25 பேரின் விண்ணப்பம் நிராகரிப்பு

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினால் 2025ம் ஆண்டுக்கான வருடாந்த ஆசிரியர் இடமாற்றப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கங்களின் இடமாற்ற சபை பிரதிநிதிகளின் சிபாரிசுக்கமைய மேற்படி இடமாற்றப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விப்பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடமாற்றப்பட்டியலுக்கமைய 172 ஆசிரியர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவர்களுள் 25 ஆசிரியர்களுக்கு பொருத்தமான பதிலீடு இல்லாமை காரணமாக இடமாற்றம் வழங்க முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள இடமாற்றப் பட்டியலுக்கமைய ஒரு கல்வி வலயத்தில் தொடர்ச்சியாக ஆறுவருடமும் அதற்கு மேலும் கடமையாற்றிய ஆசிரியர்கள் இடமாற்றம் கோரிய வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சகல இடமாற்றங்களும் 2025ம் ஆண்டின் புதிய கல்வியாண்டு ஆரம்பமாகும் தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமெனவும் இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளை டிசம்பர் 04ம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளருக்கூடாக மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதே வேளை, கிழக்கு மாகாண வலய மட்டத்தில் ஒரு பாடசாலையில் 08 வருடமும் அதற்கு மேலும் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான 2025ம் வருடத்திற்கான இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகள் வலயக் கல்விப்பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# கடல் அலைக்கு இரையான கடற்கரைப் பூங்கா



(கியாஸ் ஷாபி)

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, கடற்கரைப் பூங்கா கடலலையினால் ஒரு பகுதி அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

மிகுதியாக உள்ள பகுதியை, பாதுகாக்க வேண்டும் என்றால், கடல் அரிப்பை கட்டுப்படுத்த வேண்டும். தவறினால் இன்னும் சில மாதங்களில் முழுமையாக கடல் அலைக்கு பூங்கா இரையாகி விடும் என பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

30 வருட கால யுத்தத்திற்கு பின்னர் மட்டக்களப்பு – திருகோணமலை A15 2012 ஆண்டு திறக்கப்பட்டது. வீதி திறக்கப்பட்ட பின்னர், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு செல்லும் நாளாந்த போக்குவரத்து பயணிகளுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் இந்தப் பூங்கா ஓய்வெடுத்து, மகிழ்வை அனுபவித்துச் செல்லும் ஒரு முக்கியமான இடமாக இருந்து வருகின்றது. இந்த நிலையில், கடந்த ஒரு வாரங்களுக்கு மேலாக, ஏற்பட்ட கன மழையும், கடல் அலையின் சீற்றமும் இந்தப் துயரமான பாதிப்பினை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில், வெளிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்ன சேகர கடலரிப்பால் பாதிக்கப்பட்ட இந்தப் பூங்காவை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது, நகர சபை செயலாளர் எம். கே. அனீஸ் இந்தப் பூங்காவின் அவசியம் குறித்து, முழுமையாக இவர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

நிதி பற்றாக்குறையின் நிமிர்த்தம், உடனடியாக இதனை புனரமைக்க முடியாவிட்டாலும், அடுத்த கட்டத்தில் இந்தப் பூங்காவை கடலரிப்பில் இருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இதன்போது ஆளுநர் உறுதி அளித்தார்.

# வயல்வெளியில் வீழ்ந்து கிடந்த யானை

(கி.வசந்தன்)

வவுனியா குடகச்சக்கொடி வயல்வெளியில் சுகயீனம் காரணமாக கீழே வீழ்ந்து கிடந்த யானை ஒன்று வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் பாதுகாப்பாக மீட்கப்பட்டது. கிராம மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே இந்த யானை மீட்கப்பட்டுள்ளது. இந்த யானை எட்டு வயது மதிக்கத்தக்கது எனவும் மோசமான காலநிலை காரணமாக உணவு தேடிச் சென்ற வேளையில் வயல்களில் தவறி விழுந்துள்ளதாகவும் வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.



# அனர்த்த காலங்களில் அரச உத்தியோகஸ்தர்கள் கடினமாக பணியாற்றவேண்டும்

## பிரதி அமைச்சர் உபாலி

(கி.வசந்தன்)



வெள்ளப் பாதிப்புக்களிலிருந்து மீள்வதற்கு அரச உத்தியோகஸ்தர்கள் கடினமாக பணியாற்ற வேண்டும் என்று கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

வெள்ள நிலைமை தொடர்பாக ஆராயும் கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வெள்ளப்பாதிப்பு விடயத்தில் வவுனியா மாவட்ட செயலகம் விரைவான நடவடிக்கைகளை எடுத்திருந்தது. அந்தவகையில் இன,மத பேதம் என்ற விடயம் இங்கு இல்லை. அனைவரும் எங்களுடைய மக்கள். அரசியல் பேதமின்றி இந்த பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக உழைக்கவேண்டும். அரச உத்தியோகஸ்தர்கள் என்ற வகையில் நீங்கள் இந்த விடயத்தில் சற்று கடினமாக பணியாற்றவேண்டும். இதிலிருந்து விடுபடுவதற்கு அரசாங்கத்திடம் இருந்து நிதி உட்பட வேறு விடயங்கள் தேவையெனில் அதைப் பெற்றுத்தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்றார்.

# அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

( தர்மேந்திரா)



நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை அனர்த்தம் காரணமாக அழிவுகளை எதிர்கொண்டுள்ள அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

இவரின் காரைதீவு இல்லத்தில் வைத்து ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோது இது தொடர்பாக இவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் அரசாங்கத்தின் நிவாரணம் வழங்கப்பட வேண்டும். குறிப்பாக அரசாங்க ஊழியர்களை புறம் தள்ளவே கூடாது. அரசாங்க ஊழியர்களுக்கு அனர்த்த கால நிவாரணம் வழங்குவதில்லை என்று கடந்த காலத்தில் அரசாங்க சுற்று நிருபம் வெளியிடப்பட்டது. இதனால் தொடர்ந்தேச்சையாக அனர்த்த கால நிவாரணம் அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் ஆழி பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் கிடைப்பதை எமது தொழிற்சங்கம் உறுதி செய்தது.

எனவே, தற்போதைய அனர்த்த நிலைமையை கருத்தில் கொண்டு அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தை கோருகின்றோம். அந்த சுற்று நிருபம் பொருத்தம் அற்றது என்பது எமது நிலைப்பாடாகும்.

### மர்ஹூம் சேகு இஸ்ஸதீனுக்கு

# முஸ்லிம் மீடியா போரம் அனுதாபம்

முன்னாள் அமைச்சரும் மூத்த முஸ்லிம் அரசியல்வாதியுமான 'வேதாந்தி' சேகு இஸ்ஸதீன் இலங்கை அரசியலில் தனித்துவமிக்க ஒருவராவார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத்துள்ள அனுதாப செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டத்தரணி சேகு இஸ்ஸதீனின் மறைவு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் சார்பில் அதன் தலைவர் என்.எம். அமீன் விடுத்துள்ள அனுதாப செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடகிழக்கு மாகாண சபையின் முதலாவது எதிர்க் கட்சித் தலைவராக, இலங்கை அரசியலில் முக்கிய வகிபாகம் வகித்த சேகு இஸ்ஸதீன், ஊடகப் பிரதி அமைச்சராக இருந்தபோது தமிழ் பேசும் ஊடகவியலாளர்களோடு நெருங்கிச் செயற்பட்டார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விடுத்த பல வேண்டுகோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார். முஸ்லிம்களின் பிரதான அரசியல் இயக்கமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தவிசாளராகப் பணிபுரிந்த இவர், கட்சியின் ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரபுடன் நெருங்கிச் செயற்பட்டு அக்கட்சியை வளர்ப்பதற்குப் பாடுபட்டார். முஸ்லிம் காங்கிரஸின் வரலாற்றை எழுதும் போது அவரது பங்களிப்புக்கு விசேட இடம் ஒதுக்கப்படுவது அவசியமாகும். அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட மர்ஹூம் சேகு இஸ்ஸதீன், சிறந்ததொரு இலக்கியவாதியுமாவார். முன்னாள் ஊடகப் பிரதியமைச்சர் பதவிக்கு மேலதிகமாக ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சராகப் பணிபுரிந்து அத்துறையின் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பை வழங்கினார். மர்ஹூம் சேகு இஸ்ஸதீனின் மறைவினால் வேதனைப்படும் மனைவி பிள்ளைகள், மற்றும் குடும்பத்தினருக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றது.

# வடக்கு -கிழக்கில் சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு இடமாற்றம்

(கி.வசந்தன்)

வடக்கு– கிழக்கில் பணியாற்றிய சுகாதார சேவைகள் திணைக்கள பிரதி பணிப்பாளர் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, வைத்தியர் ஆர். முரளீஸ்வரன் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். வைத்தியர் ஜி.சுகுணன் மட்டக்களப்பு கல்முனை வடக்கு வைத்தியசாலையின் பணிப்பாளராகவும், வைத்தியர் டி.வினோதன் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், வைத்தியர் கே.ஜி.சீ.வை.எஸ். வீ.வீரக்கோன் ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், திருமதி பி.எஸ். என்.விமலரட்ண கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், என். சீ.டி.ஆரியரட்ண வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும், டபிள்யூ.ஏ.நிசங்க அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், எம்.எச்.எம்.அசாத் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும், டபிள்யூ.கே.சீ. பீ.வீரவத்த கிளிநொச்சி பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும், டி.எம்.ஏ.கே.திசாநாயக்க கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், எஸ்.என். வீ.பிரேமதாச முல்லைத்தீவு பொது வைத்தியசாலை பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 2 ஆம் திகதிக்குப் பின் அமுலுக்கு வரும் வகையில் இவ் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# திறந்த பல்கலைக்கழகத்தின் 15ம் ஆண்டு நிறைவு விழா

(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் திறந்த பல்கலைக்கழக இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தினால் புத்தளம் திறந்த பல்கலைக்கழகத்தின் 15ம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் புத்தளம் திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் புத்தளம் திறந்த பல்கலைக்கழகத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.எம்.ஜிப்ரி, ஓய்வுபெற்ற புத்தளம் ஆசிரிய மைய முகாமையாளர் எம்.எச்.எம். நவாஸ், புத்தளம் திறந்த பல்கலைக்கழகத்தின் பரீட்சை பிரிவிற்கு பொறுப்பான அதிகாரிகள், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மற்றும் இளங்கலை பட்டதாரிகள் பலரும் கலந்துக் கொண்டனர்.

# இலவச மருத்துவ முகாம்

(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் தில்லையடி ஜனாஸா சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இலவச மருத்துவ முகாம் ஞாயிற்றுக்கிழமை (01ம் திகதி) புத்தளம் தில்லையடி அரபா நகர் உம்ராபாத் அன்சாரி பாடசாலையில் காலை 08 மணி தொடக்கம் பிற்பகல் 05 மணிவரை நடைபெற உள்ளது. 20 வருட அனுபவம் கொண்ட டொக்டர்.எஸ்.எம் றிஸான் தலைமையில் நடைபெற உள்ள இந்த இலவச மருத்துவ முகாமில் ஹோமியோபதி, அக்குபஞ்சர், ஹிஜாமா மற்றும் இயற்கை மருத்துவம் என்பன பல்வேறு மருத்துவ சேவைகள் வழங்கப்பட உள்ளன.

### சிரேஷ்ட ஊடகவியலாளர்

# சனூனுக்கு விருது



புத்தளம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் மாவட்ட சாகித்திய கலை விழா இம்முறை ஆனமடுவயின் மறைந்த கலைஞர் எழுத்தாளர் ஏ . சுந்தஹாமி ஞாபகார்த்தமாக தம்பண்ணி அக்வெஸ்ஸ என்ற மகுட வாசகத்தின் ஏற்பாட்டில் ஆனமடுவ சுதம்பாய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (29) புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம் எஸ் பீ ஹேரத் தலைமையில் நடைபெற்றது.

இதில் புத்தளத்தில் ஊடகத்துறையில் 43 வருடங்களாக சேவையாற்றி வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.யூ எம் சனூன் கலாதினீ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வின் பிரதம அதிதிகளாக நிர்வாகம் மற்றும் மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ரில்ஹேன மக்களின் பிரச்சினை தீருமா?

## பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேரடி விஜயம்





கஹவத்தை, ரில்ஹேன தோட்ட பிரதேசத்தில் சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களை, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேரடியாக சந்தித்து பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

மிக மோசமான நிலையிலுள்ள அத்தோட்ட குடியிருப்புகளில் தொழிலாளர்கள் வாழ்ந்து வருவது மிகவும் ஆபத்தான ஒரு விடயம் எனத் தெரிவித்த பிரதி அமைச்சர்,கடந்த அரசாங்கத்தின் அசமந்தபோக்கே இதற்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன அப்பிரதேசத்தில் மக்கள் வாழ்வதற்குப் பொருத்தமற்ற இடமாக அக்குடியிருப்பு பிரதேசத்தை அடையாளப்படுத்தியிருந்தும் இதுவரையும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பாதிக்கப்பட்ட ரில்ஹேன தோட்ட மக்களுக்குத் தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது சம்பந்தமாக உயர்மட்ட குழுக்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் சீரற்ற காலநிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட இரத்தினபுரி மாவட்ட பெருந்தோட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்த பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகள் மற்றும் ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## பண்டாரவளை - நமுனுகுல - பசறை வீதிபோக்குவரத்து வழமைக்கு திரும்பியது





(ராமு தனராஜா)

சீரற்ற காலநிலை காரணமாக வீசிய கடும் காற்றினால் நமுனுகுலை 16 வது மைல் கல்லுக்கு அருகில் பாரிய சைப்பிரஸ் மரங்களும் கற்களும் வீதியில் விழுந்ததால் குறித்த வீதியின் ஊடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் காலை முதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்களும் , பதுளை எலதலுவ பகுதியில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரும்,ஊர் பொதுமக்களும் இணைந்து மிகவும் சிரமத்திற்கு மத்தியில் கற்களையும் மரங்களையும் அப்புறப்படுத்தி போக்குவரத்துக்கு வழியமைத்தனர்.

இதன்மூலம் பண்டாரவளையில் இருந்து நமுனுகுல ஊடாக பசறை செல்லும் வீதி போக்குவரத்து சீர் செய்யப்பட்டு வழமைக்குத் திரும்பியது. எனினும் சாரதிகள் மிகவும் அவதானத்துடன் அவ்விடத்தில் வாகனங்களை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுக்கின்றனர்.

## இங்கிலாந்தில் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு



நவம்பர் 27 ஆம் திகதி தமிழ் மக்கள், தமது உறவுகளின் இழப்பிற்காக நினைவுகூர்வது வழமை. ஈழப்போராட்டத்தில் உயிரிழந்தவர்களுக்காக இந்த மாவீரர் நினைவு நாள் அனுஷ்டிக்கப்படுகிறது. இலங்கையின் பல பகுதிகளிலும் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இலங்கையில் மட்டுமல்லாமல் உலகளாவிய ரீதியில் இலங்கை தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இங்கிலாந்திலும் மாவீரர் தின நிகழ்வு சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 27 ஆம் திகதி இங்கிலாந்தின், எக்ஸெல் பகுதியில் அமைக்கப்பட்ட விசேட மாவீரர் துயிலும் இல்லத்தில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இங்கிலாந்தில் வாழும் பல தமிழ் மக்கள் உயிரிழந்த தமது உறவுகளுக்கும், உயிரிழந்த போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தியதாக எமது விசேட செய்தியாளர் தெரிவித்துள்ளார். பொது ஈகைச்சுடர் ஏற்றப்பட்ட அதேவேளை, தமது உறவினர்களை நினைவு கூர்ந்து உருவப்படங்களுக்கு முன்னதாக ஈகைச்சுடர் ஏற்றி தமது அஞ்சலிகளை தெரிவித்தனர். மாவீரர்களது புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. உறவினர்களை இழந்தவர்கள் மட்டுமன்றி உணர்வு பூர்வமாக தமிழ் மக்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீரற்ற காலநிலையால் நுவரெலியாவில் 344 குடும்பங்களுக்கு பாதிப்பு

(டி.சந்ரு செ.திவாகரன்)

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் வெள்ளிக்கிழமை திரட்டப்பட்ட தகவலின்படி 344 குடும்பங்களைச் சேர்ந்த 1297 பேர் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 204 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதால் அங்கு வசித்த 117 குடும்பங்களைச் சேர்ந்த 462 பேர் 09 தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான உணவு மற்றும் ஏனைய அத்தியாவசிய சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபொட தெரிவித்துள்ளார். இதன்படி மண்சரிவு அபாயம் காரணமாக நுவரெலியா கொட்லோட்ஜ் தோட்டம் சமர்ஹில் பாடசாலையில் அமைந்துள்ள தற்காலிக இடைத்தங்கல் முகாமில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 153 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கந்தப்பளை கொங்கோடியா தோட்டத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக 14 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேர் கோவிலில் பாதுகாப்பான இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு நுவரெலியா பௌத்த வழிபாட்டுத் தலத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாதுகாப்பான இடத்தில் 14 குடும்பங்களில் 54 பேர் தங்க வைக்கப்பட்டனர்.

வலப்பனை குருதுஓயா அல்மா பாலர் பாடசாலையில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் தங்க வைக்கப்பட்டனர்.

மேலும் கொத்மலை டன்சினன் கொரெஞ்சி பாடசாலையில் உள்ள பாதுகாப்பான இடத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஹகுரன்கெத்த திகலஹின்ன சனசமூக மண்டபம் மற்றும் ஹோப் பிரிவு தோட்ட நிலையங்களில் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அதன்படி திகலஹின்ன சனசமூக மண்டபத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 03 பேரும் ஹோப் பிரிவு தோட்டக் கட்டிடத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 08 பேரையும் தங்க வைக்கப்பட்டனர்.

அத்துடன் தலவாக்கலை பொட்மோர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையத்தில் 08 குடும்பங்களும் 34 பேரும் தங்க வைக்கப்பட்டனர்.

இதேவேளை, நுவரெலியா மா நகரசபை எல்லைக்குட்பட்ட நகரில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீரை வழிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகளை நகரசபை ஊழியர்கள் முன்னெடுத்தனர்.

### அம்பாறை மாவட்டத்தில்

## முஸ்லிம் பிரதிநிதித்துவம் இழப்புக்கு தேசிய மக்கள் சக்தியே காரணம்



கடந்த 2020 நாடாளுமன்றத் தேர்தல் மூலம் அம்பாறை மாவட்டத்தில் அதாவுல்லா,ஹரீஸ், பைசல் காசீம், முஸ ர்ரப் என நான்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் எனத் தெரிவித்த திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் முஸ்லிம் வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு அளிக்கப்பட்டதால் தான் அம்பாறை மாவட்ட மக்கள் இரண்டு முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இழந்தனர் என்பதை தேசிய மக்கள் சக்திக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் மேலும் கூறியதாவது, இந்த 60 ஆயிரம் வாக்குகளில் சில நூறு வாக்குகள் கேஸ் சிலிண்டர் சின்னத்துக்கு அளிக்கப்பட்டிருந்தால் அங்கு ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டிருப்பார். ஏனைய வாக்குகளை மரத்துக்கோ மயிலுக்கோ முஸ்லிம்கள் வாக்கு அளித்திருந்தால் அங்கும் இரண்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பார்கள். இதன் மூலம் கடந்த முறையைப் போல 4 உறுப்பினர்களைப் பெற்றிருக்கலாம்.

எனவே, அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதிகளவு வாக்குகளை அளித்ததனால் தான் தமது இரண்டு உறுப்பினர்களை இழந்துள்ளனர். இதற்குப் பரிகாரமாக தேசிய மக்கள் சக்தி ஒரு தேசியப்பட்டியல் உறுப்பினரையே வழங்கியுள்ளது. சரியாகப் பார்த்தால் தேசிய மக்கள் சக்தி அம்பாறை மாவட்டத்தில் இரண்டு முஸ்லிம் உறுப்பினர்களை தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்திருக்க வேண்டும். இது தான் யதார்த்தம். கவலையான செய்தி என்னவென்றால் சுமார் 10 இலட்சம் முஸ்லிம் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் முஸ்லிம்களைப் புறக்கணிக்கும் செயற்பாடுகளை இப்போதே ஆரம்பித்து விட்டமை தான் என்றார்.

### காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி

## மாணவர்களின் அகால மரணம் ஆறாத்துயரை ஏற்படுத்துகிறது

காரைதீவு – மாவடிப்பள்ளியில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த நிந்தவூர், காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி மாணவர்களின் அகால மரணம் ஆறாத்துயரை ஏற்படுத்தியுள்ளது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நிந்தவூரிலிருந்து சம்மாந்துறைக்குச் சென்ற அரபுக் கல்லூரி மாணவர்கள் பயணித்த உழவு இயந்திரம், வெள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதால், உயிர்நீத்த மாணவர்கள் மற்றும் சாரதி, உதவியாளர் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மரணத்தின் பிடியிலிருந்து தப்பிக்க முடியாத விதி, மனிதனுக்குப் பொதுவானதே. மரணம் எல்லோரும் ஏற்றுக்கொண்ட விதிதான். இருந்தாலும், இது நிகழும் சந்தர்ப்பங்கள் மற்றும் நேரங்களே எம்மைக் கவலைக்குள்ளாக்குகின்றன.பிள்ளைகளை இழந்து துயருறும் பெற்றோர்களுக்கு, இறைவன் அமைதி மற்றும் பொறுமையை வழங்கட்டும்! எதிர்காலத்தில், பிரபல உலமாக்களாக உயர்ந்து, சமூகத்தை நல்வழிப்படுத்தவிருந்த இளம் பிஞ்சுகள், இந்த அனர்த்தத்தில் நம்மை விட்டுச் சென்றுவிட்டன. இறைவனின், ஏற்பாடுகளைப் பொருந்திக்கொள்வதே உறுதியான ஈமான்.

நாட்டில் பரவலாக ஏற்பட்டுள்ள அனர்த்தத்தால் பலரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த அவலங்களிலிருந்து மீள்வதற்கு இறைவனைப் பிரார்த்திப்போம்.என்று குறிப்பிட்டுள்ளார்.

## முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள நிலையினையடுத்து, பாதிப்புக்குள்ளான முல்லைதீவு மாவட்ட மக்களின் அவசர தேவைகளைக் கண்டறிந்து, அதற்குத் தேவையான உதவிகளை செய்யும் வகையில், ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கூட்டப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்ஹ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர் அ.உமா மகேஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.குணபாலன் உட்பட பிரதேச செயலாளர்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள், ஏனைய திணைக்கள அதிகாரிகள், பாதுகாப்புத்துறை அதிகாரிகள் எனப் பலரும் இதன்போது பிரசன்னமாகி இருந்தனர்.

வெள்ளத்தால் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளமை குறித்தும் அவர்களது அத்தியாவசிய, அடிப்படைத் தேவைகள் போன்றவற்றை பெற்றுக்கொடுப்பது பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

மேலும், விவசாயப் பாதிப்பு, கால்நடை, மீன்பிடி, உணவு, குடிநீர், நோய் தடுப்பு, நீர்ப்பாசனம், உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் உள்ள வடிகாலமைப்பு, கிராமிய பாதைகள் என்பன தொடர்பிலும் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், அவற்றுக்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

# கோட்டாபயவின் ஆட்சித் தன்மை அநுரவிடம் தெரிகிறதா?



கனூஷியா புஷ்பகுமார்

இலங்கை வங்குரோத்து நிலையை அடைய கோட்டாபய ராஜபக்ச ஆட்சி அடித்தளம் இட்டதாக பல விமர்சனங்களை தற்போதைய அரசாங்கம் முன்வைத்தாலும் கூட அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கமும் கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கமும் கிட்டதட்ட ஒரே இயல்புடைய ஆட்சிமுறைமையே காணப்படுகிறது என்ற அவதானிப்புகளும் உள்ளன.

2015ஆம் ஆண்டில் தோல்வியடைந்ததன் பின்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை 2016 ஆம் ஆண்டு பெப்ரவரியில் பசில் ராஜபக்ச உருவாக்கினார். அதன் ஊடாக கோட்டாபய ராஜபக்ச முன்னிலைப்படுத்தப்பட்டார்.

கோட்டாபயவும் பல மாற்றங்களை மேற்கொண்டார். பொதுஜன பெரமுன கட்சியில் படித்த, அறிவுள்ள இளைஞர்களை அறிமுகப்படுத்தியிருந்தார்.

அநுரகுமார திஸாநாயக்கவும் கூட 3 வீதமாக இருந்த ஜே.வி.பியை மீள கட்டியெழுப்பி ஜே.வி.பியின் மற்றுமொரு முகமாக தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் அறிவுள்ள, கற்ற, புதிய இளைய முகங்களை அறிமுகப்படுத்தினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி உருவாக்கி, 2020 இல் கோட்டாபய ஜனாதிபதியானார். அதேபோன்று தேசிய மக்கள் சக்தியை உருவாக்கி அநுர 2024 இல் ஜனாதிபதியானார

கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட முன்னுரிமையைப் போலவே அநுரகுமார திஸாநாயக்கவின் அரசாங்கத்திலும் பெண்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்கான சிறந்த உதாரணமாக பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய காணப்படுகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் திகதிகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே பிரசாரங்களை ஆரம்பித்த அநுரகுமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி உள்நாட்டை விட வெளிநாடுகளில் பிரசார நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டது.

அதன் பிரதிபலனாக ஜனாதிபதி தேர்தலுக்கு தமது வாக்குகளை அளிக்க வெளிநாட்டிலிருந்து பெரும்பாலானோர் வருகைதந்திருந்தனர். இதே பிரசார நடவடிக்கை தான் கோட்டாபய ராஜபக்சவும் கையாண்டிருந்தார்.

பல கோடீஸ்வர வர்த்தகர்கள் தனக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் என்பதை கோட்டாபய வெளிப்படுத்தியிருந்ததுடன், அநுரகுமார திஸாநாயக்கவும் அந்த வழிமுறையையே பின்பற்றியிருந்தார்.

கோட்டாபயவின் வர்த்தக மாநாடுகளுக்கு வருகைதந்திருந்த அதே வர்த்தகர்கள் அநுரகுமார திஸ ாநாயக்கவின் வர்த்தக மாநாடுகளுக்கு வருகைத் தந்தமை இதில் சிறப்பம்சமாகும்.

கோட்டாபயவின் சிறந்த உத்தியாக சமூக வலைத்தளங்கள் காணப்பட்டன. சமூக வலைத்தளங்களில் எதிர்க்கட்சி தரப்பினரை விமர்சித்து மக்கள் ஆதரவை பெற்றுக்கொண்டார். அதேபோல, அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றிக்கு முகுகெலும்பாக சமூக வலைத்தளங்கள் காணப்பட்டன. அதனை அவர்களும் பகிரங்கமாகவே ஏற்றுக்கொண்டனர்.

இதேவேளை, கோட்டாபய ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டில் இராணுவ ஆட்சி தலைதூக்கும் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், அநுரவுக்கும் பழைய ஜேவிபி இயக்கம் மீள கொண்டுவரப்படும் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இருவருக்கும் அரச அதிகாரத்திலும், ஆட்சியிலும் அனுபவமின்மை என்பது குறையாகவே பார்க்கப்பட்டது.

உண்மையிலேயே, கோட்டாபய ராஜபக்ச அரசியலுக்கு புதியவர். அவரது ஆட்சியின் போது அவருக்கு ஆலோசனை வழங்கியவர்களினாலேயே நாடு இந்த நிலைக்கு தள்ளப்பட்டது.



கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி வகிக்கும் போது திரைக்கு பின்னால் இருந்து ரணில் பல ஆதரவுகளை வழங்கியிருந்தார். அநுர ஆட்சியை உருவாக்கவும் ரணிலின் பங்களிப்புகள் இல்லாமல் இல்லை.

இவ்வாறு கோட்டபாய ராஜபக்ச, அநுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரின் அணுகுமுறைகள் பலவற்றில் ஒத்துப்போகும் தன்மை காணப்படும் நிலையில், ஆட்சி முறையிலும் பெரிதான வேறுபாடுகள் எதுவும் இந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் அடையாளம் காணப்பட்டதாக தெரியவில்லை.

மத்திய வங்கியை திட்டமும் இல்லை என்பது தற்போது தெளிவாகியுள்ளது. ரணிலின் ஆட்சியில் ஐ.எம்.எப். எனப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு முழுவதுமாக எதிர்ப்பு தெரிவித்த அநுர தரப்பு இன்று ஆட்சிக்கு வந்ததும் அதற்கு எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

ஆக, அவர்களின் கொள்கைகளுக்கும், அதனை நடைமுறைக்குட்படுத்துவதற்கும் இடையே பாரிய இடைவெளிகள் – சிக்கல்கள் காணப்படுவதை அநுர அரசாங்கம் தற்போது உணர ஆரம்பித்துள்ளது. அதேபோல கிடைத்த அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ள அநுர அரசாங்கம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதில் எதுவித சந்தேகங்களும் இல்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை பரிசீலனை செய்து பார்க்கக்கூடிய நேரம் இதுவல்ல என்பதை அநுரகுமார திஸாநாயக்க பல இடங்களில் வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். எனினும், அநுரவிடம் தெளிவான ஒரு பொருளாதார நோக்கம் இல்லை என்பது தெளிவாகிறது. அன்று தொடக்கம் சீனாவின் அரசியல் கொள்கைகள் தொடர்பில் அதிக ஈடுபாடு கொண்ட ஜேவிபி, தற்போது தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சி அமைத்துள்ளது.

சீனாவில் காணப்படும் பொதுஉடைமை கட்சி அதாவது கட்சிக்குள் அரசு, அரசுக்குள் கட்சி என்ற நிலைப்பாட்டுடனான ஒரு ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற ஆசையும் தேசிய மக்கள் சக்தியிடம் இல்லாமலில்லை.

எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரம் என்பது சீரான பாதையில் பயணிக்க வேண்டும். அதனையே மக்கள் விரும்புகின்றனர். 76 வருடங்களாக மக்கள் பணத்தை கொள்ளையடித்த கொள்ளையடித்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதாக கூறியே கோட்டாபய ராஜபக்ச மக்கள் ஆணையை வென்றார். அதேபோல, அநுரகுமார திஸாநாயக்க உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட பல சர்ச்சைக்குரிய விடயங்களுக்கு தீர்வு காணுவதாக கூறி மக்கள் வாக்குகளைப் பெற்றார்.

எனினும், கோட்டாபயவின் ஆட்சி முறைச்சாயலை பின்பற்றும் அநுரவுக்கும் நாட்டை அரசியல் – பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப முடியாமல் போய்விடுமா என்ற கேள்வி தற்போது விஞ்சியுள்ளன.

கோட்டாபயவுக்கு அரசியலில் பெரிதாக அனுபவம் இருக்கவில்லை. ஆனால் சந்திரிக்கா, மகிந்த ராஜபக்ச ஆகியோருடன் அரசியலில் ஈடுபட்ட அனுபவம் அநுரவுக்கு உண்டு.

மக்கள் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக தேர்தல் மேடைகளில் பல உறுதிமொழிகளையும், வாக்குறுதிகளையும் வழங்கிய ஜேவிபியின் முகத்தோற்றம் கொண்ட தேசிய மக்கள் சக்தி, அவற்றுள் எதனையும் இதுவரையில் நிறைவேற்றவில்லை. நிறைவேற்ற அவர்களிடம் எந்தத் அரசியல் ஊழல்வாதிகளை தூக்கியெறிந்து மக்கள் அநுரவை தேர்ந்தெடுக்க காரணம் ஒரு வாய்ப்பை வழங்குவதற்காக மாத்திரமே. அநுரவின் கொள்கைகள் மக்களின் அடிப்படை தேவைகளுடன் ஒன்றியதாக அமைந்திருந்தது. அநுர கோரிய மாற்றத்துக்கும் மக்கள் வழங்கிய மாற்றத்துக்கும் அதுதான் காரணமாக இருந்தது. தற்போது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க, யாருடைய ஆலோசனைகளை செவிமடுக்க போகிறார் என்பதை பொறுத்துதான் அவருடைய ஆட்சி நிலைக்குமா என்ற பலருடைய கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தேசிய மக்கள் சக்தி மற்றும் டில்வின் சில்வா தலைமை தாங்கும் ஜேவிபிக்கும் இடையே யாருடைய ஆலோசனைக்கு செவிமடுப்பது என்றொரு சிக்கல் அநுரவுக்கு நிச்சியம் ஏற்பட்டுள்ளது எனவும் கூறலாம். ஆக, ஆலோசனைகளும், அதற்கேற்ற நடவடிக்கைகளும் தவறும் பட்சத்தில் மக்கள் மறுபடியும் வீதிக்கு இறங்க தயங்க மாட்டார்கள் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.



**கோட்டபாய – அநுரகுமார ஆகியோரின் சில அணுகுமுறைகளில் ஒத்துப்போகும் தன்மை காணப்படும் நிலையில், அநுரவின் ஆட்சி முறையிலும் பெரிதான வேறுபாடுகள் எதுவும் இந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் அடையாளம் காணப்பட்டதாக தெரியவில்லை.**




# "கூடுவோம் கூட்டுவோம்" நிகழ்ச்சி நாடளாவிய ரீதியில் இன்று நடைபெறும்



ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் துணை அமைப்புகளான சேவாபாரதி,ஏ.பி.வி.பி, தர்மரக்ஷண சமிதி, விசுவ இந்துபரிசத் என்று 200 அமைப்புகள் உள்ளன.

இவ் அமைப்புக்களில் இருப்பவர்கள் அனைவரும் ஒன்று சேர்வது மற்றும் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்களை அழைத்து வரும் கூடுவோம் கூட்டுவோம் எனும் தலைப்பின் கீழ் வருடந்தோறும் நடத்தப்படுகிறது. இந்நிலையில் இந் நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நடக்கிறது.

இவ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் குடும்பத்துடன் இந் நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும்.

இக் கூட்டத்தில் கீழ்க்காணும் 5 செயல்கள் குறித்து பேசப்படும்.

**போதை ஒழிப்பு** - ஒரு தனி மனிதனால் என்ன செய்ய முடியும் எனும் எண்ணத்தைக் கைவிட்டு, தானும் தன் குடும்ப அங்கத்தவர்களும் போதை பழக்கத்துக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும்.

**சமூக நல்லிணக்கம்** - தத்தமது குடும்ப உறுப்பினர்கள் ஜாதி, மத, மொழி பாரபட்சம் இல்லாமல் அனைவருடனும் சமமாக பழகும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

**சுதேசி வாழ்வியல்** - வீட்டிலும் ஏனைய இடங்களிலும் முடிந்த அளவில் தாய்மொழியில் பேசும் பழக்கத்தை கடைபிடித்தல், பாரம்பரிய உடைகளை அணிதல், உள்ளூர் தயாரிப்பு பொருட்களை வாங்குதல் உள்ளிட்டவற்றை கடைபிடிக்க வேண்டும்.

**குடும்பங்களில் ஒற்றுமையை உருவாக்குதல்**

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒரு நாளைக்கு ஒரு தடவையேனும் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ண வேண்டும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு** - வீடுகளில் நீர் சிக்கனம், வீட்டையும் சூழலையும் தூய்மையாக பராமரித்தல், துணி பைகளை பயன்படுத்த பழகிக் கொள்ளதல். நாட்டின் குடிமகனாக சட்டத்தை மதித்து நடத்தல், ஹெல்மட் அணிய வேண்டும் என்பது அரசின் சட்டம். அதனை கடைபிடிக்க வேண்டும்.

இவ்வாறு அனைத்து விதமான மாற்றங்களையும் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பங்களில் கடைபிடிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொள்கிறார்கள்.

இன்று காலை 10 மணி முதல் 12.30 வரையில் நடைபெறும் இந் நிகழ்ச்சிகளில் தலைவர்கள் முதற்கொண்டு நிர்வாகிகள் வரை அனைவரும் தங்கள் பகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் பங்குபற்ற வேண்டும்.

# நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நாளை வரை ஒத்திவைப்பு

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமானது. அப்போது அதானி விவகாரம், மணிப்பூர் பிரச்சினை, உத்தர பிரதேச சம்பாவில் நடைபெற்ற வன்முறை ஆகியவற்றைக் குறித்து விவாதிக்கும்படி எதிர்க்கட்சியினர் பிரச்சினையில் ஈடுபட்டனர்.



இதனால் மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகியன முடங்கின.

கடந்த மூன்று நாட்களாக எதிர்க்கட்சிகள் செய்யும் இப் பிரச்சினையால் இரு சபைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் கூடின.

அப்போது அதானி விவகாரம், வக்பு வாரிய சட்டத் திருத்தம், மணிப்பூர் வன்முறை ஆகிய பிரச்சினைகளை முன்வைத்து மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் பிரச்சினையில் ஈடுபட்டன.

இந்நிலையில் மாநிலங்களவை நாளை திங்கட்கிழமை காலை 11 மணியளவில் ஒத்தி வைக்கப்படுவதாக சபைத் தலைவர் ஜகதீப் தன்கர் அறிவித்துள்ளார்.

# பொலிஸ்டிக் ரக ஏவுகணை சோதனை

## வெற்றியடைந்த இந்தியா

இந்தியா அதன் பாதுகாப்புத் திறனை அதிகப்படுத்துவதற்காக் பாதுகாப்புப் படையில் அதி நவீன ஆயுதங்களை இணைத்து வருகின்றது.

அதேபோல் ஏவுகணைத் தொழில்நுட்பத்தையும் இந்தியா மேம்படுத்தி வருகின்றது.

அதன்படி, நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து சுமார் 3500 கிலோமீட்டர் தொலைவு வரையில் பாய்ந்து செல்லும் பொலிஸ்டிக்



ரக ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

கே4 பிரிவைச் சேர்ந்த இந்த ஏவுகணையில் அணு ஆயுதங்களையும் செலுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சோதனைகளின் மூலம் அணு ஆயுத ஏவுகணையில் நிலம், வான், கடல் என மூன்று துறைகளிலும் இருந்து தாக்குதல் நடத்தும் திறன் கொண்ட நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக மாறிவிட்டது.

இந்த ஏவுகணை பரிசோதனை விசாகப்பட்டினம் கடற்கரையில் ஐஎன்எஸ் அரிஹந்த் நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து வெற்றிகரமாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொலை

இந்தியாவின் திருப்பூர் மாவட்டம் சேமலைகவுண்டம்பாளையத்தில் தந்தை, தாய், மகன் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இக் கொலைகளைச் செய்தவர்களை பிடிக்க 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக திருப்பூர் மாநகர பொலிஸ் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "குறித்த கொலைகள் நடைபெற்ற இடத்தில் 6 முதல் 7 பவுன் நகை கொள்ள அடிக்கப்பட்டுள்ளது.

கூர்மையான ஆயுதம் மூலமே இம் மூவரும் கொலை செய்யப்பட்டுள்ளனர். இக் கொலைகளை ஒருவர் மட்டும் செய்திருக்க வாய்ப்பில்லை. குற்றவாளிகளை பிடிக்க தமிழகம் முழுவதும் வாகன சோதனை நடத்தப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.



# தனுஷ் தாக்கல் செய்த மனு

## நயன்தாராவின் வழக்கறிஞர் பதில்

அண்மைக் காலமாக தனுஷ் - நயன்தாரா பிரச்சினை தான் பெரும் பேசுபொருளாக உள்ளது.

அதன்படி, நானும் ரவுடிதான் திரைப்படத்திலிருந்து சில காட்சிகளை



நயன்தாரா அவர்களது ஆவணப்படத்தில் பயன்படுத்தியதாக நடிகர் தனுஷ் 10 கோடி ரூபாய் வேண்டும் என கேட்டதாக நயன்தாரா மூன்று பக்கத்துக்கு அறிக்கையொன்று வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில் தனுஷ் தரப்பில் இது தொடர்பில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில்,

" படத்தில் நயன்ராவின் நடிப்பு மற்றும் குரல் எங்கள் நிறுவனத்துக்கு சொந்தமானது.

எங்கள் நிறுவனத்துக்கு சொந்தமான வீடியோ காட்சிகளுடன் நெட்பிலிக்ஸ் நிறுவனம் நயன்தாராவின் திருமண வீடியோவை பதிவிட்டுள்ளது நெட்பிலிக்ஸ் நிறுவனம். இதனால் எங்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. அதற்காக பத்து கோடி ரூபாய் வழங்க வேண்டும்" என அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டங்ஸ்டன் சுரங்க உரிமையை ரத்து செய்ய வேண்டும்

## மோடிக்கு ஸ்டாலின் கடிதம்



மதுரை மாவட்டத்தில் இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட டங்ஸ்டன் சுரங்க உரிமையை ரத்து செய்யும்படியும் குறித்த மாநில அரசின் அனுமதியின்றி சுரங்கம் தோண்டுவதற்கான ஏலங்களை மேற்கொள்ளக் கூடாது எனவும் சுரங்க அமைச்சகத்துக்கு அறிவுறுத்துமாறு தமிழக முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அக் கடிதத்தில், "மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு ஒன்றிய அரசு உரிமம் வழங்கியதால் அப் பகுதியில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைக் கருத்தில்கொண்டு இந்தியப் பிரதமர் உடனடியாக இவ் விடயத்தில் தலையிட்டு உரிமத்தினை ரத்து செய்ய வேண்டும்.

இதுபோன்ற முக்கிய கனிமங்களின் சுரங்க உரிமங்களை ஒன்றிய அரசு ஏலத்தில் விடுவதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பாதகங்கள் தொடர்பில் தமிழ்நாடு அரசின் கவலைகளை, நீர்வளத்துறை அமைச்சரின் கடிதம் மூலம் ஏற்கனவே ஒன்றிய அரசுக்குத் தெரிவித்திருந்தோம்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக நாட்டின் நலனுக்காக சுரங்க அமைச்சகத்தின் முக்கிய கனிமங்களை ஏலம் விடுவதைத் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டு நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் அவரது கடிதத்தில் குறிப்பிட்டு, தமிழ்நாட்டு அரசின் கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் இம் மாதம் நாயக்கர்பட்டியில் டங்ஸ்டன் தொகுதியில் சுரங்கம் அமைப்பதற்கு இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தை தகுதியான நிறுவனம் என ஒன்றிய சுரங்கத் துறை தெரிவு செய்து அறிவித்தது.

மேலும் டங்ஸ்டன் தொகுதி கவட்டையம்பட்டி, எட்டிமங்கலம், ஏ.வல்லாளபட்டி, அரிட்டாபட்டி ,கிடாரிப்பட்டி மற்றும் நரசிங்கம்பட்டி ஆகிய கிராமங்கள் உள்ளன.

அதில் அரிட்டாபட்டியில் குடைவரைக் கோயில்கள், சிற்பங்கள், தமிழ் பிராமி எழுத்துக்கள், சமணச் சின்னங்கள், பஞ்சபாண்டவர் கல் படுக்கைகள் ஆகிய தொல்பொருள் நினைவுச் சின்னங்கள் உள்ளன.

எனவே இப் பகுதிகளில் இதுபோன்ற சுரங்கத் தொழிலை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு ஒருநாளும் அனுமதியளிக்காது.மோடியை ஸ்டாலின் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மோசமான உடல் நிலையுடன் பிறந்த குழந்தை

கேரளாவின் ஆலப்புழா கடபுரம் பகுதியில் பெண் ஒருவருக்கு அண்மையில் குழந்தை பிறந்துள்ளது.

ஆனால், அக் குழந்தை கண்கள் மற்றும் காதுகள் இல்லாமலும் வாய் திறக்க முடியாமல் கை, கால்கள் வளைந்த நிலையில் பிறந்துள்ளது. இதைக் கண்டு அதிர்ந்த அப் பெண் மற்றும் அவரது குடும்பத்தினர் மருத்துவர்கள் மற்றும் ஆய்வக மருத்துவர் மீது பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கர்ப்ப காலத்தில் பல தடவைகள் ஸ்கேன் செய்தும் குழந்தையின் குறைபாடுகள் குறித்து எதுவும் மருத்துவர்கள் கூறவில்லை என பெண்ணின் குடும்பத்தினர் தவித்து வருகின்றனர்.



# மின்சார ரயில் மோதி பொறியியலாளர் உயிரிழப்பு



திருவொற்றியூர் அண்ணாமலை நகர் 7ஆவது குறுக்கு தெருவைச் சேர்ந்த ஜஸ்வர்யா என்பவர் பொறியியலாளராக பணிபுரிந்து வந்தார்.

இந்நிலையில் கடந்த புதன்கிழமை இரவு பணி முடிந்து வீட்டுக்கு செல்லும்போது அப் பகுதியிலுள்ள தண்டவாளத்தை கடந்தபோது மின்சார ரயில் மோதி தூக்கி வீசப்பட்டார்.

இதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த பொலிஸார் உடலை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததோடு சம்பவம் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




# சுமத்ரா தீவில் நிலச்சரிவு சுற்றுலாப் பயணிகள் 9 பேர் பலி

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய சுற்றுலாப் பஸ்ஸில் இருந்து மேலும் இரண்டு உடல்களை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர்.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய சுற்றுலாப் பஸ்ஸை மீட்கும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இரண்டு உடல்களை மீட்புப் படையினர் மீட்டுள்ளதால் பலி எண்ணிக்கை 9 ஆக உயர்ந்துள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலச்சரிவில் இதுவரை 27 பேர் இறந்துள்ளனர்.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக குழுவினர் மீட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பத்துக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகவும், அவர்கள் மேடான் நகரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இறந்தோரின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளதாகவும், நிலச்சரிவில் பல வாகனங்கள் சிக்கியுள்ளதாகவும், மேலும் பல இடங்களில் மரங்கள் விழுந்து கிடப்பதால், அந்த இடங்களிலிருந்து வாகனங்களையும் பயணிகளையும் வெளியே கொண்டுவர முடியவில்லை. அவர்களை மீட்பதற்கு குறைந்தது இரண்டு நாட்கள் ஆகும். காணாமல் போனவர்களை



தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் வடக்கு சுமத்ரா பகுதியில் உள்ள மேடான் நகரத்தில் இருந்து மற்ற மாவட்டங்களுக்கு செல்லும் முக்கிய பாதையான பெரஸ்டாகி நகர் செல்லும் சாலையில் கடந்த புதன்கிழமை நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த பாதையில் பயணித்த சுற்றுலாப் பஸ்ஸில் மரங்கள், மண் மற்றும் பாறைகளால் மூடப்பட்டது. இதனால் அதில் பயணித்தவர்கள் மண்ணுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளனர். இதுவரை பஸ்ஸில் இருந்து 7 சடலங்களை மீட்புக் தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

17 ஆயிரம் தீவுகளைக் கொண்ட தீவுக்கூட்டமான இந்தோனேசியாவில் அக்டோபர் முதல் மார்ச் வரையிலான பருவகால மழை அடிக்கடி வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளை ஏற்படுத்தி வருகிறது. சுமாத்ரா தீவுக்கூட்டம் என்பதால் இங்கு இலட்சக்கணக்கான மக்கள் மலைப்பகுதிகளில் அல்லது வளமான சமவெளி பகுதிகளுக்கு அருகில் வசித்து வருகின்றனர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

# காசாவை நெருங்கும் பஞ்சம்: - ஐ.நா மீண்டும் எச்சரிக்கை

இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் ஒரு வருடத்திற்கும் மேலாக நீடித்து வரும் நிலையில் காசாவில் பஞ்சம்



நெருங்கிவிட்டது என ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் எச்சரித்துள்ளது.

அங்கு இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உணவு மற்றும் சுத்தமான குடிநீரின்றி சிரமத்தை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் ஏழாம் திகதி திகதி ஹமாஸ் அமைப்பு தாக்குதல் மேற்கொண்டது. இதன்போது எல்லை பகுதியில் இசை கச்சேரியில் பங்கேற்றிருந்த இஸ்ரேல் மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

அவர்களில் ஆயிரத்திற்கும் மேற்டபட்டோர் உயிரிழந்ததுடன் நூற்றுக்கணக்கானோர் பணயக் கைதிகளாக சிறை பிடிக்கப்பட்டனர்.

பெண்களில் சிலர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட செய்திகளும் வெளியாகின. சில பெண்கள் நிர்வாணமாக வாகனத்தில் இழுத்து செல்லப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன.

அன்று ஹமாஸ் அமைப்பை ஒழிக்கும் வரை ஓயமாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு சபதம் செய்தார். இந்நிலையில் ஒரு வருடமாகியும் போர் தொடர்கின்றது. இஸ்ரேல் – ஹமாஸ் மோதலால் காசாவில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 45 ஆயிரத்தை அண்மித்துள்ளதுடன் காயமடைந்தோரின் எண்ணிக்கைஒரு லட்சத்தைக் கடந்தது.

எவ்வாறாயினும் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கமைய, இஸ்ரேல் பணய கைதிகள் சிலரை மீட்டுள்ளதுடன் தொடர்ந்தும் அந்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது என அறிவுத்துள்ளது.

# உக்ரைனின் ‘அதிகார மையங்கள்’ மீதும் தாக்குதல் நடத்துவோம்

## புதின் எச்சரிக்கை

மேற்கத்திய நாடுகளின் ஏவுகணைகளைக் கொண்டு தங்கள் மீது இனியும் தாக்குதல் நடத்தினால், உக்ரைனின் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகார மையங்கள் மீது தாங்கள் உருவாக்கியுள்ள இடைமறிக்க முடியாத ‘ஆரெஷ்னிக்’ ரக அதிவேக ஏவுகணைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தப்படும் என்று ரஷிய ஜனாதிபதி விளாதிமீர் புடின் எச்சரித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி மாளிகை, அமைச்சரகங்கள், நாடாளுமன்றத்தை மறைமுகமாகக் குறிப்பிட்டு அவர், இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கஜகஸ்தானின் அஸ்தானா நகரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளின் அரசியல்–இராணுவ கூட்டமைப்பின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மேற்கத்திய நாடுகளில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகளை ரஷிய பகுதிகள் மீது வீச அந்த நாடுகள் அண்மையில் அனுமதி வழங்கின. அத்தகைய ஏவுகணைகளை மேற்கத்திய நாடுகளின் பங்களிப்பு இல்லாமல் ஏவ முடியாது என்பதால், இதுபோன்ற நடவடிக்கைகள் உக்ரைன் போரில் அந்த நாடுகள் நேரடியாக ஈடுபடுவதைக் குறிக்கும் என்று நாங்கள் தொடர்ந்து எச்சரித்துவருகிறோம்.

மேலை நாடுகள் ஆயுதங்கள் ரஷியா மீது பயன்படுத்தப்பட்டால் அது வரம்பு மீறிய – பதற்றத்தைத் தூண்டும் செயல் என்று தொடர்ந்து கூறிவந்தோம்.

ஆனால், அதைப் பொருள்படுத்தாமல் தங்கள் ஏவுகணைகளை ரஷியா மீது வீச உக்ரைனுக்கு அனுமதி வழங்கின. உக்ரைனும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளை ரஷியா மீது கடந்த 19ஆம் திகதியும் அதன் பிறகு பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட ஸ்டார்ம் ஷேடோ ஏவுகணைகளையும் ரஷியா மீது வீசி தாக்குதல் நடத்தியது.

இதற்குப் பதிலடியாக, புதிதாக



உருவாக்கப்பட்டுள்ள அதிநவீன ஆரெஷ்னிக் ரக ஏவுகணை ஒன்றை உக்ரைனின் நீப்ரோ நகரிலுள்ள இராணுவ தொழிற்சாலை மீது வீசி சோதித்தோம்.

ஒலியைப் போல் 10 மடங்கு வேகத்தில் பாயும் அந்த ஏவுகணையை உலகத்தில் உள்ள எந்த வான்பாதுகாப்பு தளவாடத்தாலும் இடைமறித்து அழிக்க முடியாது. குறிவைத்த இலக்கை அது அழித்தே தீரும்.

மேற்கத்திய ஆயுதங்கள் ரஷியா மீது இனியும் பயன்படுத்தப்பட்டால் அதன் எதிர்வினைாக அந்த நாடுகளின் இராணுவ நிலைகள் மீது ஆரெஷ்னிக் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்துவோம் என்று அப்போதே எச்சரித்தோம். எனினும் அதனையும் மீறி ரஷியா மீது அட்டாக்கம்ஸ் ஏவுகணைகளை வீசி உக்ரைன் தொடர்ந்து தாக்குதல் நடத்துகிறது.

அதற்குப் பதிலடியாகத்தான், உக்ரைனின் எரிசக்தி மையங்களைக் குறிவைத்து கடந்த புதன்கிழமை நள்ளிரவில் தாக்குதல் நடத்தினோம். அதையும் உக்ரைன் அலட்சியம் செய்தால், ஏற்கெனவே கூறியபடி அந்த நாட்டின் மீது ஆரெஷ்னிக் ஏவுகணைகள் வீசி மீண்டும் சோதிக்கப்படும். அதற்கான இலக்குகளை எங்கள் பாதுகாப்புத் துறை அமைச்சகமும் தலைமை தளபதியும் தேர்ந்தெடுத்துவருகின்றனர். அந்த இலக்குகளில் உக்ரைனின் இராணுவ நிலைகள், பாதுகாப்பு மற்றும் தொழில் மையங்கள் மட்டுமின்றி முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகார மையங்களும் இடம் பெறும்.

நேட்டோ உறுப்பு நாடுகள் வைத்துள்ள ஏவுகணைகளின் செயல்திறனைவிட ரஷியாவிடம் உள்ள ஏவுகணைகள் அதிக செயல்திறன் கொண்டவை. அந்த நாடுகளின் வெளிநாட்டு நிலைகளில் உள்ள ஏவுகணைகளை விட பல மடங்கு ஏவுகணைகள் ரஷியாவிடம் உள்ளன.

# போர்நிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறியது



இஸ்ரேலிய படைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக லெபனான் இராணுவம் குற்றம் சுமத்தியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்தம் அறிவித்த ஒரு நாளுக்கு பின்னர் இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேல் மேற்கொண்ட இந்த வான்வழித் தாக்குதலில் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக என்பது குறித்து

இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை. ஆனால் இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக குற்றம் சுமத்தப்பட்ட இஸ்ரேலிடமிருந்து எதுவித பதிலும் அளிக்கவில்லை.

அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் நடவடிக்கையால் போர் நிறுத்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையே ஒரு வருடத்திற்கும் மேலாக மோதல் இடம்பெற்ற வந்த நிலையில் போர் நிறுத்தத்தின் இரண்டாவது நாளில், எல்லைக்கு அருகில் உள்ள மார்கபாவில் பொதுமக்களை இலக்கு வைத்து இஸ்ரேல் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டதாக லெபனான் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

காசா மீதான இஸ்ரேலின் போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேலிய தாக்குதல்களில் லெபனானில், சுமார் 3,961 பேர் உயிரிழந்துள்ளதுடன் 16,520 பேர் காயமடைந்துள்ளனர்.

# ஏவுகணைத் தடுப்பு ஆயுதத்தை உருவாக்கிய தென்கொரியா

ஏவுகணைத் தாக்குதலை எதிர்கொள்ள தற்காப்பு ஆயுதத்தை உருவாக்கியுள்ளதாக தென்கொரியா அறிவித்துள்ளது. அண்டை நாடான வடகொரியாவின் அணுவாயுத அச்சுறுத்தல்களுக்காக

அந்த ஆயுதம் உருவாக்கப்பட்டு ள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்.எஸ்.ஏ.எம் எனப்படும் இந்த ஆயுதத்தைக் கொண்டு தங்களை நோக்கி வரும் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களைத் தடுக்க முடியும்.

சுமார் 10 ஆண்டுகளாக இந்த ஆயுதம் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்து அமைப்பின் தலைவர் கைது : ஷேக் ஹசீனா கடும் கண்டனம்

இந்து அமைப்பின் தலைவர் சின்மாய் கிருஷ்ணதாஸ் கைது செய்யப்பட்டமைக்குக்கு பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

பங்களாதேஷில் உள்ள “சம்மிலிதா சனாதனி ஜோதே“ என்ற இந்து அமைப்பின் தலைவர் சின்மாய் கிருஷ்ண தாஸ் பிரம்மச்சாரி. இவர்,“இஸ்கான்“ எனப்படும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் முன்னாள் நிர்வாகியாகவும் இருந்துள்ளார்.



இந்த நிலையில், கடந்த மாதம் 30 ஆம் திகதி இந்து அமைப்பினர் நடத்திய ஊர்வலத்தின் போது, பங்களாதேஷ் தேசிய கொடியை அவமதித்ததாக கிருஷ்ண தாசை அந்நாட்டு போலிஸார் கைது செய்தனர். தேச துரோகம் உட்பட 18 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரது பிணை மனுவும் நிராகரிக்க ப்பட்டது. இவரது கைதுக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள ஷேக் ஹசீனாவும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இந்து மதத்தை சேர்ந்த தலைவரை பொலிஸார் தவறாக கைது செய்துள்ளனர். அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்” என்றார்.

இதேவேளை, நாட்டில் இந்து சமூகத்தின் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், இஸ்கானைத் தடை செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அந்த இயக்கத்தின் நடவடிக்கைகளை தடை செய்வதற்கும் பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

இஸ்கான் நிறுவனத்திற்கு தடை கோரிய மனு மீதான விசாரணையின் போது, அரசு அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அந்நாட்டு சட்டமா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



# 100 ஆண்டுகளில் இல்லாத மோசமான சாதனை
# 83 பந்துகளில் ஆட்டமிழந்தது இலங்கை

ஆர்.மனோ

21ஆம் நூற்றாண்டில் இன்னிங்ஸ் ஒன்றில் குறைந்த டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்ற உலகின் மூன்றாவது அணி என்ற மோசமான சாதனையை இலங்கை அணி படைத்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரண்டுப் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதன் முதல் போட்டி கடந்த 27ஆம் திகதி டர்பனில் ஆரம்பமானது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி 191 ஓட்டங்களை பெற்றிருந்த போது சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இன்னிலையில், தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 42 ஓட்டங்களை பெற்றிருந்த போது சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இந்த மோசமான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 100 ஆண்டுகளில் இல்லாத ஒரு மோசமான சாதனையை படைத்துள்ளது. இலங்கை அணி வெறும் 83 பந்துகளை (13.5 ஓவர்கள்) மட்டுமே விளையாடி சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இது இலங்கை அணிக்கு கடந்த 100 ஆண்டுகளில் பதிவான முதல் மோசமான இன்னிங்ஸாக மாறியது.

இதற்கு முன்னர் 1924ம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் ஒரு இன்னிங்ஸில் வெறும் 75 பந்துகளில் (12.3 ஓவர்கள்) மட்டுமே விளையாடி தென்னாபிரிக்கா அணி 30 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்திருந்தது.

கடந்த தசாப்தத்தில், கிரிக்கெட் உலகை வியப்பில் ஆழ்த்திய மூன்று அதிர்ச்சிகரமான துடுப்பாட்டம்

**3. இலங்கை - 42/10 எதிர் தென்னாப்பிரிக்கா, 2024**

டர்பனில் உள்ள கிங்ஸ்மீட் மைதானத்தில் நடைபெற்ற இலங்கை மற்றும் தென்னாப்பிரிக்கா இடையிலான டெஸ்ட் போட்டியின் போது, மார்கோ ஜான்சன் மற்றும் ஜெரால்ட் கோட்ஸியின் வேகத்தில் இலங்கை தடுமாறியது. இந்தப் போட்டியில் இலங்கை அணி 42 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. மார்கோ ஜான்சன் 13 ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இலங்கை அணி இன்னிங்ஸ் ஒன்றில் பெற்றுக்கொண்ட குறைந்த ஓட்டங்களாகும். மேலும், இது இலங்கை அணியின் பெருமைமிக்க கிரிக்கெட் வரலாற்றில் ஒரு கறுப்பு புள்ளியாக மாறியுள்ளது.

**2. அயர்லாந்து - 38/10 எதிர் இங்கிலாந்து, 2019**

2019ஆம் ஆண்டு லார்ட்ஸ் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இங்கிலாந்துக்கு எதிராக அயர்லாந்து 38 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. முதல் இன்னிங்ஸில் 85 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து அணியை ஆட்டமிழக்கச் செய்தது. தனது முதல் இன்னிங்ஸில் விளையாடிய அயர்லாந்து 207 ஓட்டங்களை பெற்றிருந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 303 ஓட்டங்களை குவித்து 183 என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது. எனினும், இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சுக்கு தடுமாறிய அயர்லாந்து 38 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதில் அங்கிலாந்து அணி 143 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அந்த அணியின் கிறிஸ் ஆறு விக்கெட்டுகளையும், ஸ்டுவர்ட் பிராட் நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

**1. இந்தியா - 36/10 எதிர் அவுஸ்திரேலியா, 2020**

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி பெற்றுக்கொண்ட 36 ஓட்டங்களே டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்றுக்கொண்ட மிக குறைந்த ஓட்டங்களாகும்.

இந்தப் போட்டியில் 55 ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றிருந்த நிலையில், தனது இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 21.2 ஓவர்களில் 36 ஓட்டங்களுக்கு ஆட்டமிழ்ந்தது. டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஜாம்பவான்களாக கருதப்பட்ட விராட் கோலி, புஜாரா உள்ளிட்டவர்கள் ஓட்டங்களை எடுக்க முடியாமல் தடுமாறியிருந்தனர். ஜோஷ் ஹேசில்வுட் ஐந்து விக்கெட்டுகளையும், பட் கம்மின்ஸ் நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர். இந்தப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் எட்டு விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிஃபா தரவரிசை
## இலங்கை 200வது இடத்திற்கு முன்னேற்றம்



சர்வதேச கால்பந்து பேரவை (FIFA) வெளியிட்டுள்ள கால்பந்து அணிக ளுக்கான புதிய தரவரிசை பட்டியலில் இலங்கை மூன்று இடங்கள் முன்னேறி 200வது இடத்தைப் பிடித்துள்ளது.

210 நாடுகளைக் கொண்ட பிஃபா தரவரிசைப் பட்டியல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இதில் லியோனல் மெஸ்ஸி தலைமையிலான உலக சம்பியன் அணியான ஆர்ஜன்டினா முதலிடம் பிடித்துள்ளது.

பிரான்ஸ் இரண்டாவது இடத்திலும் ஸ்பெயின் மூன்றாம் இடத்திலும் உள்ளன. மேலும், ஜேர்மன் அணி ஒரு இடம் முன்னேறி முதல் 10 இடங்களுக்கு மீண்டும் வந்துள்ளது.

இங்கிலாந்து மற்றும் பிரேசில் அணிகள் முறையே நான்காம் ஐந்தாம் இடங்களில் உள்ளன. போர்ச்சுகல் மற்றும் நெதர்லாந்து ஒரு இடம் முன்னேறி முறையே ஆறாவது மற்றும் ஏழாவது இடத்திலும், பெல்ஜியம் இரண்டு இடங்கள் சரிந்து எட்டாவது இடத்திலும் உள்ளன. ஒன்பதாவது இடத்தில் இத்தாலி உள்ளது. தெற்காசிய நாடுகளில் பாகிஸ்தான் 198வது இடத்தில் இருப்பதோடு பங்களாதேஷ் 185வது இடத்தில் உள்ளது. பிராந்தியத்தில் உச்ச இடத்தில் இருக்கும் இந்தியா இரண்டு இடங்கள் சரிந்து தரவரிசையில் 127வது இடத்தை பிடித்துள்ளது.

2023ஆம் ஆண்டு ஜுலையில் இந்தியா 99வது இடத்தில் இருந்தது. 2017ஆம் ஆண்டு 129 இடத்திற்கு தள்ளப்பட்டதன் பின்னர் ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்தியா சரிவை சந்தித்துள்ளது.



**முதல் பத்து இடங்களில் இருக்கும் அணிகளும் புள்ளிகளும்**

1. அர்ஜென்டினா - 1867.25
2. பிரான்ஸ் - 1859.78
3. ஸ்பெயின் - 1853.27
4. இங்கிலாந்து - 1813.81
5. பிரேசில் - 1775.85
6. போர்ச்சுகல் - 1761.27
7. நெதர்லாந்து - 1761.27
9. இத்தாலி - 1731.51
10. ஜெர்மனி - 1703.79

# 100ஐ கடந்தார் பிரபாத் ஜயசூரிய

அரபாத் பஹர்தீன்




சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் ஐந்தாம் இடத்தையும், இலங்கை வீரர்கள் வரிசையில் முதலாம் இடத்தையும் தனதாக்கினார், இடதுகை சுழல் பந்து வீச்சாளர்களான பிரபாத் ஜயசூரிய.

இலங்கை அணியின் இடதுகை சுழல்பந்து வீச்சாளரான பிரபாத் ஜயசூரிய சமீப காலமாக இலங்கை அணியின் டெஸ்ட் வெற்றிக்கு மிகப்பெரிய பங்கினை ஆற்றி வருகின்றார்.

அதற்கேற்ப இலங்கை அணி தற்சமயம் தென்னாப்பிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது.

அதில் கடந்த 27ஆம் திகதி ஆரம்பித்த முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாப்பிரிக்கா அணி முதல் இன்னிங்ஸில் 191 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதில் பிரபாத் ஜயசூரிய இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்த அவரின் மொத்த விக்கெட்டுக்களின் எண்ணிக்கை 99 ஆக மாறியது.

இந்நிலையில் இப்போட்டியில் தென்னாப்பிரிக்க அணிதனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்திருக்க அந்த அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான டொனி டி ஷொர்சியின் விக்கெட்டை பிரபாத் ஜயசூரிய கைப்பற்றினார்.

இதன்மூலம் சர்வதேச டெஸ்ட் அரங்கில் பிரபாத் ஜயசூரிய தனது 32வது போட்டியில் தனது 100வது விக்கெட்டை கைப்பற்றினார்.

இதனால் உலக டெஸ்ட் அரங்கில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் ஐந்தாம் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

மேலும் இலங்கைப் பந்துவீச்சாளர்களில் மிகக் குறைந்த போட்டியில் 100 விக்கெட்டுக்களை வீழ்த்தி அப்பட்டியலில் முதல் இடத்தினைப் பெற்றுக் கொண்டார்.

33 வயதான பிரபாத் ஜயசூரிய இதுவரையில் பத்து விக்கெட்டுக்கள் பிரதியை இரண்டு முறையும், ஐந்து விக்கெட்டுக்கள் பிரதியை ஒன்பது முறையும் கைப்பற்றி அசத்தியுள்ளார்.

மேலும் இவரது மிகச் சிறந்த பந்துவீச்சு பிரதியாக 52 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை விமானப்படை; திறந்த ஸ்குவாஷ் போட்டி - 2024




இலங்கை விமானப்படையினால் 16வது தடவையாக நடாத்தப்பட்ட விமானப்படை திறந்த ஸ்குவாஷ் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ வின் தலைமையில் இரத்மலானை விமானப்படை தள ஸ்குவாஷ் வளாகத்தில் நடைபெற்றது.

சர்வதேச விதிகளுக்கு அமைவாக இலங்கை ஸ்குவாஷ் சம்மேளனத்தின் பூரண மேற்பார்வையின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட விமானப்படை திறந்த ஸ்குவாஷ் போட்டிக்காக, இந்திய விமானப்படை வீரர்கள், நாட்டின் முன்னணி ஸ்குவாஷ் வீரர்கள் மற்றும் புதிய வீரர்கள் உட்பட 450ம் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்குபற்றினர்.

இப்போட்டியில், சர்வதேச தரவரிசைப் போட்டிகளாக திறந்த ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு போட்டிகள் நடைபெற்றன. இந்தப் போட்டியின் திறந்த ஆண்கள் பிரிவின் இறுதிப் போட்டிக்கு மெட்டில் வுட் மற்றும் ஷமில் வக்கீல் தகுதி பெற்றனர். மற்றும் ஷமில் வக்கீல் 3-0 என்ற சுற்றில் வெற்றி பெற்று எயார் சீஃப் மார்ஷல் PH மெண்டிஸ் சவால் கிண்ணத்தை வென்றார்.

இந்திய வீராங்கனை அஞ்சலி சாமுவேல் மற்றும் கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலய வீராங்கனை சனித்மா சினலி ஆகியோர் திறந்த பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டியில் போட்டியிட்டதுடன், இந்திய வீராங்கனை அஞ்சலி சாமுவேல் எயார் சீப் மார்ஷல் ஹரி குணதிலக்க நினைவுக் கிண்ணத்தை 03-02 எனும் சுற்றில் வென்று சாதனை படைத்துள்ளார்.

# ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கிய நட்சத்திரத்திற்கு தடை

ஊக்கமருந்து சர்ச்சை காரணமாக பிரபல போலந்து டென்னிஸ் நட்சத்திரம் இகா ஸ்வியாடெக்கிற்கு ஒருமாதம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான டென்னிஸ் தரவரிசையில் இகா ஸ்வியாடெக் இரண்டாம் இடத்தில் இருப்பதுடன், ஐந்து முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார்.

அவரிடம், கடந்த ஓகஸ்ட் மாதம், போட்டியில் பங்கேற்காத போது, நடத்தப்பட்ட ஊக்க மருந்து பரிசோதனையில் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தியது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து அவர் ஒரு மாதம் இடைநீக்கம் செய்யப்பட்டார். அத்துடன் அவருக்கு அபராதமும் விதிக்கப்பட்டது. பின்னர் மேல்முறையீடு செய்ததால் இடைநீக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

தனக்கு விதிக்கப்பட ஒரு மாத தடையை முறைப்படி ஏற்றுக்கொள்வதாக 23 வயதான ஸ்வியாடெக் தற்போது அறிவித்துள்ளார் நிலையில், அவர் ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கிய தகவல் வெளியாகியுள்ளது.

"இது தெரியாமல் நடந்த தவறு, பயண களைப்பு, தூக்கமின்மை பிரச்சினைக்காக எடுத்த மெலடோனின் மருந்தால் தான் இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளதாக"-ஸ்வியாடெக் அளித்த விளக்கத்தை விசாரணை குழுவினர் ஏற்றுக்கொண்டனர்.

இதனால், வேண்டுமென்றே செய்யாததால் அவருக்கு தண்டனை குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அவர், எதிர்வரும் நான்காம் திகதிக்கு பின்னர் போட்டிகளில் பங்கேற்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# WPL கிரிக்கெட் தொடர் டிச. 15 இல் மினி ஏலம்

WPL என்று அழைக்கப்படும் பெண்கள் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடருக்கான மினி ஏலம் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

ஐபிஎல் கிரிக்கெட் தொடர் போன்று பெண்களுக்கான டி20 கிரிக்கெட் தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் ஐந்து அணிகள் பங்கேற்கின்றன.

ஐந்து அணிகளும் 71 வீராங்கனைகளை தக்கவைத்துள்ள நிலையில், ஏனைய வீராங்கனைகள் ஏலத்தில் வாங்கப்படவுள்ளனர். இந்த நிலையில் WPL போட்டிக்கான வீராங்கனைகளின் மினி ஏலம் டிசம்பர் 15ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

பெங்களூரில் இடம்பெறும் ஒரு அணிக்கு 15 கோடி ரூபாய் (இந்திய ரூபாய்) வரை செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட ஒன்றரை கோடி அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிட்டெட்" நிறுவனத்தினால் 2024 டிசம்பர் 01ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ்: 08 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (01.12.2024)


# இனவாதம் இல்லாத ஆட்சியும் உரிமைகளுக்கான உத்தரவாதமும்



**எம்.எஸ். அமீர் ஹுசைன்**

2019 ஆம் ஆண்டு நொவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 69 இலட்சம் வாக்குகளுக்கு மேல் பெற்று கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டு உரை நிகழ்த்தியபோது "நான் பெரும்பான்மை சிங்கள மக்களது வாக்குகளால் தெரிவாகிய ஜனாதிபதி. எனவும் இலங்கையில் பெரும்பான்மையினரது உரிமைகளை பாதுகாத்து உறுதிப்படுத்துவேன் என பௌத்த மத, கலாசர, பண்பாட்டு உரிமைகளை பேணிப் பாதுகாக்க கடமைப்பட்டிருக்கின்றேன்" எனவும் மிகவும் காரசாரமாக உரை நிகழ்த்தி சிங்கள பௌத்தர்களது ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார். சிங்கள மக்கள் இதுகால வரை தேடிய சிங்கள தீபத்திற்கான உண்மையான தலைவர் இப்போதுதான் கிடைத்திருக்கின்றார் என்று மஹிந்த ராஜபக்ஷவை விட ஒருபடி மேல் சென்று பாராட்டினர்.

அப்படிச் சொன்ன அவர் கூட ஜனாதிபதி சட்டத்தரணியாக இருந்த அலிசப்ரியை தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றத்திற்கு உள்வாங்கி நீதி அமைச்சர் பதவியை கொடுத்திருந்தார். இத்தகைய பின்னணியில், தற்போது அதற்கு நேர்மாறான முறையில் பதவிக்கு வந்த ஒரு அரசாங்கமே தேசிய மக்கள் சக்தி அரசாகும். ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் பெரும்பான்மையான முஸ்லிம் வாக்காளர்கள் அநுரகுமார திசாநாயக்கவின் பேச்சில் வசப்பட்டு அக்கட்சிக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்து வெற்றிக் களிப்பில் திகைத்துப் போய் இருக்கின்றனர்.

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை நியமனம் 2024.11.18 ஆம் திகதி இடம்பெற்றது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 21 பேரை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக நியமித்துள்ளார். ஆனாலும், அக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இருந்து முஸ்லிம்கள் சார்பாக 07 பேர் தேர்தல் மூலமும் 02 பேர் தேசிய பட்டியல் மூலமும் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி இருந்தும் ஒருவரைக்கூட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக நியமித்து வெற்றிக்காக வாக்களித்த மக்களை கண்ணியப்படுத்த அவர் தவறிவிட்டார். அதனைத் தொடர்ந்து 2024.11.21 ஆம் திகதி 29 பேர் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்களில் தொடர்ச்சியாக அரசியல் மேடைகளில் ஏறி தேசிய மக்கள் சக்திக்காக குரல்கொடுத்த மௌலவி முனீர் முலப்பருக்கு மாத்திரம் தேசிய நல்லிணக்க பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக

## முஸ்லிம் சமூகம் அடைந்துள்ள ஏமாற்றம்

இந்த சமூகத்திற்குள் இன்னும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அந்த அடிப்படையில் தமிழர்கள், கிறிஸ்தவர்கள் என்று அமைச்சரவைக்குள் இருந்தாலும் முஸ்லிம் ஒருவரையும் அமைச்சராக நியமித்தால் அது இனவாத அடிப்படையில் பார்க்கப்படும் என்பது இந்த ஆட்சியின் தத்துவமாக மாறி இருக்கின்றது. ஆனாலும், தமிழர் ஒருவரை அமைச்சரவையில் நியமிக்காமல் இருந்திருந்தால் அது ஒருவிதமான இன ஒதுக்கல் என்றுகூட சர்வதேசம் கேள்வி எழுப்புகின்ற அளவிற்கு பாரிய பிரச்சினையாக மாறி இருக்கலாம். அது சர்வதேச உதவிகளைக் கூட பாதிக்கும் அளவிற்கு சென்றிருக்கலாம். ஆனாலும், இந்த நாட்டில் பிரதானமாக நான்கு பிரிவின் வாழ்ந்து வருகின்றனர். இந்த பிரிவினர்க்கு ஆட்சி கொள்கையில் அல்லது தத்துவத்தில் பாரபட்சம், ஒதுக்கல்கள் இடம்பெறுவதில்லை என்று சர்வதேசத்திற்கு காட்ட வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு ஏற்படவில்லை. ஏனெனில், சமூக உடமைவாத சோசலிச கொள்கை, தத்துவத்தின் வெளிப்பாடு இவ்வாறுதான் அமையும் என்பதை உலகிற்கு பறைசாற்றி இருக்கின்றது இந்த அரசாங்கம்.

முஸ்லிம் சமூகத்திற்கு அரச கொள்கை மூலம் எந்த அநீதி, பாரபட்சம் ஏற்பட்டாலும் அதனை தட்டிக் கேட்க யாரும் முன்வரமாட்டார்கள் என்பது உறுதியாக தெரிகின்றது. வாக்களித்த இதே முஸ்லிம் சமூகமே அரசாங்கத்தின் நிலைப்பாடு சரி என்று நியாயம் சொல்லும் அளவிற்கு பிற்போக்கு சமூகமாக மாறி இருக்கின்றது. ஏனெனில், நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி இருக்கின்ற அக்கட்சி சார்பான உறுப்பினர்களிலும் அந்தளவிற்கு கவனம் செலுத்தக் கூடியவர்கள் இருப்பார்கள் என்று கருத முடியவில்லை. அதனால் எதிர்காலம் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்திற்கு சில சந்தர்ப்பங்களில் இருண்டதாக மாறினாலும் சந்தேகம் இல்லை. ஆபத்தான எந்தவொரு சட்டமூலத்தையும் எதிர்ப்பதற்கு பலமான எதிர்க்கட்சியும் இல்லை. அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முன்னர் அறிந்து கொள்வதற்கு அல்லது அமைச்சரவைக்கு வருகின்ற போது அதன் சாதக பாதகங்களை எடுத்துக் கூறி எதிர்ப்பை வெளிப்படுத்த இனி எந்தவிதமான சந்தர்ப்பங்களும் இல்லை.

அத்துடன், ஆளும் கட்சியின் பலம் தனிக்கட்சியாக 159 ஆசனங்களாக இருப்பதால் ஆளும் கட்சிக்குள் இருக்கின்ற முஸ்லிம் எம்.பி. க்கள் எதிர்த்தாலும் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும். அந்தளவிற்கு அரசாங்கம் பலமுடையதாக இருக்கின்றது. முஸ்லிம்கள் அவர்களுக்கான உரிமை என்ற ஒரு விடயத்தை பேசும் போது அது இனவாதமாக முத்திரை குத்த முயற்சி எடுக்கப்படும் என்ற அச்சம் காரணமாக ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் 09 முஸ்லிம்

> ஆபத்தான எந்தவொரு சட்டமூலத்தையும் எதிர்ப்பதற்கு பலமான ஓர் எதிர்க்கட்சி இல்லாத நிலையில், அவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முன்னர் அறிந்து கொள்வதற்கு அல்லது அமைச்சரவைக்கு வருகின்ற போது அதன் சாதக பாதகங்களை எடுத்துக் கூறி எதிர்ப்பை வெளிப்படுத்த முஸ்லிம்களுக்கு இனி எந்தவிதமான சந்தர்ப்பங்களும் கிடையாது

உறுப்பினர்களும் மௌனம் காப்பதை தவிர வேறு வழி இருக்காது.

எவ்வாறாயினும், இந்த நாட்டில் பல்கலைக்கழக அனுமதி, தொழில் வாய்ப்பு, மத விடயங்கள், அரசியல், பொருளாதார விவகாரங்கள் என்று பல விடயங்களில் முஸ்லிம் சமூகத்திற்கும் தேசிய நீரோட்டத்தில் உரிய அந்தஸ்து கிடைக்க வேண்டும் என்பதற்காக குறைந்தபட்சம் இன விகிதாசாரமாவது கடைபிடிக்கப்பட வேண்டும் என்ற கடப்பாடுகள் கடந்த காலங்களில் இருந்து வந்திருக்கின்றது. அந்த அடிப்படையில் பார்த்தால் சகோதர தமிழ் சமூகத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவது போல் முஸ்லிம்களுக்கும் இன விகிதாசார அடிப்படையிலான 08 வீதமாவது கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்றது. அப்படியாக கவனத்தில் எடுக்கப்பட்டால் குறைந்தபட்ச வாய்ப்பாவது கிடைக்கலாம். ஆனாலும், புதிய ஆட்சியில் இனவாதம் இல்லை, நாம் இலங்கையர் என்ற அடிப்படையில் எல்லா விடயங்களையும் நோக்கினால் முஸ்லிம் சமூகம் எதுவும் அற்ற சமூகமாக மாறலாம். இதற்கு சிறந்த உதாரணமாக அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனத்திலும் ஒரு முஸ்லிமாவது இடம்பெறவில்லை என்பதை குறிப்பிடலாம்.

இனி அரச கொள்கைகளில் முஸ்லிம்களுக்கென்று தனியாக எதுவும் வழங்கப்படுவதற்கான சாத்தியம் இல்லை. அப்படி இருந்தாலும் இதுவரையில் முஸ்லிம்கள் அனுபவித்து வருகின்ற தனித்துவமான உரிமைகளை முற்றாக ஒழித்துக்கட்டும் நிலை ஏற்படலாம் என்ற அபாய அறிவிப்பு இந்த அமைச்சரவைக்கு ஒரு முஸ்லிமையாவது நியமனம் செய்யாததில் இருந்து தெரிகின்றது.

ஆனால், கடந்த கால ஆட்சிகளின் போது முஸ்லிம்களுக்கு கணிசமான அளவில் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டிருந்தமை கவனத்திற்குரியது. அதன்படி,1947 ஆம் ஆண்டு டி.எஸ். சேனாநாயகவின் அரசாங்கத்தில் டி.பி ஜாயா தொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். 1952 இல் டட்லி அரசாங்கத்தில் எம். சி.எம் கலீல் தொழில் சமூக சேவைகள் அமைச்சராக இருந்தார். 1953 இல் ஜோன் கொதலாவல அரசாங்கத்திலும் அவரே அதே அமைச்சு பொறுப்பை வகித்தார். 1956 பண்டாரநாயக்கா அரசாங்கத்தில் சீ.ஏ.எஸ். மரிக்கார் தபால் தொலைத் தொடர்புகள் மற்றும் வானொலி அமைச்சராக இருந்தார். 1959 தஹநாயக்கா அரசாங்கத்திலும் அவரே அதே பதவியை வகித்தார். 1960 இல் டட்லி அரசாங்கத்தில் எம்.சீ.எம் கலீல் உள்நாட்டலுவல்கள், கிரமிய அபிவிருத்தி அமைச்சராக இருந்தார். இவ்வாறாக 1966, 1970, 1977, 1983, 1988, 1994, 2001, 2005, 2010, 2015, 2019 என்று பதவிக்கு வந்த எல்லா அரசாங்கங்களிலும் அமைச்சரவை அந்தஸ்துள்ள முஸ்லிம் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். வரலாற்றில் முஸ்லிம் அமைச்சர் ஒருவர் இல்லாத அமைச்சரவை இன்றைய அரசாங்கத்திலேயே இடம்பெற்றுள்ளது.

காலத்திற்கு காலம் இன அடிப்படையிலான நெருக்குதல்கள், நசுக்குதல்கள், பாரபட்சங்கள் ஏற்பட்டதால் தான் சில சந்தர்ப்பங்களில் இன அடிப்படையிலான ரீதியில் அவ்வாறு சிந்தித்து உரிமைகளுக்கான கோசங்களை எழுப்ப வேண்டி ஏற்பட்டது என்பதையும் மறந்துவிட முடியாது. எவ்வாறாயினும் ஆட்சி மாற்றத்தின் பங்காளிகளில் முஸ்லிம் சமூகத்திற்கும் பாரிய பங்கு இருக்கின்றது. சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அதன் நாடாளுமன்ற ஆசனங்களில் கிடைக்க வேண்டியிருந்த 10 ஆசனங்களை இழந்ததென்றால் அதற்கும் காரணம் முஸ்லிம் வாக்குகளாகும். முழுமையாக முஸ்லிம் வாக்காளர்கள் அநுரவை நம்பி அவர் நல்லதை செய்வார் என்று வாக்களித்தனர். இனியும் அந்த நம்பிக்கை வீண் போகாதபடி பாதுகாக்க வேண்டியது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தினதும் அமைச்சரவையினதும் பொறுப்பாகும். அந்த நம்பிக்கை எதிர்வரும் ஐந்து வருடகால ஆட்சியிலும் வீண்போகாதபடி காத்துக் கொள்ளல் வேண்டும்.



# ஹோட்டல் புதினங்கள்

*ஹோட்டல் செல்வதில் சிலருக்கு விருப்புண்டு, இன்னும் சிலருக்கோ வெறுப்புண்டு .. விருப்புக்கு காரணம் மாற்றமான ருசி தேவை என்பதாகும்.. வெறுப்புக்கு காரணம் சுத்தம் பேணாமை என்பதாகவே இருக்கும்.

*சைவ ஹோட்டல்களில் சுத்தம் உள்ளதென்பார், ஆனால், ஹோட்டல் வெயிட்டரோ நிலம் முழுதும் கோலம் போடும் வேஷ்டியின் அடிப்பாகத்தை பிடித்துப் பிடித்தே மடித்துக் கட்டுவார் .. பின்னர் அந்த கைகளை கழுவாமலேயே உணவுகளையும் தொட்டுத் தொட்டு பரிமாறுவார் ..ஆக! தரையிலிருந்த அசுத்தம் வயிற்றுக்குள் இரவில் கோலம் போடும்.

* உணவெல்லாம் உண்பார், பின் உண்டு விட்டு கறிகள் கொஞ்சம் மிச்சம் வைப்பார்.. அத்துடன் எழுந்து செல்வார்.. மிச்சமான அந்த கறிகளையே எறியாமல் ஹோட்டல்காரரும் அடுத்து வருபவருக்கும் பரிமாறுவார்.. உண்மை அறியா வாடிக்கையாளரும் வெயிட்டருக்கு டிப்ஸ் வைத்தே அப்பாவியாய் ஏப்பம் விட்டுச் செல்வார்.



* சிலர் ஹோட்டலில் வெயிட்டர்மார் தட்டில் "ஷோர்ட் ஈட்ஸ்" போன்றவற்றை கொண்டு வந்து வைக்கும் போது, அதிலுள்ள எல்லாவற்றையும் தொட்டுத் தொட்டுப் பார்த்து விட்டு ஒரு சிலவற்றை மட்டுமே உண்பார்கள்.. ஏனையவற்றை மிச்சமாக வைத்து விடுவார்கள். பிறகென்ன, அடுத்து வரும் நபருக்கும் அந்த தொட்டுப்பார்த்த உணவே உணவாகும்.

* சாப்பிட்டு முடித்ததும் அதற்கான காசை கொடுத்தாலும், வெயிட்டர் ஐயாவிற்கு கொடுக்க வேண்டிய டிப்ஸை தாராளமாக கொடுத்தால் அடுத்த முறையோ அந்த வாடிக்கையாளருக்கு ராஜ உபசாரம் தான்.. தப்பித் தவறி டிப்ஸ் வைக்காவிட்டால் கோபக்காரரை பார்ப்பது போல்தான் வெயிட்டார் ஐயா நோக்குவார்.. எதை ஓடர் செய்தாலும் அவர் மனது வைத்தால் தான் மேசைக்கு சாப்பாடு வரும். இல்லையேல் அம்பேல் தான் போங்கள்..எல்லாம் டிப்ஸ் செய்யும் ஜாலம் ..

* டீ குடித்தாலும், பிளேன் டீ குடித்தாலும், ஏற்கனவே கிளாஸ்களை கழுவிய அதே நீரில் அடுத்தடுத்த கிளாஸ்களையும் கழுவி ஒரு மொங்கு மொங்குவாரே டீ போடுபவர்.. அப்பப்பா என்னே ஒரு அசத்தல், மொத்தத்தில் அசத்தல் அது அசுத்தம் தான்..

* கொத்து பாஸ் கெத்தாக கொத்து போடும் சத்தத்தில் ஹோட்டலில் ஒலிக்கும் பாடலை கேட்பதா, இல்லையேல் கொத்துவில் எழும் துள்ளல் சத்தத்தை கேட்பதா என்ற குழப்பத்தில் பேசாமல் மொபைல் ஹெட் ஃ போனை காதில் மாட்டிக் கொள்வதே மேல் என்ற நிலையில் சில வாடிக்கையாளர்கள்.. இன்னும் சிலரோ அனிருத் ரசிகர்களாக கொத்து பாஸின் ரசிகர்களாகிடுவர், இதுவும் ஒரு வகையில் இரவு நேர அலாதிதான்.

-ரிஷா









# முகம் தெரிந்ததும் வந்துவிடு

“அப்பா நான் ஊரில் உள்ள மாமனார் வீட்டுக்குப் போய் வருகிறேன்” என்று மகன் கூறியதைக்கேட்டு அப்பா அதற்கு தடை விதிக்க விரும்பவில்லை. அவனுக்கும் உலக அனுபவம் ஏற்பட வேண்டுமே. அதனால் போய் வரட்டும் என்று நினைத்து, “சரி மகனே போய்விட்டு வா, ஆனால் ஒன்று, முகம் தெரிந்ததும் வந்துவிடு” என்று கூறினார்.

அவனுக்கு எதுவும் புரியவில்லை. முகம் தெரிந்ததும் வந்துவிடவா. அப்பா என்ன சொல்கிறார் என்று நினைத்த அவனுக்கு அப்பாவிடம் எதிர்த்து கேள்வி கேட்கவும் துணிச்சல் இல்லை. அதனால் எதுவும் கேட்காமலே புறப்பட்டுச் சென்றான்.

மாமா வீட்டுக்குப் போனதும் அவனுக்கு அங்கு நல்ல வரவேற்பு. ஆஹா, ஓஹோ என்று எல்லோரும் அவனை உபசரித்தார்கள். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. ஆஹா மாமா வீட்டவர்கள் நம்மை எப்படியெல்லாம் உபசரிக்கிறார்கள் என்று பூரித்துப் போனான். அன்று சாப்பாட்டுக்கு அவனுக்காகவே ஆடு அறுத்து கறி சமைத்து விருந்து படைத்தார்கள். அவனும் ஒரு பிடி பிடித்தான்.

மறுநாள் போக நினைத்தவன் நின்று விட்டான். அன்றும் ஓரளவு பிரமாதமாக உபசாரம் நடந்தது. அன்று கோழிக்கறி சமைத்து விருந்து படைத்தார்கள்.

அடுத்த நாளும் அவன் ஊருக்குத் திரும்பாமல் நின்று விட்டான். அன்றும் உபசாரம் தொடர்ந்தது. ஆனால், கொஞ்சம் குறைந்துவிட்டது போல ஓர் உணர்வு. அன்றைய தினம் மீன் சமைத்து விருந்து படைத்தார்கள்.

அடுத்த நாளும் அவன் ஊருக்குத் திரும்பவில்லை. அன்று சாப்பாட்டிற்கு கொஞ்சம் சோறும் ஒரு துண்டு கருவாட்டு பொறியலும் வைக்கப்பட்டு இருந்தது.

நன்றாக சிரித்துப் பேசி இருந்தவர்கள் எல்லாம் அவனுடன் பேசக்கூட இல்லை. அவனுக்கு இது புரியாத புதிராக இருந்தது. மறுநாளும் அவன் ஊருக்குத் திரும்பவில்லை. அன்றைய தினம் அவனுக்கு சாப்பாட்டுக்கு தட்டில் சிறிதளவு சோறும் அதனுடன் கொஞ்சம் தண்ணீரும் ஊற்றி வைத்திருந்தார்கள். ஆனால், அவனை “சாப்பிடுங்கள்” என்று கூட யாரும் சொல்லவில்லை. இருந்தாலும் பசி காரணமாக அதனை சாப்பிட்டான்.

அதற்கு மறுநாள் நடந்தது மேலும் கொடுமை. சாப்பாட்டுத் தட்டைப் பார்த்ததும் அவனுக்குப் பெரும் அதிர்ச்சி. காரணம்,,,? சாப்பாட்டுத் தட்டில் கொஞ்சம் தண்ணீர் மட்டுமே ஊற்றி வைக்கப்பட்டிருந்தது.

சரி என்னதான் நடக்கிறது என்று பார்ப்போம் என்று அவன் தண்ணீரைக் குடித்துப் பசியை போக்கிக் கொண்டான்.

அடுத்த நாளும் ஊருக்குத் திரும்பாமல் என்னதான் நடக்கிறது என்று பார்ப்போம் என்று பேசாமல் இருந்தான்.

அன்று சாப்பாட்டு நேரத்தில் நடந்ததுதான் பெரும் கொடுமையிலும் கொடுமை. சாப்பாட்டுத் தட்டில் எதையுமே காணவில்லை மெதுவாக தட்டை எடுத்து முகத்துக்கு நேராக பிடித்துப் பார்த்தான். அப்பொழுது அந்தத் தட்டில் அவனுடைய முகம் தெரிந்தது. அப்பா சொன்ன வார்த்தையின் அர்த்தம் அவனுக்கு அப்பொழுதுதான் புரிந்தது.

அப்பா இதைத்தான் முகம் தெரிந்ததும் வந்துவிடு என்று கூறினாரா? அப்படியானால் இனி ஒரு நிமிடமும் இங்கு இருக்கக் கூடாது என்று நினைத்தவன் உடனே தன் ஊருக்கு திரும்ப ஆயத்தமானான்.

**(கேட்டு இரசித்தது. சொன்னவர்:**
***ஆர். சிவசாமி. ‘ஒருவன்” வாசகர், வத்தளை)***



# வாசிப்புப் பிரியர்களுக்கு




- ஒரு கோடி ரூபா கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்று சொன்னாராம் காந்தியடிகள்.
- வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்நாராம் நெல்சன் மண்டேலா.
- நான் மறைந்த பிறகு எனது சடலத்தின் மீது மலர் மாலைகள் வைக்க வேண்டாம். புத்தகங்கள் வைக்க வேண்டும் என்றாராம் ஜவஹர்லால் நேரு.
- புத்தகத்தின் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால் அதை முடிக்கும்வரை அறுவைச் சிகிச்சையை தள்ளி வைக்கச் சொன்னாராம் அறிஞர் அண்ணா.
- தன்னைத் தூக்கிலிட அழைத்தபோது, தான் படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தை முடித்து விட்டு வருகிறேன் என சாகும் தருவாயிலும் புத்தகம் வாசித்தவர் மாவீரன் பகவத்சிங்.
- மரண தண்டனை விதிக்கப்பட்டு தனக்கு நஞ்சு கொடுக்கப்படும் வரை படித்துக் கொண்டே இருந்தாராம் கிரேக்க நாட்டு சிந்தனையாளர் சோக்ரட்டீஸ்.
- ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும்போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டொலருக்கு புத்தகம் வாங்குவாராம் சார்லி சாப்ளின்.
- ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் அதிசிறந்த பரிசு ஒரு புத்தகந்தான் என்றார் வின்சன்ட் சேர்ச்சில்.
- ஒரு நாளில் பன்னிரண்டு மணி நேரத்தை வாசிப்பதிலும், வாசித்ததைச் சிந்திப்பதிலும் செலவிட்டாராம் முன்னாள் இந்திய ஜனாதிபதி டொக்டர் ராதாகிருஷ்ணன்.
- ஒரு நூலகம் திறக்கப்படும்போது, 100 சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்றார் விவேகானந்தர்.
- கைத்துப்பாக்கிகளை விட புத்தகங்களே பெரிய ஆயுதங்கள் என்றார் புரட்சியாளர் லெனின்.



# மர உச்சியில் தஞ்சமடைந்து உயிருக்குப் போராடிய பூனை

மரத்தின் உச்சியில் தஞ்சமடைந்து மீண்டு வர முடியாமல் போராடிக்கொண்டிருந்த பூனைக்குட்டியை விலங்குகள் பாதுகாப்பு அமைப்புக் குழுவினர் ஐந்து நாட்களுக்குப் பிறகு காப்பாற்றி மீட்டுக் கொண்டு வந்தனர்.

இச்சம்பவம் அமெரிக்காவில் நடைபெற்றுள்ளது. அமெரிக்காவின் அடாமஸ் மாவட்டத்திலுள்ள விலங்குகள் பாதுகாப்பு அமைப்புக் குழுவினர் இதுபற்றி தெரிவிக்கையில் “இந்தப் பூனைக்குட்டி ஐந்து நாட்களாக லயன்ஸ் பூங்காவிலுள்ள மரமொன்றின் உச்சியில் தஞ்சமடைந்து மீண்டுவரமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தது. கடும் வெப்பம் மற்றும் குளிர் என்பவற்றுக்கு மத்தியில் மிகுந்த துன்பத்தில் ஐந்து நாட்களாக போராடிக் கொண்டிருந்தது தெரியவந்ததை அடுத்து நாங்கள் அங்குபோய் இந்த பூனைக்குட்டியைக் காப்பாற்றினோம்” என்று தெரிவித்தனர்.

இந்த விலங்குகள் பாதுகாப்பு அமைப்பு சிறந்த நண்பர்களுக்கான அமைப்பின் ஒரு பங்காளருமாகும். ஆபத்தில் இருக்கும் செல்லப் பிராணிகள் மற்றும் விலங்குகளை மீட்டு காப்பாற்றுவதே இந்த அமைப்பின் செயல்பாடாகும்.



# பழங்காலத்து இராமாயண ஓலைச்சுவடிகள் கண்டெடுப்பு



இந்தியாவில் திருப்பத்தூர், வாணியம்பாடி அருகே பழங்காலத்து இராமாயண ஓலைச்சுவடிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றை தன் பாட்டி வைத்திருப்பதாக அவரின் பேரன் கொடுத்த தகவலின்பேரில் இருபக்கங்களிலும் எழுதப்பட்ட இந்த ஓலைச்சுவடிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் க.மோகன் காந்தி தலைமையில் சில கல்விமான்கள் இந்த கள ஆய்வை மேற்கொண்டனர்.

இதுகுறித்து பேராசிரியர் க.மோகன் காந்தி கூறியதாவது:

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் 3ஆம் ஆண்டு கணினித்துறை மாணவர் மோனிஷ், தனது பாட்டியிடம் பழங்காலத்து ஓலைச்சுவடிகள் இருப்பதாக தெரிவித்தார். அதன்படி வாணியம்பாடியை அடுத்த செட்டியப்பனூர் பகுதியில் வன்னிய அடிகளார் நகரில் வசிக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியை எழில் என்பவரை சந்தித்தோம். அவர் சேகரித்து வைத்திருந்த 5 கட்டு இராமாயண ஓலைச்சுவடிகளை வழங்கினார்.

இதில் 5ஆவது கட்டு ஓரளவிற்கு வாசிக்கப்பட்டது. அந்தக் கட்டில் மொத்தம் 419 ஏடுகள் உள்ளன. ஏட்டின் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஏடும் சுமார் 1.36 அடி நீளமும், 0.13 அடி அகலமும் கொண்டுள்ளன. ஒவ்வொரு ஏட்டிலும் பக்கத்திற்கு ஏழு முதல் எட்டு அடிகள் எழுதப்பட்டுள்ளன. சுவடியில் இராமாயண உரைநடைப் பகுதி தொடர்ச்சியாக உள்ளது.

தமிழ்நாட்டில் 250 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஓலைச்சுவடிகள் வாயிலாக இராமாயணம் வழக்கில் இருந்ததை இதன் மூலம் அறியலாம்.

இவ்வோலைச் சுவடி எழுத்துக்களைப் பல நாட்கள் முயன்று ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வராக இருந்து ஓய்வு பெற்ற பேராசிரியர் வே.நெடுஞ்செழியன் வாசித்தார் என அவர் தெரிவித்தார்.




1932 இல் பறவைக்கும், மனிதனுக்கும் இடையிலான யுத்தம் ஒன்று நடந்ததுபற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவுஸ்திரேலிய இராணுவம் ஈமு என்று சொல்லப்படும் நெருப்புக் கோழியை ஒத்த ஒரு மிகப்பெரிய பறவை இனத்துடன் போருக்குச் சென்றது.

இந்த ஈமு பறவை அவுஸ்திரேலியாவை பூர்வீகமாகக் கொண்டது. இவை பெரும்பாலும் கூட்டத்துடன் வந்து விளைநிலங்களை வேட்டையாடும். அவுஸ்திரேலியாவின் கேம்பியன் மாவட்டத்தில் இந்த ஈமு பறவை ஒரு பிரச்சினையாக மாறியது, கிட்டத்தட்ட 20 ஆயிரம் விவசாயிகள் இந்தப் பறவைகளால் விவசாய பயிர்களை இழந்தனர்.

எனவே, ஈமுவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைக்கு அரசாங்கம் உத்தரவிட்டது. பத்தாயிரம் சுற்று வெடிமருந்துகளுடன் பறவைகளை துப்பாக்கியால் சுட ஓர் இராணுவம் அனுப்பப்பட்டது. இரு தரப்புக்கும் இடையே போர் தொடங்கியது.

இராணுவ வீரர்கள் இந்த ஈமுக்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர், ஆனால் அதில் ஒரு ஈமு பறவையைக் கூட அவர்களால் கொல்ல முடியவில்லை. வெடிமருந்துகள் முடிந்த பிறகு, 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈமுக்கள் இருந்தன, எனவே இவற்றை அழிக்க அதிக செலவு ஆகும் என்பதால் அதனை அப்படியே அவுஸ்திரேலியா அரசு கைவிட முடிவு செய்தது.

இதுவரை வரலாற்றில் மனிதனுக்கும் பறவைக்கும் இடையே போர் நடந்ததும் இந்த நிகழ்வுதான். அதில் பறவைகளிடம் மனிதன் தோற்கடிக்கபட்டதும் இந்த ஒரு நிகழ்வுதான். இது தொடர்பாக அக்காலப்பகுதியில் “த ஈமு வோர்” (The Emu War) என்னும் சினிமா படமொன்றும் வெளிவந்ததோடு அதற்குப் பின்னரும் பல படங்கள் வெளிவந்துள்ளன.

# காந்தக் கண்ணழகி சில்க் ஸ்மிதா..!



அப்போது சில்க்-க்கு 18 வயது. ஏவிஎம் ஸ்டூடியோ முன்பு ஒரு அங்காடிக்கு வந்திருந்தபோதுதான் வினுசக்கரவர்த்தியின் கண்ணில் பட்டுள்ளார்.

அன்றைக்கு சுழல ஆரம்பித்த அந்த “வண்டிச்சக்கரம்“ வினுசக்கரவர்த்திக்கும் இறுதிவரை பெருமையையே சேர்த்து கொண்டிருந்தது.

“சில்க்குக்கும் எனக்கும் அடுத்த பிறவின்னு ஒன்னு இருந்தா, அவ எனக்கு மகளா பிறக்கணும்னு ஆசைப்படுறேன்” என்று கண்கலங்கி வினுசக்ரவர்த்தி ஒருமுறை சொல்லியிருந்தார் என்றால், அதற்கு காரணம் சில்க்-ன் வெள்ளை மனசுதான்.

வடபழனி குமரன் கொலனியில்தான் சில்க் ஸ்மிதா வீடு. தெருவில் சிறுவர்கள் விளையாடி கொண்டிருப்பதை பார்த்தால், “ஸ்கூலுக்கு போங்கப்பா, படிப்பு தான் முக்கியம்” என்ற அறிவுரைகளை தந்தபடியே இருந்திருக்கிறார்.

அரைகுறை உடையுடுத்தி சம்பாதித்த பணத்தையும், கண்ணுக்கு தெரியாமல் எத்தனையோ நல்ல காரியங்களுக்கு செலவழித்துள்ளார். நடிப்பில் சாவித்ரி போல வரவேண்டும் என்று நினைத்தவர் அதுவும் நடக்கவுல்லை..

திருமணம், குழந்தை குட்டியுடன் சராசரி குடும்ப வாழ்க்கை வாழ ஆசைப்பட்டார்.. அதுவும் ஈடேறவில்லை.. கடைசியில் அவர் ஆசைப்படாத மரணம் 35 வயதிலேயே இழுத்து கொண்டு போய்விட்டது. அதன் மர்ம முடிச்சுகளை இன்னும் யாராலும் அவிழ்க்க முடியவில்லை.

சில்க் பற்றி வதந்திகள் வராத பத்திரிகைகளே அன்று இல்லை.. எத்தனை கேவலங்கள், அவதூறுகள், உயரங்கள், பள்ளங்கள், வந்தாலும் கலங்காமல் அவைகளை துணிச்சலுடன் கடந்துள்ளார்.

ஆனால், தனக்கு என்ன தேவை என்பதை மட்டும் கடைசிவரை அறிந்து கொள்ள முடியாத அப்பாவியாகவே இருந்துள்ளார்.

திமிர் பிடித்தவள் என்ற பெயரை அனாயசயமாக தட்டி சென்ற சில்க், நிஜத்தில் ஒரு மிருதுவான குழந்தை என்பதை நெருங்கி பழகியவர்கள் மட்டும் இன்னமும் சொல்லி கொண்டே இருக்கிறார்கள்.

எனினும், சமூக ஒழுக்கம், சமூக கட்டுமானம் என்ற வரையறைக்குள் இவரை கொண்டு வந்து பெரும்பாலானோர் பார்க்கவேயில்லை..

தன் அகத்தை யாராவது விரும்பி ஏற்று கொள்வார்களா என்ற ஏக்கத்திலேயேதான் இறுதி நாட்கள் கழிந்திருக்கின்றன. வலி நிறைந்த வாழ்க்கையின் மீது, பிடிப்பு தளர்ந்த நிலையிலும், சுற்றியுள்ளவர்களின் மீது நம்பிக்கையிழந்த நிலையிலும், பழிகள், காயங்கள் எல்லை மீறிய சூழலிலும்தான் அப்படி ஒரு சோக முடிவை எடுத்திருப்பார் போலும்.

ஆனால் இன்றளவும் தென்னிந்தியாவில் பேசப்படும் பாத்திரமாக சில்க் திகழ்கிறார்.

# நாட்டை சீர்குலைத்த வெள்ள அனர்த்தம்!



தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடக்கு வடமேற்கில் நகர்ந்து சூறாவளி புயலாக வலுப்பெற்றதால் இலங்கையின் பல பாகங்களும் பாதிப்பிற்கு உள்ளாகின.

இதனால் இலங்கையின் பெரும் பகுதிகள் வெள்ளக்காடாய் மாறியது. பலத்த காற்று மற்றும் அடை மழையுடனான சீரற்ற காலநிலையால் நாட்டில் 21 மாவட்டங்களில் கடந்த வியாழக்கிழமை வரை 113,052 குடும்பங்களைச் சேர்ந்த 401,707 பேர் பாதிப்பிற்கு உள்ளாகினர்.

நவம்பர் 22 முதல் 28 ஆம் திகதி காலை 6 மணிவரையான காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்ட தரவுகளே இவை. சீரற்ற காலநிலையால் 13 பேர் உயிரிழந்ததுடன், 17 பேர் காயமடைந்தும் 2 பேர் காணாமல் போயுமுள்ளனர்.

91 வீடுகள் முழுமையாகவும், 1,662 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன. அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையமும் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான அனர்த்த காலங்களில் பொதுமக்களுக்கு முதலில் தேவைப்படுவது பாதுகாப்பு, உணவு, தங்குமிடம் ஆகியவையாகும். இவற்றை பெற்றுக் கொடுப்பதற்கு பலர் தனிப்பட்ட ரீதியிலும் சரி, முப்படையினரும் சரி பல வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்துள்ளமை கவனத்திற்குரிய விடயமாகவே அமைந்துள்ளது.

அனர்த்த காலங்களில் கைகொடுப்பது என்பது முப்படைகளின் கடமையாகவே இருந்தாலும் அவர்கள் தங்களின் பாதுகாப்பை கருத்திற்கொள்ளாது பொதுமக்களை பாதுகாப்பதில் பங்களிப்பை செலுத்தயமை பாராட்டுக்குரிய விடயமாகவே அமைந்தது.

குறிப்பாக, கடந்த 27ஆம் திகதி அம்பாறை பகுதிக்கு வெள்ள அனர்த்த கண்காணிப்புக்காக சென்றிருந்த விமானப்படையினர் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு வீட்டு கூரையின் மேல் அமர்ந்திருந்த ஒருவரை பாதுகாப்பாக மீட்டிருந்த சம்பவமும் நிகழ்ந்திருந்தது.

**“அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான பாதுகாப்பையும் நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்க மேலும் தீவிரமாக செயற்பட வேண்டிய நிலை உள்ளது”**





தொடர்ந்து இந்த நிலை நீடிக்குமேயானால் அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான பாதுகாப்பையும் நிவாரணத்தையும் பெற்றுக்கொடுக்க மேலும் தீவிரமாக செயற்பட வேண்டிய நிலை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த புதன்கிழமை (28) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு சென்று மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்க வேண்டும், உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் மனநிலை மற்றும் வசதிகளை கவனத்தில் கொண்டு உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும், கடலுக்குச் சென்றிருக்கும் மீனவர்களை பாதுகாப்பாக கரைசேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளுக்கு பணிப்புரையும் விடுத்திருந்தார். அத்துடன், பொதுமக்களுக்கு தேவையான உணவு, தங்குமிடம், மலசலகூட வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக் காட்டியிருந்தார்.



எனினும், இந்த விடயத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு தான் பாரிய சவால் நிலவியது எனலாம். அவர் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்று சுமார் ஒரு வாரமே கடந்துள்ள நிலையிலேயே இந்த அனர்த்த நிலை தோன்றி பெரும் சவாலை ஏற்படுத்தியது.

நாடளாவிய ரீதியில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வெளியிடப்படும் அறிக்கைகளின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் நிவாரணங்கள் பாதுகாப்பு உதவிகள் கிடைக்கின்றதா என்பதை அவர் தொடர்ந்து அவதானிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

மேலும், வெள்ளத்தில் சிக்குண்டும் மண்சரிவு மூலமும் சிலர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் குடும்பங்களுக்கும் உரிய நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பது காலத்தின் தேவையாகும்.

வெறுமனே பணமோ, உலர் உணவுகளோ மட்டுமே அவர்களுக்கு நிவாரணமாக அமையாது. ஏனெனில், இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்கள் சிலர் 15 மற்றும் 17 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

சீரற்ற காலநிலையின் காரணமாக உயர்தர பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பரீட்சைக்கு தயார் நிலையில் இருந்த மாணவர்கள் மத்தியில் மேற்படி அனர்த்தமானது பலத்த அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளமை மறுக்க முடியாததே. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பரீட்சை வினாத்தாளின் பாதுகாப்பு தொடர்பிலும் கல்வி அமைச்சு அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

## நிவாரணங்கள் கிடைக்கின்றதா?

மழை, வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு போதியளவில் நிவாரணங்கள் உரிய முறையில் கிடைக்கின்றதா என பார்த்தால் அது கேள்விக்குறிதான். காரணம், பல மக்கள் இன்னலுறும் காணொளிகள் தற்போதும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகின்றதன. ஆகவே, பொது மக்களுக்கு தேவையான விடயங்களை அரசு முன்னெடுக்கும் அதேவேளை அதை சரியான முறையில் உரிய அதிகாரிகள் பொதுமக்களுக்கு கொண்டு செல்வதும் அவசியமாகும்.

## பாதுகாப்பு

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் சேவைகளை கண்கூடாக பார்க்கக் கூடியதாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. பொது மக்கள் பாதுகாப்பு கருதி எந்தவொரு இடத்திற்கு சென்றாலும் தமது பாதுகாப்பை உறுதிப் படுத்தும் விதமாக அவ தானமாக நடந்து கொள்வது அத்தியா வசியமாகும்.



எஸ்.டொரின்

# உலகளாவிய வர்த்தகப் போர் ஆரம்பம்; தொடக்கப் புள்ளியை வைக்கிறார் ட்ரம்ப்!



அமெரிக்காவின் அடுத்த கட்ட நகர்வை உலக நாடுகள் உற்று நோக்கிக் கொண்டிருக்கும் வேளையில் உறுதிமொழிளை நடைமுறைப்படுத்துவதற்கான தொடக்கப் புள்ளியை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பு தினத்தன்றே வைக்கவுள்ளார்.

அதன்படி, அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அடுத்த வருடம் ஜனவரி 20 ஆம் திகதி அவர் பதவியேற்க உள்ளார்.

உலக அரங்கில் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அமெரிக்கா அசைக்க முடியாத சக்தியாக உள்ளது. இவ்வாறிருக்க ஆட்சிபீடமேறியுள்ள ட்ரம்பின் நிதி உறுதிமொழிகள் உலகளாவிய நிதிச் சந்தைகளுக்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். அவை சில நாடுகளுக்கு சாதகமானதாகவும் இருக்கலாம், சில நாடுகளுக்கு பாதகமானதாகவும் இருக்கலாம். உலகம் முழுவதும் ட்ரம்பைச் சுற்றி பல்வேறு சவால்கள் காத்திருக்கும் நிலையில் தற்போது அதைப் பற்றிய விவாதங்கள் தலைத்தூக்கியுள்ளன.

**“கனடா, மெக்சிகோ மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக அளவிலான வரி விதிக்கப்படும்” என ட்ரம்ப் அறிவித்துள்ளமை பாரிய கேள்விக்குறிகளை தோற்றுவித்துள்ளது”**

இந்த நிலையில் “கனடா, மெக்சிகோ மற்றும் சீனாவில் இருந்து அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக அளவிலான வரி விதிக்கப்படும்” என கடந்த திங்கட்கிழமை (25) ட்ரம்ப் அறிவித்திருந்தார். தான் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் தனது முதல் நடவடிக்கை இதுவெனவும் அவர் கூறியிருக்கிறார். மெக்சிகோ மற்றும் கனடா மீது 25 வீதமும், சீனா மீது 10 வீதமும் வரி விதிக்கப்படும் என்று தெரிவித்த ட்ரம்ப் சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் நிறுத்தப்பட்டால் மாத்திரமே இறக்குமதி வரி நீக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அமெரிக்கா வர்த்தகப் போரைத் தூண்டினால் தாமும் பதிலடி கொடுப்பதாக மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் தெரிவித்திருந்தார். அதன்பின்னர், சட்ட விரோத குடியேற்றத்தை தடுக்க மெக்சிகோவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் எனவும், இது தொடர்பில் மெக்சிகோ ஜனாதிபதியுடன் தான் உரையாடியதாகவும் தெரிவித்த ட்ரம்ப், மெக்சிகோ வழியாக இடம்பெயர்வதை தடுக்க ஷீன்பாமும் ஒப்புக்கொண்டார் எனவும் அறிவித்திருந்தார்.

ட்ரம்புடனான கலந்துரையாடலை ஷீன்பாம் உறுதிப்படுத்திய போதிலும், இடம்பெயர்வு பிரச்சினைகளில் மெக்சிகோவின் நிலை பற்றியே நாங்கள் விவாதித்தோம் என்று கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “சட்டவிரோதமாக நுழைபவர்கள் எங்கள் எல்லையை அடையவில்லை என்று நான் அவரிடம் கூறினேன். ஏனென்றால் அவர்களை மெக்சிகோ உன்னிப்பாக கவனித்து வருகிறது. எனவே,எங்கள் இறையாண்மையின் கட்டமைப்பிற்குள், பாதுகாப்பு விவகாரங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது பற்றியும், போதை பொருள் நுகர்வை தடுக்க நாங்கள் மேற்கொண்டு வரும் பிரசாரம் பற்றியுமே கலந்துரையாடினோம்” எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ”மெக்சிகோ மற்றும் கனடா ஆகியவை அமெரிக்க சந்தையை பெரிதும் சார்ந்து இருக்கின்றன. எனவே, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ட்ரம்பின் அச்சுறுத்தல்களில் இருந்து விலகிச் செல்லும் திறன் குறைவாகவே உள்ளது” என ஆசியா சொசைட்டி பாலிசி இன்ஸ்டிடியூட் துணைத் தலைவரும் முன்னாள் அமெரிக்க வர்த்தக அதிகாரியுமான வெண்டி கட்லர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக் கது.

தனது பதவி காலத்தில் சீனாவை உலகளவில் தனிமைப்படுத்தும் முயற்சியில் தீவிரம் காட்டிய ட்ரம்ப், சீன இறக்குமதிகளுக்கு 60 வீத வரி விதிக்கப்படும் என பிரசார மேடைகளில் தெரிவித்திருந்தார். இதன் காரணமாக அமெரிக்க – சீன உறவுகளின் எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற நிலையே காணப்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.



பாலகணேஷ் டிலுக்ஷா

# கனவில் வந்த காரிகையைத் தேடி...?

ஆர். ராஜலிங்கம்

## அத்தியாயம் 3

தீபனை விசித்திரமாகப் பார்த்தபடி வந்த அவள்,

“என்ன சொன்னீர்கள் பூங்குழலியா?”

“ஆமாம் நீ தான் உன் பெயரைக்கூட சொல்ல மறுக்கிறாயே! அதனால்தான் நானே கற்பனை செய்து இந்தப் பெயரை உனக்கு வைத்தேன். எப்படி பொருத்தமாக இருக்கிறதா?”

அவள் அவனைப் பார்த்து இலேசாக சிரித்துவிட்டு கூறினாள், “இப்படி ஒரு பெயரை நான் கேள்விப்பட்டதே இல்லை”

“உண்மைதான், ஏனென்றால் அது சற்றுமுன்னர் உருவான பெயர்தான். உனக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று சிந்தித்து சிந்தித்து இந்தப் பெயரை உருவாக்கினேன். ஏன் உனக்கு பிடிக்கவில்லையா?”

“இந்தப் பெயருக்கு என்ன அர்த்தம் என்றுகூட எனக்குப் புரியவில்லையே! அது என்ன பூங்குழலி?”

“உன்னை நன்கு பார்த்து உனக்குப் பொருத்தமான பெயராகத்தான் அதனை நான் உருவாக்கினேன். சொல்லட்டுமா?”

“ம்..., சொல்லுங்கள். பார்க்கலாம்”

“பூப்போன்ற அழகுடன், நறுமணம் வீசும் உன் மேனி”

“என்ன நறுமணமா? மேனியில் நறுமணம் வீசுமா?”

“ஏன் வீசாது? கூந்தலில் நறுமணம் வீசும்போது மேனியில் வீசாதா?”

“கூந்தலில் நறுமணம் வீசுமா?”

“ஆமாம், ஏற்கனவே ஒரு கவிஞர் கூந்தலில் நறுமணம் வீசுவதுபோல் பாடியிருக்கிறாரே. நீ கேள்விப்பட்டதில்லையா?”

“ம்.., சரி. இனி?”

“உன்னுடைய பேச்சு கூட இனிய கானம்போல் இருக்கின்றது. இனிய கானம் எங்கிருந்து வரும்? குழல் இனிது யாழ் இனிது என்பார்கள். அதோடு உன் கார்மேகம் போன்ற கூந்தல். இவையெல்லாவற்றையும் இணைத்து பூங்குழலி என்று பெயர் சூட்டினேன். புரிகிறதா?”

“ம்.., புரிகிறது. ஆனால் யாரும் கேட்டால் சிரிக்கப் போகிறார்கள்”.

“சிரிக்கட்டும். அதனால் எனக்கென்ன?”

நேரம் போவதே தெரியாமல் இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

பின்னர் பூங்குழலி கூறினாள்,

“சரி. நாம் இருவரும் வெகுநேரம் பேசிவிட்டோம். நான் போகட்டுமா?”

“என்ன பூங்குழலி. ஏன் இந்த அவசரம்”

“அவசரமா? வெகுநேரமாகிவிட்டது. நான் போகிறேன்”

“சரி, அடுத்து எப்போது சந்திக்கலாம்”

“சந்திப்பதா? இதுதான் நமது கடைசி சந்திப்பு”

“என்ன பூங்குழலி. ஏன் அப்படிச் சொல்கிறாய்? விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதே. அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது”

“தாங்கித்தான் ஆகவேண்டும். இனி நாம் சந்திக்கவே முடியாது”

“ஏன் அப்படி?”

“ஏனென்றால் நாம் பழகுவது என் அண்ணனுக்குத் தெரிந்துவிட்டது. அவனும் அவன் நண்பனும் சேர்ந்து நான் யாருடன் பழகுகிறேன் என்று தேடிக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடம் அகப்பட்டால் என்ன ஆகும் என்று சொல்ல முடியாது”

“ஏன் அப்படி?”

“ஏனென்றால் அவர்கள் இருவரும் கொலை செய்யவும் அஞ்சாதவர்கள். அதனால்தான் சொல்கிறேன்”

“சரி அப்படியானால் நம் காதல்?”

“அதெல்லாம் இனி சரிவராது”

“பூங்குழலி, நாம் உன் அண்ணனுடன் பேசிப்பார்ப்போம்”

“அதெல்லாம் சரிவரக் கூடியதல்ல. நான் ஒருவருடன் பழகுகிறேன் என்று தெரிந்ததில் இருந்து அவர்கள் இருவரும் கொலைவெறியுடன் திரிகிறார்கள்”

“அப்படியானால் என்னதான் செய்யலாம் என்கிறாய்?”

“நாம் இருவரும் பழகுவதை நிறுத்திக்கொள்வோம். பின்னர் கொஞ்சகாலம் பொறுத்துப் பார்ப்போம். இனி என்னைத்தேடி வராதீர்கள். நான் போகிறேன்” என்றபடி அவள் போகத் தயாரானாள்.

“பூங்குழலி கொஞ்சம் பொறு” என்றவாறு அவள் பின் சென்றவனின் தலையில் யாரோ ஓங்கி அடித்தார்கள்.

“பூங்குழலி கொஞ்சம் பொறு” என்றவாறு அவள் பின் சென்றவனின் தலையில் யாரோ ஓங்கி அடித்தார்கள். தடுமாறி விழுந்தவனின் முன்னால் இரண்டு கரிய உருவங்கள். இரண்டு முரட்டு ஆசாமிகள். அவர்கள்தான் அவனைத் தாக்கினார்கள். தீபன் சற்றும் எதிர்பாராத நிலையில் அவர்கள் பூங்குழலியை அலாக்காகத் தூக்கினார்கள். அவள் அலறினாள்...திமிரினாள்... தீபன் அவர்களோடு போராடி அவளை விடுவிக்க முயற்சித்தான். ஆனாலும் அவர்களின் தாக்குதலுக்கு அவனால் ஈடுகொடுக்க முடியவில்லை.



தடுமாறி விழுந்தவனின் முன்னால் இரண்டு கரிய உருவங்கள்.

இரண்டு முரட்டு ஆசாமிகள். அவர்கள்தான் அவனைத் தாக்கினார்கள்.

தீபன் சற்றும் எதிர்பாராத நிலையில் அவர்கள் பூங்குழலியை அலாக்காகத் தூக்கினார்கள். அவள் அலறினாள்...திமிரினாள்... தீபன் அவர்களோடு போராடி அவளை விடுவிக்க முயற்சித்தான். ஆனாலும் அவர்களின் தாக்குதலுக்கு அவனால் ஈடுகொடுக்கமுடியவில்லை.

கதறக்கதற அவளை தூக்கிக்கொண்டு சென்றார்கள்.

தீபன் அவர்களை துரத்திக் கொண்டே ஓடினான். அவர்கள் ஓடி ஓடி கடைசியில் ஒரு காட்டுப் பகுதிக்குள் நுழைவதை கண்டான். தீபனும் விடாமல் காட்டுக்குள் வெகு தூரம் ஓடினான். ஆனாலும் அவனால் அவர்களைக் காண முடியவில்லை.

வெகு நேரமாக காட்டுக்குள் அலைந்து திரிந்தான். அவனால் அவர்களை கண்டுபிடிக்க முடியவில்லை. நேரம் சென்று கொண்டிருந்தது. அது ஓர் அடர்ந்த காடு. அவனால் காட்டை விட்டும் வெளியேற முடியாத நிலை. கால் போன போக்கெல்லாம் அலைந்து திரிந்தான். நேரம் சென்றுவிட்டது. இனியும் தாமதிப்பதில் பயனில்லை. காட்டை விட்டு வெளியேற வேண்டியதுதான் என்று நினைத்தான். பின்னர் வெளியேற முயற்சித்த போது வெளியில் செல்வது எப்படி என்று தெரியவில்லை.

நடக்க நடக்க காடு நீண்டுகொண்டே இருந்தது. காட்டை விட்டு வெளியேறுவது எப்படி என்று புரியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தான். ஒவ்வொரு திசையாக சென்று பார்த்தும் காட்டுக்கு வெளியில் செல்வது எப்படி என்று அவனுக்குப் புரியவில்லை.

(தொடரும்....)

## குறுக்கெழுத்துப் போட்டி-4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | 4 | ■ | 5 |
| | ■ | | ■ | 6 | | ■ | |
| 7 | | | | | ■ | 8 | |
| | ■ | | ■ | | ■ | | ■ |
| ■ | 9 | | ■ | 10 | 11 | | 12 |
| 13 | | ■ | 14 | ■ 14 | | ■ | |
| ■ | 15 | | | ■ | | ■ | |
| 16 | | ■ | 17 | | | | |

**இடமிருந்து வலம்**

1. இதிலிருந்து எடுக்க எடுக்க குறையாதாம்.
6. விரும்புதலையும் குறிக்கும்.
7. இதனை நிறைவேற்ற தம் உயிரையே நீத்த நம் முன்னோர்களும் உண்டு.
8. முக்கனிகளில் ஒன்று.
9. ஆள் பாதி இது பாதி என்பார்கள்.
10. உலகம் என்றும் கூறலாம். (திரும்பி)
13. இது கொண்டு வந்தால் தான் தங்கை என்றோர் பழமொழி உண்டு.
15. விவசாயம் என்றும் சொல்லலாம்.
16. இதுவே பயிரை மேய்வதா?
17. அறிவை பெறுவதற்கு பெரும் உதவியாக இருப்பது

**மேலிருந்து கீழ்**

1. அறிவுத்திறன் மிக்கவரை குறிக்கும்.
2. தடுக்கப்படும் அல்லது தடைப்படும் நிலைமை இல்லாததைக் குறிக்கும்.
3. திரை கடல் ஓடியும் இதனைத் தேடுமாறு நம் முன்னோர்கள் கூறினார்கள். (குழம்பி)
4. தவறு என்றும் பொருள்படும்.
5. ரஜினி நடிப்பிலும் பின்னர் அஜித் நடிப்பிலும் வெளிவந்த திரைப்படமொன்று.
8. பழைமையை குறிக்கும்.
9. கடல் என்றும் பொருள்படும்
11. குற்றம் செய்தவருக்கு நீதிமன்றில் வழங்கப்படுவது. (குழம்பி)
12. முடிவையும் குறிக்கும்.
14. வீண் பிரச்சினையை இப்படியும் சொல்வார்கள்.

உங்கள் பதில்களை தபால் அட்டையில் ஒட்டி பெயர், முகவரியுடன் எமக்கு அனுப்பி வைக்கலாம்.

ஒருவன் வாரவெளியீடு, ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09

## சென்ற வாரத்திற்கான விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வா | ன | 2 வி | ல் | ■ | 3 ளி | ■ | 4 இ |
| ன் | ■ | த் | ■ | 5 வி | க | 6 ட | ம் |
| 7 கோ | மே | த | க | ம் | ■ | 8 ஆ | மை |
| ழி | ■ | க | ■ | 9 ம | ண | ல் | ■ |
| ■ | 10 மி | ன் | ன | ல் | ■ | ■ | 11 து |
| 12 கா | டு | ■ | ■ | ■ 14 | 13 க | மி | ரு |
| ■ | 14 க் | 15 ம | கு | ■ | வி | ■ | ம் |
| 16 த | கு | தி | ■ | 17 க | ரு | ம் | பு |

**பாராட்டுப் பெறுவோர்**

1. எம்.பி. அகிலன், திருகோணமலை.
2. முத்துமணி வாஹிட், பதுளை.
3. எம்.ஜே. பெர்னாண்டோ, கொட்டாஞ்சேனை.
4. எம்.என்.அஃப்லால் அஹமட், நங்கல்ல.
5. சந்திராணி தங்கத்துரை, கல்முனை.
6. எப்.ஆர்.ஏ.ஷகூர், மடவள பஸார்.

# தீமையாலும் நன்மை

மனமே

சுபா



நல்லதைக் கொடுப்பதுதான் இறைவனின் இயல்பு. ஆனால், நமக்கு ஏற்படும் துன்பம் என்பது, ஏதோ ஒரு காரண காரியமாக, அந்த இறைவனே நமக்குக் கொடுக்கின்ற வழி என்பார்கள் பெரியவர்கள். நமது கடந்த கால சம்பவங்களை நன்கு ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அது நமக்கே புரியும்.

நாம் நன்மையென்று எண்ணும் சில விடயங்கள் கூட, காலப்போக்கில் நமக்கு சில சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கக் கூடும். ஆனால், நாம் எதையெல்லாம் தீமை என்று கருதினோமோ அதில் நிச்சயம் ஒரு நன்மை இருக்கவே செய்யும். அது நம்மை, பண்படுத்தவோ, தவறுகளை திருத்திக் கொள்ளவோ, ஏதோ ஒன்றை கற்றுக்கொள்ளவோ அல்லது எதிலிருந்தோ ஒதுங்கி நிற்கவோ வழியை உண்டுபண்ணியிருக்கக்கூடும்.

இதற்கு உதாரணமாக தமிழில் உள்ள எதிர்ச்சொற்களையே குறிப்பிடலாம். வெயில்–நிழல், வெம்மை–குளிர், விருப்பு–வெறுப்பு, இன்பம் – துன்பம், இருள்–ஒளி என்பதுபோல நன்மை–தீமை என்பனவற்றைக் கூறலாம்.

அதாவது, வெறுப்பின் மூலமாக விருப்பையும், வெயிலின் மூலமாக குளிர்ச்சியையும், இருளின் மூலமாக வெளிச்சத்தையும், துன்பத்தின் மூலமாக இன்பத்தையும், தீமையின் மூலமாக நன்மையையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

ஒரு குட்டிக்கதை...

“உப்பு வியாபாரி ஒருவன், வியாபாரத்துக்குக் கிளம்பும் முன் உப்பு எல்லாம் விற்க வேண்டும் என்று இறைவனை வணங்கிவிட்டுக் கிளம்புவான். வழக்கம்போல ஒருநாள் அவன், இறைவனை வணங்கிவிட்டு, உப்பு மூட்டைகளை தன் பொதி சுமக்கும் கழுதையின் மீது ஏற்றிக்கொண்டு காட்டு வழியே போகிறான்.

அப்போது, திடீரென்று மழை பெய்யத் தொடங்குகிறது. உப்பு மூட்டைகள் மழை நீரில் கரைந்துவிடுகின்றன. இதனால் மனம் வருந்திய அவன், “இறைவன் நம்மை இப்படி தண்டித்து விட்டாரே. இறைவனை நினைப்பதே தவறு. இனி, நான் நினைக்க போவதில்லை...” என்று இறைவனை நிந்தித்த வண்ணம், வந்த வழியே திரும்பிச் செல்கிறான்.

அப்போது, காட்டு வழியாகத் திரும்பி செல்லும்போது, “சந்தையிலிருந்து வரும் இவன் நிறைய பணம் கொண்டு வருவான் காத்திருக்கின்றனர்.

மழை பெய்ததால், அன்றைக்கு ஏமாற்றத்தோடு வீடு திரும்பிக் கொண்டிருந்த உப்பு வியாபாரி, கழுதையை கட்டிப் போட்டுவிட்டு ஒரு மரத்தடியில் கண்ணீருடன் உட்கார்ந்திருந்தான்.

கொள்ளையர்கள் அவனிடம் நெருங்கி, “ஏன் என்ன நடந்தது? எதற்காக இப்படி அழுகிறாய்?” என்று கேட்கின்றனர்.

அவன் அவர்களை நோக்கி, “நான் சந்தைக்குப் போய் உப்பு வியாபாரம் செய்ய நினைத்தேன்... ஆனால் மழையில் உப்பெல்லாம் கரைந்து விட்டது. பெருத்த நஷ்டம் ஆகிவிட்டது!... மனசே சரியில்லை!....” என்றான்.

அதைக்கேட்ட கொள்ளையர்களும், அங்கிருந்து திரும்பிச் செல்கின்றனர்.



போகும்போது அவர்கள், “ச்சே... இப்படி ஆகிவிட்டதே! இவனிடம் நிறைய பணம் இருக்கும். அதை கொள்ளையடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருந்தது வீணாகிவிட்டதே” என்று தமக்குள் பேசிக்கொள்வது அந்த வியாபாரியின் காதில் விழுந்துவிடுகிறது. அப்போது தான் வியாபாரி ஒன்றை உணர்ந்தான். “கடவுளே, நல்லவேளை! இன்றைக்கு மழை பெய்ததால் கொள்ளையர்களிடமிருந்து தப்பித்தேன். ஒருவேளை, என்னிடமுள்ள பணத்தை கொள்ளையடித்த பின் அவர்கள் என்னை கொலை செய்திருக்கவும் கூடும். ஆனால், என்னிடம் பணம் இல்லாத காரணத்தால், எதுவும் செய்யாமல் போனார்கள். இறைவா, உனது கருணையே கருணை” என்று இறைவனைப் போற்றிக்கொண்டே வீடு திரும்பினான்.

இப்படித்தான், நாம் ஒவ்வொருவரும், நமக்கு ஏற்படும் சிறுசிறு துன்பங்கள், பிரச்சினைகள், தீங்குகள் என்பவற்றைக் கண்டு ஒரேயடியாக உடைந்து போவதுண்டு. ஆனால், எப்படியாவது அதை கடந்து போய்விடுவோமேயானால், அதன் மூலம் ஒரு நன்மை நம்மை வரவேற்கக் காத்திருக்கும்.

ஆகவே, நன்மையால் மட்டும் தான் நன்மை விளையும் என்று எண்ணுவது தவறு. தீமையாலும் நன்மை கிட்டும் என்பதே திண்ணம்...!

# அவசர புத்தி




ஆர்.சுபாஷினி

“ஏம்மா ரொம்ப லேட்டாகிடுச்சி... சீக்கிரம் எழுந்திரு... அப்புறம் அறக்க பறக்க ஓடனும்...”

“இன்னும் கொஞ்ச நேரம்மா... ப்ளீஸ்... தூக்கம் கண்ண சொக்குது...”

“என்ன புள்ளயோ போ...”

கடிகாரம் காலை ஏழு மணியைக் காட்டியது. அப்பொழுதும் சித்ராவால் எழுந்திருக்க முடியவில்லை. ஒரு பிரபல நிறுவனத்தில், மேல்நிலை உத்தியோகத்தில் அவள் இருந்தாள். வீட்டுக்கும் செல்லப்பிள்ளை. அறிவிலும் கொஞ்சமும் குறைவில்லை. அதிபுத்திசாலி என்றும் பெயர் பெற்றிருந்தாள்.

சரியாக ஒன்பது மணிக்கு அவள் அலுவலகத்தில் இருந்தாகவேண்டும்.

“அம்மா நா போறேம்மா... நல்லா லேட்டாகிட்டு...”

“சரிம்மா... கவனம்...”

“ஐயோ 7.45 ட்ரெய்ன பிடிக்கணுமே. இப்பவே மணி 7.30 ஆகிடுச்சே...” சித்ரா தான் மனதில் நினைத்துக் கொண்டாள்.

இதோ சித்ரா புகையிரத நிலையத்தை அடைந்துவிட்டாள். அவள் செல்லும் இரயில் இன்னும் வரவில்லை என்னும் திருப்தி அவள் மனதில் ஏற்பட்டாலும், அவள் கண்கள் யாரையோ தேடி அலை பாய்ந்தது. சுற்றுமுற்றும் எல்லா திசைகளிலும் அவள் கண்கள் அலைந்து கொண்டிருந்தன.

“எங்கே அவள்...? எங்கு சென்றாள்...? வழமையாக இங்கு தானே அவள் நின்று கொண்டிருப்பாள். என்ன ஆயிற்று அவளுக்கு...?” சித்ராவின் மனம் பதைபதைத்தது.

யாரை சித்ரா இவ்வளவு அக்கறையோடு தேடுகின்றாள்...? யார் அவள்...? அவளுக்கும் சித்ராவுக்கும் என்ன தொடர்பு?

சித்ராவின் மனம் இரண்டு மாதங்கள் முன்னோக்கி சென்றது.

****

சித்ரா அன்று தான் முதன் முதலாக அந்த புகையிரத நிலையத்துக்கு வந்தாள். வழமையாக அவள் செல்லும் அலுவலக வேனை அன்று தவறவிட்டுவிட்டாள். அதனால் இரயிலில் செல்லுமாறு அவள் அம்மா கூறினார். சரி என்று அவளும் வந்துவிட்டாள்.

புகையிரத நிலையமும், அங்கிருந்த சூழலும் அவளுக்கு புதுவித மகிழ்ச்சியைக் கொடுத்தன. தினம் தினம் உள்ளேயே அடைபட்டுக் கொண்டு அலுவலக வேனில் சென்ற அவளுக்கு, இரயில் பயணம் புது உற்சாகத்தைத் தந்தது.

சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த அவள், ஒரு மூலையில், உருவமொன்று அமர்ந்திருந்ததைக் கண்டாள்.

அவள் ஒரு யாசகி. வயது சுமார் ஒரு முப்பது, முப்பத்தைந்துக்குள் தானிருக்கும். கிழிந்த பழைய ஆடையொன்றை உடுத்தியிருந்தாள். அவள் தலைமுடி, வறண்டுபோய், பறட்டை தலையாய் காட்சி தந்தது. அவள் விழிகளில், சொல்ல முடியாத ஏதோ ஒரு வேதனை நிரம்பியிருந்தது. அது பசி மயக்கமா... அல்லது வேறு ஏதாவதா... சரியாக சித்ராவால் ஊகிக்க முடியவில்லை. சித்ரா சில நிமிடங்கள் அவளையே பார்த்தபடி இருந்தாள். அந்த பெண் மீதிருந்து, பார்வையை அவளால் எளிதில் விலக்க முடியவில்லை.

அவள் மனம் என்னவோ செய்தது. அந்தப் பெண் அழுக்காகத் தான் இருந்தாள். ஆனால், அவள் முகம் அந்த அழுக்கிலும் கூட அழகாகத் தெரிந்தது. கள்ளம், கபடமில்லாத அவள் பார்வை சித்ராவுக்கு ஏனோ பிடித்துப்போய்விடவே, அவள் அருகில் போய் நின்றாள்.

ஏதோ நினைவு வந்தவளாய், சட்டென தனது பையை திறந்து அதிலிருந்த தனது உணவுப் பொதியை எடுத்துக் கொடுத்தாள். அதனை எதிர்பாராத அந்தப் பெண், அந்தப் பொதியை வாங்கி, நன்றியோடு அவளைப் பார்த்தாள். அந்தப் பார்வை சித்ராவுக்கு, ஏதொ ஒரு பெரிய நன்மை செய்தது போன்ற உணர்வைக் கொடுத்தது.

ப்ச்.... சிகுபுகு சிகுபுகு...

“ஆங்... கோ அப்பா கோச்சிய... அத கோச்சிய கொடக் பரக்குய் நேத...?”

“ஒவ்... ஒவ்... மட்ட அத வேலாசணயெங் யண்டத் ஓனே...!”

இரண்டு சகோதரமொழி அண்ணாமார் பேசிக் கொள்வது சித்ரா காதில் விழுந்ததில், அவள் நினைவு திரும்பினாள். ஆனால், அவள் மனம் முழுவதும் அந்தப் பெண் பற்றிய நினைவுகளே ஓடிக்கொண்டிருந்தன.

மீண்டும் அவள் நினைவுகள் பழைய சம்பவங்களை அசைபோட்டன.

அன்று மாலை...

“என்னம்மா என்ன யோசிச்சிகிட்டு இருக்க?” சித்ராவின் அம்மா தான் கேட்டார்.

“இல்லைம்மா. இனி நான் ஒபிஸ் வேன்ல போகல...”

“ஏன் என்னாச்சி...?”

“இல்லம்மா... ட்ரெய்ன்ல போறதே நல்லம்னு தோணுது. வேன்ல ரொம்ப கஷ்டமா இருக்கு. உள்ளுக்குள்ள நசுங்கி, இறுகிட்டு போறதுக்கு, ட்ரெய்ன் கொஞ்சம் பரவாயில்லனு தோணுது.”

“சரிம்மா... அப்படியே செய்...”

சித்ரா, தான் இரயிலில் போகவேண்டும் என முடிவெடுத்தது, காலையில் அவள் கண்ட அந்த பெண்ணுக்காகத் தான் என அவள் உள் மனம் கூறியது. அந்த பெண் மீது அவளுக்கு ஏதோவொரு இனம் புரியா அன்பு தோன்றியது. அன்றிலிருந்து உணவு, உடை என ஏதாவதொன்றை அந்தப் பெண்ணுக்கு கொடுப்பதை வழக்கமாக்கிக் கொண்டாள் சித்ரா.

“மே சித்ரா மொனவத கல்பனாவ...?”

கடந்த இரண்டு மாதங்கள் பின்னோக்கிச் சென்றிருந்த சித்ரா, மீண்டும் நினைவுக்குத் திரும்பினாள்”

“நே... மொக்குத் நே மாலி... மம மெத்தன இந்த கண்ணங்...” என்று கூறியவள், அருகில் இருந்த இருக்கையில் போய் அமர்ந்துகொண்டாள்.

அப்போது...

இதோ வந்துவிட்டாள். அவள் இவ்வளவு நேரம் யாரைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாளோ அவள் தான் வந்தாள். ஆனால், வழமையாக தூரத்திலிருந்து சித்ரா கொடுக்கும் பொதியை வாங்கும் அந்தப்பெண், இன்று சித்ராவுக்கு அருகிலேயே வந்து அமர்ந்தாள்.

சித்ரா தன் பையைத் திறந்து உள்ளிருந்த உணவுப்பொதியை எடுத்துக்கொடுத்தாள். அவளும் அதனை வாங்கிக்கொண்டாள். பின்னர் சித்ரா ஏதோ நினைவு வந்தவளாய், தன் பையை இருக்கையிலேயே வைத்துவிட்டு அருகிலிருந்த கடைக்குச் சென்று ஏதோ வாங்கினாள்.

சில நிமிடங்களுக்குப் பின்னர், சித்ரா திரும்பி வந்தபோது அந்தப் பெண் அங்கு இருக்கவில்லை.

“எங்கே போனாள்? இங்கு தானே இருந்தாள்...?”

ஏதேதோ நினைத்தவள், மீண்டும் தன் இருக்கையில் வந்தமர்ந்து, தன் பையை கையிலெடுத்தாள்.

அவளுக்கு திக்கென்றிருந்தது. காரணம் அவள் பை திறந்திருந்தது. தன் பைக்குள் தேடிப்பார்த்தாள்.

பைக்குள் இருந்த அவளின் தங்க வளையல்களைக் காணவில்லை. இரண்டு நாட்களுக்கு முன்னாள் திருமண வீட்டுக்கு சென்று வந்த சித்ரா, தான் அணிந்திருந்த தங்க வலையல்களை பைக்குள்ளேயே வைத்திருந்தாள். அம்மாவிடம் அவற்றைக் கொடுக்க வேண்டும் என நினைத்தவள் இன்றும் மறதியாக எடுத்து வந்து விட்டாள்.

“நிச்சயமாக அவள் தான் என் நகைகளை எடுத்திருக்க வேண்டும். நான் செய்த உதவிகளைக் கொஞ்சம் கூட நினைக்காமல், எனக்கே துரோகம் செய்துவிட்டாள். அதுதான் அவளுக்கு இந்த நிலை. இறைவன் எல்லோருக்கும் அளந்து தான் நன்மை செய்வார். அவளுக்கு நிச்சயம் தண்டனை கொடுத்தே ஆகவேண்டும்” சித்ரா கோபத்தின் உச்சிக்கே சென்றிருந்தாள்.

அருகிலிருந்தவர்களிடம் நடந்தவற்றைக் கூறினாள். அவர்கள், அந்தப் பெண்ணை தேடினார்கள். அங்குமிங்கும் தேடிப்பார்த்தார்கள்.

அப்போது...

ஓர் ஓரத்தில் அந்தப் பெண் சித்ரா கொடுத்த உணவுப் பொதியை பிரித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். உடனே ஓடிச்சென்ற சித்ரா, அவளை பிடித்து இழுத்தாள். அருகிலிருந்தவர்கள், சித்ராவுடன் சேர்ந்து அந்தப் பெண்ணை நையப் புடைத்தார்கள்.

அடிதாங்க முடியாமல் கதறிய அவள், அங்கிருந்து தப்பித்து ஓடினாள். சிலர் அவளைத் துரத்தியபடியே சென்றனர். ஆனால் அவள், அங்கிருந்து மாயமாகியிருந்தாள். சித்ராவின் கோபம் சிறிதும் குறையவில்லை.

அன்று மாலை...

மிகவும் களைப்பாக வீட்டுக்கு வந்தாள் சித்ரா.

“வந்துட்டியா சித்ரா. ரொம்ப களைப்பாயிருக்க போல. என்ன இன்னைக்கு உன் முகம் ரொம்ப வாட்டமா இருக்கு?” அம்மா தான் கேட்டார்.

“அப்டியெல்லாம் ஒன்னுமில்ல. கொஞ்சம் டயர்ட். அவ்ளோ தான்”

“சரி... நீ என்ன வரவர பொறுப்பில்லாம நடந்துக்கற? இன்னைக்கு உன் தங்க வளையல்கள மேசையிலேயே வச்சிட்டு போயிருக்க...”

அம்மா பேசிக்கொண்டே சென்றார். சித்ராவுக்கு இதயம் ஒரு நிமிடம் நின்று விடும் போலிருந்தது.

“ச்சே... எவ்வளவு பெரிய பாதகி நான். அவள் ஏழை என்பதால் தானே அவளை சந்தேகப்பட்டேன். இதுவே அவள் செல்வந்த வீட்டுப் பெண்ணாக இருந்திருந்தால்...? இவ்வளவு நாள் செய்த நன்மையையெல்லாம் ஒரு நொடியிலேயே இல்லாமலாக்கிவிட்டேனே?”

வெட்கத்தில் கூனிக் குறுகிப் போனாள்.

மறுநாள்...

புகையிரத நிலையத்தில் அவள் வருகைக்காக காத்திருந்தாள் சித்ரா. அவள் கால்களில் விழுந்து மன்னிப்பு கேட்டாலும் பரவாயில்லை போலிருந்தது அவளுக்கு.

நீண்ட நேரம் ஆனது... ம்... ஹூம்... அவளை காணவில்லை.

அப்போது அருகில் இரண்டு பெண்கள் பேசிக்கொள்வது அவள் காதில் விழுந்தது.

“உனக்கு தெரியுமா... இங்க பிச்செடுத்துட்டு இருப்பாளே... அவள் நேத்து யார்கிட்டயோ திருடிட்டாளாம். அதனால அவள துரத்திட்டு ஓடிவந்துருக்காங்க. ஓடிவந்தவ ட்ரெயின்ல அடிபட்டு அங்கேயே இறந்துட்டா...”

அந்த வார்த்தைகள் சித்ரா காதுகளில் விழ... விழ... அவள் கண்கள் இருண்டு போயின. நா வரண்டு போனது. தொண்டை அடைத்தது. அப்படியே மயங்கி சரிந்தாள்....

அவளின் அவசர புத்தி ஒரு அப்பாவியை காவு வாங்கியிருந்ததை அவள் மனம் ஏற்க மறுத்தது...!

ஆழ் மனதின் அற்புத சக்திகள்

# எந்தவொரு நோயையையும் குணமாக்கும் வல்லமையை நமக்குள் உருவாக்க முடியும்



மருந்துகள் இல்லாமல் நோய்களைக் குணமாக்கும் முறை பழங்காலத்திலிருந்தே உலகில் பல நாடுகளிலும் பேசப்பட்டு வந்துள்ளது. இக்காலத்திலும் மருந்தில்லா மருத்துவ முறைகளில் ரெய்கி (Reiki), ப்ராணிக் ஹீலிங் (Pranic Healing) போன்ற சிகிச்சைகள் பல நாடுகளிலும் நடைமுறையில் இருந்து வருகின்றன. அந்த சிகிச்சைகளைச் செய்வோரில் அநேகர் தமது ஆழ்மன சக்தியை பயன்படுத்துபவர்களாகவே உள்ளனர்.

அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்துவதற்கு முன்னமே இந்தியாவில் மேற்கு வங்கத்தில் டொக்டர் ஜேம்ஸ் எஸ்டெய்ல்லே என்னும் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த மருத்துவர் 1843ஆம் ஆண்டு முதல் 1846ஆம் ஆண்டு வரை சுமார் 400 அறுவை சிகிச்சைகளை நோயாளிகளுக்கு வலி சிறிதும் தெரியாமல் செய்து சாதனை படைத்துள்ளார்.

இந்த அறுவை சிகிச்சைகள் கண், காது, தொண்டை போன்ற உறுப்புகளிலும், உடலில் இருந்து கட்டிகள், நோய் பாதிக்கப்பட்ட பாகங்களை நீக்குவதிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த அறுவை சிகிச்சைக்கு உள்ளாகும் நோயாளி வலியை உணராமல் இருப்பதற்கு அவரை மயக்க நிலைக்கு கொண்டு செல்வதற்கு மயக்க ஊசிக்கு பதிலாக ஆழ்மன சக்தியையே அவர் பயன்படுத்தியதாக டொக்டர் ஜேம்ஸ் எஸ்டெய்ல்லே தெரிவித்துள்ளார். இந்த 400 அறுவை சிகிச்சைகளின் போது ஒரு மரணம் கூட நிகழவில்லை எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

நம் உடல் நல்ல முறையில் இயங்குவதற்கு இயற்கையாகவே ஆழ்மனதின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த ஆழ்மனசக்தி தான் நாம் உறங்கும் போதும் மூச்சு விடுதல், இதயம் துடித்தல், ஜீரணம் நடை பெறுதல், உடலில் பாதிக்கப்பட்ட சில பகுதிகளை திருத்தி அமைத்தல் போன்ற முக்கிய வேலைகளை நாம் அறியாமலேயே செய்து வருகிறது. நாம் விழித்திருக்கும் சமயங்களில் நம் கவலைகள், பயங்கள், டென்ஷன், போன்றவற்றால் நமது இதயம், நுரையீரல், வயிறு போன்றவற்றின் செயல்பாடுகளை நாம் கெடுத்துக் கொண்டாலும், நம் உறக்க நேரத்தில் உடலில் உரிய திருத்தங்களை செய்து ஆழ்மனம் முடிந்த அளவு நம்மைக் காப்பாற்றுகிறது. இந்த வேலையை ஓய்வில்லாமல் ஆழ்மனம் செய்கிறது. ஆழ்மனதை முறையாகப் பயன்படுத்தினால் நோய்களை நாம் விரைவாக குணப்படுத்தலாம். தியானம் மற்றும் உயர் உணர்வு நிலை பெற சிந்தனை மற்றும் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தால் மனம் தானாக அமைதியடையும். அமைதியடைந்த மனம் ஒரு வலிமையான ஆயுதம் என்றே சொல்ல வேண்டும்.

**தியானம் மற்றும் உயர் உணர்வு நிலை பெற சிந்தனை மற்றும் பயிற்சி களைத் தொடர்ந்து செய்து வந்தால் மனம் தானாக அமைதியடையும்.**

### ஆழ்மன சக்தியால் குணப்படுத்திக் கொள்ளும் வழிகள்

- முதலில் தலைவலி போன்ற தற்காலிக சிறிய உபாதைகளை நீக்க பயிற்சி செய்து பழகிக் கொள்ளுங்கள். இதில் வெற்றி கண்ட பிறகு சற்று பெரிய, தொடர்ந்து வருத்தும் நோய் அல்லது உபாதைகளை நீக்க நீங்கள் முயலலாம்.
- மூச்சுப் பயிற்சி செய்து மூச்சை சீராக்குங்கள். பின் சில வினாடிகள் உங்கள் வலி மீதே முழு சிந்தனையை வையுங்கள். பின் ‘இந்த வலி சிறிது சிறிதாகக் குறைய ஆரம்பிக்கிறது’ என்ற எண்ணத்தை உங்களுக்குள் நிதானமாக, அழுத்தமாக சில முறை சொல்லிக் கொள்ளுங்கள். பின் நீங்கள் அந்த தலைவலி இல்லாமல் முழு ஆரோக்கியமாக இருப்பது போல மனதில் காட்சியை உருவகப்படுத்திப் பாருங்கள். தலைவலி என்கிற எண்ணத்தைப் பலமிழக்க வைத்து ஆரோக்கியம் என்கிற எண்ணத்திற்கு தான் நீங்கள் சக்தி சேர்க்க வேண்டும்.
- உறங்குகின்ற நேரத்தில் இந்தப் பயிற்சியைச் செய்து கொண்டே நீங்கள் உறங்கி விடுவது வேகமாக அதைக் குணமாக்கி விட உதவும் . அப்படித் தேர்ச்சி பெற்றிருந்தால் நோய்க்கிருமிகள் உங்கள் உடலை நெருங்கிய அந்தக் கணத்திலேயே உங்களால் உணர முடியும். வலிமையான மன நிலையின் மூலம் அவற்றை விரட்டி விட  முடியும்.



- உங்கள் வீட்டிலோ, நீங்கள் வசிக்கும் பகுதியிலோ நோய் தொற்று பரவி வந்தால் அந்த நோய் உங்களை நெருங்காதபடி ஆழ்மன சக்தியை உபயோகித்து ஒரு பாதுகாப்பு வளையத்தைக் கூட நீங்கள் உருவாக்கிக் கொள்ளலாம். அந்த நோயை எதிர்க்கும் அல்லது வர விடாமல் தடுக்க வல்ல பெரும் சக்தி வாய்ந்த பொன்னிற பாதுகாப்பு வளையம் உங்களைச் சுற்றி இருப்பதாக மனக்கண்ணில் உருவகப்படுத்தி தத்ரூபமாகக் காணுங்கள்.
- ஒரு நாளில் ஓரிரு முறை இப்படி உருவகப்படுத்தி ஆழமாக உணர்ந்து இரவில் உறங்கும் போதும் சிறிது நேரம் உருவகப்படுத்துங்கள். உங்களைச் சுற்றி உள்ள அந்த பாதுகாப்பு வளையத்தை அடிக்கடி உணருங்கள். ஆனால், இதெல்லாம் சாத்தியமாக பயிற்சிகள் செய்து உங்கள் ஆழ்மனதை சக்தி வாய்ந்த ஆயுதமாக நீங்கள் வைத்திருக்க வேண்டும் என்பது முக்கியம்.




மனதை வென்ற மங்கையர்

# ஈழத்து பெண் ஆளுமை செல்வி திருச்சந்திரன்



**கொ**ழும்பு பெண்கள் ஆய்வு நிறுவனத்தை நிறுவிய செல்வி திருச்சந்திரன் பெண்ணியம் தொடர்பான பல நூல்களை எழுதியுள்ளார்.

## வரலாறு+மானுடவியல்+பெண்ணியம்=செல்வி திருச்சந்திரன்

"நிவேதினி" என்கின்ற பெண்ணிய சஞ்சிகையை பெண்ணிய ஆய்வுக்கான ஏடாகக் கொண்டுவந்தவர். இவர் அரசியல் மூத்த அறிஞர் "திரு ஹன்டி பேரின்ப நாயகத்தின்" மகள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவருடைய எழுத்துகள் ஆழமான கருத்துகளை ஆய்வு நோக்கில் வெளிப்படுத்துபவை.

இலங்கையின் வடபகுதி மானிப்பாயை சேர்ந்த இவர் இலங்கை பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் செயற்திட்டம், பெண்ணின் குரல் தமிழ் ஆங்கில இதழ்கள், தெற்காசிய பெண்ணிய ஆய்வு முன்னணி ஆசிரியர் குழு ஆகியவற்றில் முக்கிய பொறுப்புகளை ஆற்றி வந்துள்ளார்.

தழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்க செல்வி திருச்சந்திரன், இரு மொழிகளிலுமே பெண்ணியம் சார்ந்த ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். வரலாற்றையும் மானுடவியலையும் இணைத்து பெண்ணிலை நோக்கில் மேற்கொண்டு வரும் இவரது ஆய்வு முயற்சிகள் பெண்களின் விழிப்புணர்வுக்கு அடிகோலுவதாயுள்ளது. பெண்ணியம் சார் விவாதங்களுக்கு சரியான பதில்களை தரவல்லவராகவும் பெண் கல்வியை ஊக்குவிப்பதில் முன்னின்று உழைப்பவராகவும் காணப்படுகின்றார்.

நிவேதினி சஞ்சிகையில் அவர் ஆழ்ந்து நோக்கிய அம்சங்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

அவையாவன, யாழ்ப்பாண சமூகத்தின் கருத்தியலும் கட்டமைப்புகளும் நிர்ணயிக்கும் பால் நிலைப்பாடு, பால்நிலை சமத்துவத்துக்கும், மரபுவழி நோக்கலுக்கும் உள்ள சில முரண்பாடுகள், முற்போக்குவாத தேசிய பால்நிலை உருவாக்கங்களும் அவற்றின் முரண்பாடுகளும், பக்தியின் மறு பக்கம் பெண்களின் மறுதலிப்புகளா?, தேசவழமைச் சட்டத்தில் சமூகப் பரிமாணங்களும் யாழ்ப்பாணப் பெண்களின் சமூகப் பங்கும், மனித உரிமைக்கு கல்வியும் பெண்களை ஆக்க வலுவாக்கலும் போன்ற ஆய்வுகளைக் குறிப்பிடலாம். கொழும்பு பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் இயக்குனராகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிறப்பு அதிதியாகவும் தெற்காசிய பெண்ணிய ஆய்வு முன்னணி வெளியிடும் சஞ்சிகையின் ஆசிரிய குழு உறுப்பினராகவும் பணியாற்றி வரும் இவர், பெண்ணியம் சார்ந்த பல்வேறு அமைப்புகளிலும் முக்கிய பொறுப்புகளை வகித்து வந்துள்ளார்.



பெண்களின் உரிமைகளை உணர்த்துவதற்காக வடக்கு, கிழக்கு மலையகப் பகுதிகளில் உள்ள பெண்களுக்கான செயலமர்வுகளை நடத்தி அவர்களுக்கான உரிமைகள், அபிவிருத்தி மேம்பாடுகள் குறித்து வலுவூட்டல் நிகழ்வுகளை நடாத்தி அதனில் பாரிய வெற்றியும் கண்டுள்ளார்.

இவ்வாறு பெண்ணிய செயற்பாடுகளில் இன்றுவரை முன்னின்று உழைத்து வரும் செல்வி திருச்சந்திரன, இலங்கையின் பெண்ணிலை சார் முன்னோடிகளில் மிக முக்கியமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ■




- பாகற்காயுடன் உப்பு, மஞ்சள் தூள், சீனி, எலுமிச்சைச் சாறு ஆகியவற்றை சேர்த்து அரை மணிநேரம் வைத்திருந்தால் கசப்பு காணாமல் போய்விடும்.
- இட்லிக்கு அரைத்த மாவில் இரண்டு தேக்கரண்டி நல்லெண்ணெய் விட்டு கலந்து செய்தால் இட்லி மிருதுவாக இருக்கும்.
- கத்தரிக்காய் வேக வைக்கும்போது, அதனுடன் ஒரு தேக்கரண்டி தயிர் சேர்த்தால் கத்தரிக்காய் நிறம் மாறாமல் இருக்கும்.
- முருங்கை இலைகளை உருவிய பிறகு அதன் காம்புகளை நறுக்கிப்போட்டு மிளகு இரசம் வைத்து சாப்பிட்டால், உடல், கை, கால் அசதி நீங்கும்.
- காய்கறிகள் வதங்கி போய்விட்டால் தூக்கி எறியாமல் அதில் சில துளி எலுமிச்சை பழச்சாறு பிழிந்துவிட்டால், சில மணி நேரத்தில் காய்கறிகள் வதங்கிய தன்மை மாறி புதியதாக பளிச்சென்று இருக்கும்.
- தேங்காயைத் துண்டுகளாக வெட்டி, ஒரு மணி நேரம் ஃப்ரீஸரில் வைத்து விடுங்கள், பின்னர் கிரைண்டரில், தண்ணீர் விடாமல் சில விநாடிகள் சுற்றினால், துருவியது போலவே பூப்பூவாக வந்து விடும்.
- வாழைக்காயை வெட்டும் முன் கைகளில் உப்பு தூளை தடவிக் கொண்டால் கைகளில் பிசுபிசுப்பும், கறையும் வராது.
- அரிசி மற்றும் தானியங்கள் வைக்கும் பாத்திரத்தில் வெள்ளைப் பூண்டோ அல்லது மஞ்சள் துண்டையோ போட்டு வைத்தால் பூச்சிகள் அண்டாது.



# பொடுகு தொல்லைக்கு இயற்கை தீர்வு




■ எலுமிச்சையில் பொடுகை விரட்டும் பண்பு அதிகம் உள்ளதால், எளிதில் போக்கும். 2 அல்லது 3 தேக்கரண்டி தேனுடன் சிறிதளவு எலுமிச்சை சாறு கலந்து உச்சந்தலையில் மாஸ்க் போன்று அப்ளை செய்ய வேண்டும். சுமார் 15 நிமிடங்கள் கழித்து சுத்தமான குளிர்ந்த நீரைக் கொண்டு கழுவினால் பொடுகு படிப்படியாக குறையும். இதை வாரத்திற்கு இரண்டு முறை அல்லது மாதத்திற்கு 5 முறை செய்தால் சிறந்த பலனளிக்கும்.

■ இயற்கை முறையில் தயாரிக்கப்படும் தேங்காய் எண்ணெய் முடி வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிறது. குறிப்பாக குளிர்காலத்தில் தேங்காய் எண்ணெய் பயன்படுத்துவதன் மூலம் வறட்சியை தடுத்து முடி வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. வேப்ப எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெயை சம அளவு சேர்த்து உச்சந்தலையில் தடவிய பின் மெதுவாக மசாஜ் செய்யவும். பிறகு ஷெம்போ கொண்டு தலை முடியை அலச வேண்டும். வேம்பு மற்றும் தேங்காய் எண்ணெய்யின் நற்குணங்கள் தலைமுடிக்கு ஆரோக்கியத்தை கொடுக்கும்.

■ குளிர்காலத்தில் பொடுகை போக்குவதில் தயிர் முக்கிய பங்கு வகிக்கிறது. தயிருடன் சிறிதளவு எலுமிச்சை சாற்றை கலந்து அதனை உச்சந்தலையில் தடவவும். அரை மணி நேரம் கழித்து ஷெம்போ கொண்டு தலையை அலச வேண்டும். இதனை தொடர்ந்து செய்வதன் மூலம் பொடுகு தொல்லை விரைவில் நீங்கும்.

■ குளிர்காலங்களில் தலைமுடியைக் அலசுவதற்கு மிதமான அளவே சூடாக இருக்கும் தண்ணீரைப் பயன்படுத்துவது அவசியமாகும்.






## பீட்ரூட் இடியப்பம்

**தேவையான பொருட்கள்**

பீட்ரூட் - 2 கோப்பை
இடியப்ப மா - 1 கோப்பை
உப்பு - தேவையான அளவு
நெய் - 1 தேக்கரண்டி

**செய்முறை**

■ முதலில் பீட்ரூட்டை வெட்டி, 2 கோப்பை அளவிற்கு எடுத்துக் கொள்ளவும். இதை சிறிது தண்ணீர் விட்டு அரைத்து பீட்ரூட் சாற்றை வடிகட்டி எடுத்துக் கொள்ளவும்.

■ இப்போது இந்த சாற்றை, ஒரு பாத்திரத்தில் ஊற்றி கொதிக்கவிட்டு எடுத்து வைத்துக்கொள்ளவும்.

■ ஒரு பாத்திரத்தில் இடியாப்ப மா, உப்பு, நெய், பீட்ரூட் சாறு ஆகியவற்றை சேர்த்து மாவை நன்றாக பிசைந்து எடுத்துக் கொள்ளவும்.

■ இந்த மாவை ஒரு 5 நிமிடம் ஊற வைத்துவிட்டு பிறகு அதில் இடியப்பம் செய்யவும்.

**சுவையான பீட்ரூட் இடியப்பம் தயார்.**






# கை, கால் மூட்டுகளில் கருமை நீங்க

■ எலுமிச்சை பழத்தை இரண்டாக அறிந்து கருமையுள்ள இடத்தில் நன்றாக தேய்த்து ஊறவைத்து கழுவினால் கருமை மறையும்.

■ எலுமிச்சை சாறுடன் பாலாடை, வெள்ளரிக்காய் சாறு, மஞ்சள் தூள், தேங்காய் எண்ணெய் சேர்த்து பேஸ்ட் போல் தயாரித்து கருமை உள்ள இடத்தில் தடவி, ஊறவிட்டு 10நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் கழுவினால் கருமைக்கு தீர்வு கிடைக்கும்.

■ வெள்ளரிக்காய் சாறு, வினிகர், மஞ்சள் தூள் மூன்றையும் கலந்து கருமை உள்ள இடங்களில் தேய்த்து ஊறவிட்டு 20 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் கழுவினால் கருமை மறையும்.

■ தயிர் மூன்று தேக்கரண்டி எடுத்து, அதனுடன் சில துளிகள் வினிகர் சேர்த்து கலந்து கருமை உள்ள இடத்தில் தடவி வரலாம்.

■ கடலை மா இரண்டு தேக்கரண்டி, மஞ்சள் தூள் சிறிதளவு, பால் மூன்றையும் ஒன்றாக கலந்து கருமை உள்ள இடத்தில் சிறிது நேரம் கழித்து நீரால் கழுவினால் மறையும்.

# மேக்கப் டிப்ஸ்




**மே**க்கப் செய்வதற்கு முன், முகத்தை நன்றாக கழுவவேண்டும். முகத்தில் பரு, சிறுசிறு துளைகள் இருந்தால் அதை 'பிரைமர்' எனப்படும் பூசு பொருள் கொண்டு சரிசெய்த பிறகு, 'பவுண்டேஷன்' பூச வேண்டும். நம்முடைய நிறத்திற்கு ஏற்ற பவுண்டேஷன்களை தெரிவு செய்வது கடினம் என்றாலும், அதில் அதீத கவனம் செலுத்தினால் மேக்கப் செய்திருப்பதே தெரியாத அளவிற்கு "நீட்"டாக இருக்கும்.



■ எண்ணெய் பசை தன்மை கொண்டவர்கள், 'கொம்பெக்ட் பவுடர்' பயன்படுத்துவது நல்லது. கண்களுக்கு கீழ் இருக்கும் கருவிழிகளை 'கன்சீலர்' கொண்டு சீராக்கலாம்.

■ மேக்கப்பை கூடுதல் பொலிவாக்க, "பிரான்சர்" கொண்டு ஜொலிக்க வைக்கலாம்.

■ "கான்டர்" என்பதை பயன்படுத்துவதன் மூலம் குண்டாக தெரியும் முகத்தை கூட, ஒல்லியாக காட்டமுடியும்.

■ மேக்கப்பை கலைப்பதற்கு என பிரத்தியேக லோஷன் இருக்கிறது. இல்லாதபட்சத்தில் தேங்காய் எண்ணெய் தேய்த்து, மேக்கப்பை கலைக்கலாம்.

■ இரவு தூங்க செல்லும் முன், கட்டாயமாக மேக்கப்பை கலைக்க வேண்டும். ஏனெனில் மேக்கப் கிரீம் பூசுவதால் அடைக்கப்பட்டிருக்கும் சரும துளைகள் அதற்கு பிறகுதான் சுவாசிக்க ஆரம்பிக்கும்.






## குறளும் பொருளும்

அதிகாரம்: 02 வான்சிறப்பு

**குறள் 15:** கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை

**பொருள்:** பெய்யாமல் மக்களைக் கெடுப்பதும், பெய்து கெட்டவரைத் திருத்துவதும் எல்லாமே மழைதான்.

**குறள் 16:** விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே பசும்புல் தலைகாண் பரிது

**பொருள்:** மேகத்திலிருந்து மழைத்துளி விழாது போனால், பசும்புல்லின் நுனியைக்கூட இங்கே காண்பது அரிதாகிவிடும்.


ஏ.தீக்ஷித் அவினா, நாவலப்பிட்டி


முஹம்மது சாஹித், கந்தானை


எஸ்.மைத்ரேயா, நாவலப்பிட்டி


எஸ்.நவித்ரேயா, நாவலப்பிட்டி

# சுத்தமான பறவையான பூநாரை





பூநாரை அல்லது செங்கால் நாரை என்று அழைக்கப்படும் நாரை வகையைச் சேர்ந்த இப்பறவை ஆங்கிலத்தில் கிரேட்டர் ஃபிளமிங்கோ (GREATER FLAMINGOS) என்று அழைக்கப்பட்டுகின்றது. ஃபிளமிங்கோ எனும் சொல் இலத்தின் மொழியிலிருந்து வந்தது. இவற்றில் நான்கு வகையான நாரைகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும், இரண்டு வகையான நாரைகள் யுரேசியா பகுதியிலும் காணப்படுகின்றன.

இது நீர் நிலைகளை நம்பியே வாழும் பறவை. உப்புத் தன்மை உள்ள ஏரிகளிலும், சகதி நிறைந்த குளங்களிலும் நாம் இவற்றைக் காணலாம். நீண்டு, வளைந்த கழுத்தும், குறுகிய வளைந்த அலகும், நீண்ட முடியற்ற இளஞ்சிவப்பு நிறத்தைக் கொண்ட கால்களும் கொண்டிருக்கும்.

இந்தப் பறவை என்னதான் சேறு, சகதிகளில் தனக்கான உணவைத் தேடிக் கொண்டாலும் இதன் இறகுகளில் படியும் கறையையும், சேற்றையும் தன் உடலில் உற்பத்தியாகும் ஒரு வகையான சிறப்பு எண்ணெய்யை அதன் அலகுகளின் உதவியுடன் இறகுகள் மீது பரவச் செய்து தன்னைத்தானே சுத்தப்படுத்துகிறது.

ஒரு நாளில் தங்கள் இறகுகளைச் சுத்தம் செய்வதில் சுமார் 15 இல் இருந்து 30 சதவிகித நேரத்தைச் செலவிடுகின்றது. இச் செயலால் எப்பொழுதும் ஃபிளமிங்கோ சுத்தமாக இருக்கும்.

இப்பறவை இனம் இரை தேடுவதற்கு செல்லும்போது கூட்டம், கூட்டமாகத் தங்களது இளஞ்சிவப்பு நிறக் கால்களைப் பின்னோக்கி நீட்டியும் நீண்ட கழுத்தை முன்னோக்கி நீட்டியும் பறந்து செல்வதைக் காணலாம். இது 1 மணி நேரத்திற்கு 60கி.மீ. வேகத்தில் ஒரு நாளைக்கு 600 கிலோ மீற்றர் தொலைவு பறந்து செல்லும் ஆற்றல் கொண்டது.

## தெரியுமா?

இடக் கைப் பழக்கமுடையவர்களின் எண்ணிக்கை நாட்டுக்கு நாடு மற்றும் ஒரு நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்குள்ளும் வேறுபடுகிறது.

அறிவியல் கோட்பாடுகளின் படி, இரண்டு இடக்கைப் பழக்கமுடைய பெற்றோரைக் கொண்ட குடும்பங்களிலும், பரம்பரையாக இடக் கைப்பழக்கமுடையவர்களின் விகிதங்களைப் பொருத்தும் இந்த விகிதங்கள் மாறுபடும்.

மேலும், இடக்கை மற்றும் வலக் கைகளின் பயன்பாடு ஒரு குழந்தை தன் தாயின் கருவறையில் வளரும் பொழுதே தீர்மானிக்கப்பட்டுவிடுகிறது. இந்தப் பழக்கம் தாயின் வயிற்றினுள் இருக்கும் பொழுது குழந்தை தனது வாயினுள் பெருவிரல் வைக்கும் பொழுதிலிருந்து தொடங்குகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

## இலக்கங்களை இணைத்து உருவத்தை வரையுங்கள்



## நிறந்தீட்டி மகிழுங்கள்



## வரைந்து பழகுவோம்




ஒருவன் மின்மினி

அன்பு தம்பி, தங்கையரே, இது உங்களுக்கான பக்கம். இதில் உங்கள் சித்திரங்கள், ஆக்கங்கள், பிறந்தநாள் வாழ்த்துகள், உங்கள் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் இப்பகுதி பற்றிய உங்கள் கருத்துகளை நீங்கள் எங்களுடன் வட்ஸப் அல்லது தபால் மூலம் பகிர்ந்துகொள்ளலாம். அவை, ஒருவன் மின்மினி பக்கத்தில் வெளியாகும்.

ஆசிரியர் பீடம், பெல்லாட்ரிக்ஸ் கட்டிடம், 2ஆம் மாடி, டெனிஸ்டர் சில்வா மாவத்தை, கொழும்பு – 09

0740162534

# சிறுத்தையும் மான்களும்



ஒரு நாள் சிறுத்தை பசியுடன் உணவைத் தேடியது. அப்போது ஒரு கறுப்பு மானையும் புள்ளி மானையும் கண்டது.

அவை இரண்டும் மலையடி–வாரத்தில் மேய்ந்து கொண்டிருந்தன. சிறுத்தை மிகுந்த எச்சரிக்கையுடன் மலையடிவாரத்தருகே சென்றது. ஆனால், எதனைத் தாக்குவது என அது முடிவு செய்யவில்லை.

அதே நேரத்தில் சிறுத்தையைப் பார்த்த மான்கள் இரண்டும் வேகமாக ஓடின. பிறகு அவை இரண்டும் ஒரு இடத்தில் இடது வலது பாதைகளில் ஓடின.

சிறுத்தை அந்த இடத்துக்கு வந்தது. 'எதைத் துரத்தலாம்' என்று தயங்கி நின்றது. பிறகு, "சரி.. கறுப்பு மானைத் துரத்தலாம். அதன் இறைச்சிதான் சுவையாக இருக்கும்" என்று முடிவு செய்து கறுப்பு மானைத் துரத்தத் தொடங்கியது. ஆனால், அதற்குள் அது தொலைதூரம் ஓடிப் போய் விட்டது.

உடனே சிறுத்தை "அது வேகமாக ஓடக் கூடிய மான். அதைப் பிடிக்க முடியாது. பசி வேறு அதிகமாகி விட்டது. சரி புள்ளி மானைப் பிடிக்கலாம்" என்று தீர்மானித்து மற்ற பாதையில் ஓடியது. ஆனால், புள்ளிமான் எப்போதோ பஞ்சாய்ப் பறந்துவிட்டிருந்தது.

***நீதி:* முக்கியமான நேரத்தில் முக்கியமான் முடிவை விரைவாக எடுக்க வேண்டும்.**

**எம்.ஐ.விபாஷினி,**
**தரம் 06,**
**கொட்டகலை.**



## "எதிரிகளைத் தாக்க கட்டப்படும் கோட்டைகளே கல்வி சாலைகள்"

கன்பூசியஸ்

கி .மு 551ஆம் ஆண்டு சீனாவில் பிறந்த கன்பூசியஸ், ஒரு சிந்தனையாளரும், சமூக மெய்யியலாளரும் ஆவார். இளம் வயதிலேயே மிகச்சிறந்த வரலாற்று ஆசிரியராக விளங்கினார். இவரின் சிந்தனைகளும் கருத்துகளும் தனிமனித வாழ்வு, அரசாட்சி, நீதி, நல்லொழுக்கம் மற்றும் சமூகம் சார்ந்ததாக இருந்தன.

இவருடைய கருத்துகளானது பல நாடுகளின் வாழ்வியல் சிந்தனைகளில் பெரும்பங்கு வகித்தன. அரசாங்கத்தின் சிறப்பான செயல்பாட்டிற்கு தேவையான கொள்கைகளை உருவாக்கிக் கொடுத்தார். இவரின் கொள்கைகள் கன்பூசியம் என்ற வாழ்க்கை முறையாக வளர்ச்சியடைந்து பின்பற்றப்படுகின்றன. சீன தேசம் உலகுக்குத் தந்த பெருங்கொடை என வரலாற்றாசிரியர்கள் இவரை அழைக்கிறார்கள்.

## நாயகர்கள் நாட்களிலிருந்து—

# சம உரிமைப் போராளி

## மார்ட்டின் லூதர் கிங் - (Martin Luther King)



அமெரிக்காவின் ஜோர்ஜியா அட்லாண்டா நகரில் பிறந்தவர் தான் மார்ட்டின் லூதர் கிங். இவரது தந்தை அந்த வட்டாரத்தில் கிறிஸ்தவத் தலைவராக இருந்தமையால் மகனும் மதகுருவாக விரும்பினார். போஸ்டன் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவ சமயத் தத்துவங்களைக் கற்று 1954ஆம் ஆண்டில் சமயத் துறைக்கான டொக்டர் பட்டம் பெற்றார்.

நீக்ரோ மக்கள், வெள்ளையரின் கொடுமைகளால் துன்பப்பட்டதைக் கண்டு கொதித்தெழுந்தார். பேருந்துக் கிளர்ச்சி அறப்போரினை முதலில் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 26.

அமெரிக்காவில் நீக்ரோக்கள் பேருந்துகளில் பயணம் செய்யும்போது வெள்ளையர்கள் ஏறினால் நீக்ரோக்கள் எழுந்து தமது இருக்கையைக் கொடுக்க வேண்டும். கொடுக்க மறுப்பவர்களுக்கு அடி, உதை கிடைக்கும்.

பேருந்தின் தலைவர்களாக ஆங்கிலேயர்கள் இருந்தமையால், அவர்களும் நீக்ரோக்களுக்கு எதிராகவே செயல்பட்டனர். இந்த நடைமுறையினைக் கடுமையாக எதிர்த்தார் கிங். நீக்ரோக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பேருந்துகளைப் புறக்கணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நீக்ரோ மக்களும் கிங் சொன்னதைப் பின் பற்றினர். பேருந்துகளில் கூட்டம் குறைந்தது. பேருந்து நிறுவனங்களில் வேலை செய்துவந்த நீக்ரோக்களும் தங்களது வேலையை விட்டு வெளியேறினர். இதனால் பேருந்துத் தொழிலே நலிவடைந்தது. பேருந்து உரிமையாளர்கள் லூதர் கிங்கிற்குப் பணம் கொடுக்க முன்வந்தனர் பின்பு மிரட்டினர். எதற்கும் அசையவில்லை கிங். இறுதியில், பேருந்து தொழிலே லூதர் கிங்கால் நலிவடைந்துவிட்டதாகக் குறைகூறி கிங் மீது வழக்குத் தொடுத்தனர்.

பெரிய பெரிய வழக்குரைஞர்கள் பேருந்து உரிமையாளர்களுக்காக வாதாடினர். தனித்து நின்று வெள்ளையர்களை எதிர்த்த கிங், தன் இன மக்களுக்காக தானே வாதாடினார். வெள்ளையருக்குச் சமமான உரிமை நீக்ரோ மக்களுக்கு உண்டு என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்த வழக்கின் தீர்ப்பினால் கிங் உலகப் புகழைப் பெற்றதோடு உலகம் புகழும் தலைவரானார்.

# இதயத்துக்கு ஆபத்தாகும் வாகன இரைச்சல்...!




வாகன இரைச்சல் இதயத்திற்கு ஆபத்தாக முடியலாம் என சமீபத்திய மருத்துவ ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

காதைக்கிழிக்கும் வாகனங்களின் ஒலிகள் நகரங்களில் வாழ்வோர் அன்றாடம் எதிர்கொள்ளும் நிகழ்வுகள். இவை அப்போதைக்கு எரிச்சலை தந்தாலும் அதன் பின் உடல் நலனுக்கே உலை வைக்கும் மறைமுகமான ஆபத்தும் ஒளிந்திருப்பதாக எச்சரிக்கின்றன மருத்துவ ஆய்வுகள். இரு சக்கர வாகனங்களும் கார்களும் தலைமையிலான பல்வேறு நாட்டு நிபுணர்கள் அடங்கிய குழு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஒவ்வொரு 10 டெசிபல் ஒலி அதிகரிப்பின் போதும் உயர் இரத்த அழுத்தம், இரத்த நாளகோளாறுகள், பக்கவாதம் உள்ளிட்ட பாதிப்புகளுக்கான வாய்ப்புகள் 3.2% அதிகரிப்பதாக ஆய்வு தெரிவிக்கிறது.

குறிப்பாக இரவு நேரங்களில் கேட்கும் வாகன இரைச்சல் மிக அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இரைச்சல்களை குறைக்க வாகன வேகத்தை குறைப்பது,



பேருந்துகளும் இரயில்களும் எழுப்பும் அதீத பேரொலிகள் இதய இரத்த நாள நோய்களை ஏற்படுத்த தூண்டுதலாக அமையும் என்றும் சில நேரங்களில் மாரடைப்பைக் கூட ஏற்படுத்தும் என, ஜெர்மனியை சேர்ந்த மெய்ன்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் தோமஸ் நிஜல் உரிய தடுப்புகளை வைப்பது, நவீன டயர்களை பயன்படுத்துவது போன்ற யோசனைகளை கையாளப்பட வேண்டும் என்றும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■




# பச்சிளம் குழந்தைகளை பாதிக்கும் நோய்த்தொற்று



பச்சிளம் குழந்தைகளில் நோய் எதிர்ப்பு சக்தி மண்டலம் போதுமான வளர்ச்சி அடைந்திராத காரணத்தால், நோய்த்தொற்று ஏற்படவும் அதனால் தீவிர பாதிப்புகள் ஏற்படவும் வாய்ப்புகள் அதிகரிக்கும். பச்சிளம் குழந்தைகளில் ஏற்படும் நோய்த்தொற்றை Neonatal Sepsis என்பார்கள்.

இரத்தத்தில் நோய்த்தொற்று, மூளைக்காய்ச்சல், நிமோனியா, எலும்பு அழற்சி மற்றும் சிறுநீர்ப்பாதைத் தொற்று ஆகியன பச்சிளம் குழந்தைகளை பாதிக்கும் செப்சிஸ் நோய்த் தொற்றுகள் ஆகும். செப்சிஸால், அதிக அளவு பச்சிளம் குழந்தைகள் மரணங்கள் நிகழ்கின்றன. 14% பச்சிளம் குழந்தைகளுக்கு செப்சிஸ் நோய்த்தொற்று ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

குழந்தை பிறந்த முதல் 72 மணி நேரத்துக்குள் ஏற்படும் நோய்த்தொற்றானது, ஆரம்ப தொடக்க செப்சிஸ் (Early Onset Sepsis) எனவும், 72 மணி நேரத்துக்குப் பிறகு ஏற்படும் நோய்த்தொற்று தாமத தொடக்க செப்சிஸ் (Late Onset Sepsis) எனவும் அழைக்கப்படுகின்றன.

தாய்க்கு, Chorioamnionitis போன்ற நோய்த் தொற்றுகள் இருக்கும்போது, குழந்தைக்கு ஆரம்ப தொடக்க செப்சிஸ் ஏற்படும் அபாயம் அதிகம். ஆரம்ப தொடக்க செப்சிஸ் பாதிப்பு ஏற்பட்ட குழந்தைகளுக்கு பெரும்பாலும் மூச்சுத் திணறலுடன் நிமோனியா பாதிப்பு ஏற்படும். தாமத தொடக்க செப்சிஸ் பெரும்பாலும் மருத்துவமனையில் உள்ள நோய்க்கிருமிகள் மூலம் நோய்த்தொற்று ஏற்பட்டிருக்கும்.

தாழ்வெப்பநிலை, காய்ச்சல்,




சரியாகத் தாய்ப்பால் பருகாதது, மூச்சுத்திணறல், குறைந்த அல்லது அதிக இதயத் துடிப்பு, குறைந்த அல்லது அதிக இரத்தச் சர்க்கரை அளவு ஆகியன பச்சிளம் குழந்தைகளில் ஏற்படும் நோய்த்தொற்றின் அறிகுறிகள் ஆகும்.

இந்த அறிகுறிகள் இருந்தால், நோய்த்தொற்றை உறுதிப்படுத்த இரத்தப் பரிசோதனைகள் செய்யப்படும். இரத்தத்தில் உள்ள நோய்த் தொற்று, மூளைக்குச் செல்வதைத் தடுக்கும் தடுப்பான Blood-brain barrier பச்சிளம் குழந்தைகளில் போதுமான வளர்ச்சி அடைந்திராத காரணத்தால், குழந்தைக்கு நோய்த்தொற்று இருந்தால், மூளைக்காய்ச்சல் ஏற்படும் அபாயம் அதிகமாகும்.

எனவே, செப்சிஸ் இருக்கும் பட்சத்தில் (Lumbar Puncture – அடிமுதுகுத் துளையிடுதல்) செய்யப்பட்டு, மூளை தண்டுவட திரவம் சேகரிக்கப்பட்டு, பரிசோதனை மூலம் மூளைக் காய்ச்சல் இருக்கிறதா என்பது உறுதிப்படுத்தப்படும். செப்சிஸ் எந்த வகை என்பதைப் பொறுத்து, எத்தனை நாள் இரத்தநாள வழியாக அன்டிபயோடிக் மருந்துகள் கொடுக்க வேண்டும் என்பது முடிவு செய்யப்படும்.

உதாரணமாக, இரத்ததில் நோய்த்தொற்று உறுதிப்படுத்தப் பட்டிருந்தால் 14 நாட்களும், மூளைக் காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் 21 நாட்களும் இரத்த நாளம் வழியாக அன்டிபயோடிக் மருந்துகள் கொடுக்கப்படும்.

பச்சிளம் குழந்தைகளில், நோய்த்தொற்றினால் தீவிர பாதிப்புகள் மட்டுமல்லாது மரணம் கூட நிகழ அபாயம் அதிகம். எனவே, நோய்த்தொற்று ஏற்படாமல் பாதுகாப்பது மிகமிக முக்கியம் என்கின்றனர் மருத்துவ வல்லுனர்கள். ■

# கடல் மீனா, ஆற்று மீனா எது சிறந்தது?







மீன்களில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தப் பொருட்களும் இல்லை என்பதால் மீன் அனைத்து வயதினருக்கும் ஏற்ற, சிறந்த ஓர் உணவு என்கின்றனர் உணவுத்துறை வல்லுநர்கள்.

மீன் உணவு அதிக ஊட்டச்சத்துகள் நிறைந்தது. கடல் மீன், ஆற்று மீன், ஏரி மீன்கள் போன்றவை வளர்வது வெவ்வேறு சூழலில் உள்ள நீர் நிலைகளில்தான் என்றாலும் அவற்றில் உள்ள ஊட்டச்சத்துகள் பெரும்பாலும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

மீனில் புரதச்சத்து மிகவும் அதிகம், மற்றும் கொழுப்பு மிகவும் குறைவு. இதனால், அனைத்து வயதினருக்கும் ஏற்ற ஓர் உணவாக மீன் உள்ளது.

ஆற்று மீன் மற்றும் கடல் மீன் இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசம் என்னவென்றால் ஆற்று மீன், ஏரி மீன்கள் எல்லாம் ஆறு, குளம், ஏரிகளில் உள்ள புழு, பூச்சிகளை உணவாக உட்கொண்டு வளரும். ஆனால், கடல் மீன்கள் கடலில் வளரும் கடல்பாசிகளை உட்கொண்டு வளர்வதால் அவற்றில் ஒமேகா-3 போன்ற குறிப்பிட்ட சத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. கடல்பாசிகளில் ஒமேகா-3 என்ற கொழுப்பு அமிலமும் (Fatty Acid), புரதச்சத்தும் அதிகம் உள்ளது.

எனவே, இவற்றைச் சாப்பிட்டு வளரும் கடல் மீன்களிலும் ஒமேகா-3 உள்ளது. ஆனால், ஆற்று மீன்களில் இந்தக் கொழுப்பு அமிலம் காணப்படுவதில்லை. குறிப்பாகக் கடல் மீன்களில் பெரிய மீன்களைவிடச் சிறிய மீன்களில்தான் இந்த ஒமேகா-3 நிறைந்துள்ளது.

இந்த ஒமேகா-3 உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் மிகவும் சிறந்தது. இது உடலில் இரத்தம் உறையாமல் பார்த்துக் கொள்கிறது. இதயம், மூளை போன்றவற்றின் ஆரோக்கியத்திற்கும், மூட்டு வலியால் அவதிப்படுவோருக்கும் இந்தக் கொழுப்பு அமிலம் ஒரு சிறந்த நிவாரணியாக உள்ளது. மீன் எண்ணெய் மற்றும் மீன் மாத்திரைகள் இந்த ஒமேகா-3 கொழுப்பு அமிலத்திலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றன.

ஆனால், சிறிய மீன்களில் இருந்து வாடை அதிகம் வருவதாலும், அவற்றில் முள் அதிகம் உள்ள காரணத்தாலும் பெரும்பாலானோர் அவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதைத் தவிர்க்கின்றனர். உண்மையில் பெரிய மீன்களில் உள்ளவற்றைக் காட்டிலும் இவற்றில் அதிக ஊட்டச்சத்துகள் உள்ளன.

மேலும், ஆற்று மீன்களோடு ஒப்பிடும்போது கடல் மீன்களில் சிறிது உப்பு அதிகமாக இருக்கும் என்பது உண்மைதான் என்றாலும், அவை உடல் ஆரோக்கியத்தை ஒருபோதும் பாதிக்காது. இறைச்சி உணவுகளில் கொழுப்பு அதிகம் உள்ளதால் அதைச் சாப்பிடுவதில் உடல்நிலை காரணமாக சிலருக்கு வரையறைகள் இருக்கும்.

ஆனால், மீன்களில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் எந்தப் பொருளும் இல்லை என்பதால் மீன் அனைத்து வயதினருக்கும் ஏற்ற, சிறந்த ஓர் உணவாக உள்ளது. பால் சுறா போன்றவை பாலூட்டும் தாய்மார்களின் பால் சுரப்புக்கு உதவுகின்றன. நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிக்கின்றன. பொதுவாகவே மீன் உணவுகள் பார்வைத் திறனை மேம்படுத்தக்கூடியவை. சிலருக்கு மட்டும் சில மீன் வகைகளால் ஏதாவது ஒவ்வாமை ஏற்படலாம். அவர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் ஆறு, ஏரி, கடல் மீன்கள் என அனைத்து மீன்களையும் உணவில் சேர்த்துக்கொள்ளலாம் என்கின்றனர் உணவியல் நிபுணர்கள். ■

# காய்கறி, பழங்களை எப்படி கழுவலாம்?




■ காய்கறிகளை முறையாகச் சுத்தம் செய்து உபயோகிப்பது கிருமிகளிடமிருந்து நம்மைப் பாதுகாக்கும். சமையலின் கொதிநிலையில் கிருமிகள் போய்விடும் என்ற பொதுக்கருத்து நிலவினாலும், நீரில் நன்கு சுத்தம் செய்து சமையலில் பயன்படுத்துவது தான் சுகாதாரமானதும் ஆரோக்கியமானதும் ஆகும்.

■ ஒரு நபர் தினசரி உணவுகளில் 3 கப் அளவுக்கு காய்கறிகள், பழங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும். வேகவைத்தோ, பச்சையாகவோ, பச்சடியாகவோ சாப்பிடலாம். எந்தக் காய்கறியையும் பழத்தையும் சமைக்கவோ சாப்பிடவோ எடுத்துக்கொள்ளும் முன் ஒருமுறைக்கு இரண்டுமுறை நன்கு கழுவிச் சுத்தம் செய்துவிட வேண்டும்.

■ காய்கறிகள், பழங்களைக் கையாள்வதற்கு முன்பும், பணிகள் முடிந்த பின்பும் கைகளைக் கிருமி நாசினியாலோ சோப்பினாலோ நன்கு கழுவிவிடுதல் அவசியம்.

■ காய்கறி, பழங்களைக் கழுவுவதில் இரண்டு முறைகள் உண்டு. கண்ணுக்குத் தெரிந்த தூசுகளை நீக்குவது. அடுத்தது, கண்ணுக்குத் தெரியாத கிருமிகளை நீக்குவது.

■ காய்கறிகளும் பழங்களும் வெளித்தூசுகளில் கிடந்து வந்திருப்பவை. எனவே, அவற்றை முதலில் சுத்தமான நீரில் நன்கு கழுவிவிட வேண்டும்.

■ வெந்நீரால் கழுவ வேண்டும். சாதாரண நீரைவிட வெந்நீரால் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் அதிகமாகவும் விரைவாகவும் அழியும். ஒருமுறை கழுவியதும் வெந்நீரை கீழே ஊற்றிவிட வேண்டும். எக்காரணம் கொண்டும் மீண்டும் அந்த நீரைப் பயன்படுத்தக்கூடாது.

■ இரண்டு முறையிலும் சில விநாடிகளுக்கு நிதானமாகவும் பொறுமையாகவும் கழுவ வேண்டும். காய்கறிகளைக் கழுவுவதில் அவசரம் கூடாது.

■ எக்காரணம் கொண்டும் எந்தச் சூழலிலும், காய்கறி



பழங்களை ஒருமுறை கழுவிய நீரை மறுமுறை கழுவுவதற்குப் பயன்படுத்தவே கூடாது.

■ தண்ணீரை, ஊற்றித்தான் கழுவ வேண்டும், பாத்திரத்தில் பிடித்து வைத்து பழம் காய்கறிகளைக் கழுவக் கூடாது. ஓடுகிற நீரிலேயே கிருமிகள் அழியும்.

■ கெரட், வெள்ளரி உள்ளிட்ட காய்கறிகளையும் அப்பிள் போன்ற பழங்களையும் தோலுரித்துச் சாப்பிடுகின்றனர். இது முழுக்கவே தவறானது. தோலில்தான் நிறையச் சத்துகள் நிரம்பியிருக்கும். தோலை உரித்துக் கீழே எறிவது, சத்துக்களைத் தூக்கிப் போடுவதற்குச் சமம். ஆகவே தோலோடு அவற்றைக் கழுவி சுத்தம் செய்து சாப்பிட வேண்டும்.

# எல்லா நோய்களுக்கும் அருமருந்தாகும் கருஞ்சீரகம்...!






- கருஞ்சீரகம் எனும் மிகச்சிறந்த மூலிகைத் தாவரம் தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்டது. இறப்பைத் தவிர மற்ற எல்லா நோய்களையும் குணப்படுத்தக்கூடியது என்று இதைக் குறிப்பிட்டிருக்கிறார் நபிகள் நாயகம்.
- யுனானி மருத்துவத்தில் கருஞ்சீரக எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. அரபு நாடுகளில் இதை உணவில் சேர்த்துப் பயன்படுத்துகிறார்கள். பைபிளிலும் கருஞ்சீரகத்தைப் பற்றியக் குறிப்பு இருக்கிறது.
- மருத்துவக் குணங்கள் நிறைந்த கருஞ்சீரகத்தின் விதையில் உள்ள 'தைமோகுயினன்' (Thymoquinone) என்ற வேதிப்பொருள் வேறு எந்தத் தாவரத்திலும் இல்லை. இது, நோய் எதிர்ப்பு சக்தியை தரக்கூடியது. இதில் உடலுக்கு நன்மை செய்யும் கொழுப்பு இருப்பதால், கெட்ட கொழுப்பு குறைய உதவும். மேலும், அமினோ அமிலங்கள், விட்டமின்கள், கல்சியம், இரும்புச்சத்து போன்றவையும் இதில் உள்ளன.
- சக்திவாய்ந்த அன்டிஅக்ஸிடெண்ட் ஆகச் செயல்படும் கருஞ்சீரகம், வீக்கம் தணிக்க உதவும். ஆஸ்துமா, சுவாசப் பிரச்சினைகள் நெருங்காமல் உடலுக்கு எதிர்ப்பு சக்தியைத் தரும். இதயநோய், புற்றுநோய் போன்றவற்றைக் குணப்படுத்தும் அளவுக்கு சக்தி வாய்ந்ததாக கருஞ்சீரகம் கருதப்படுகிறது.
- இது எலும்பு மஜ்ஜை உற்பத்தியைச் சீராக்கி, புற்றுநோய்க் கட்டிகள் ஏற்படாதபடி பாதுகாக்கும். குறிப்பாக, கணையப் புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்கை வகிக்கின்றது.
- மிகச் சாதாரணமாகப் பலரையும் பாடாகப்படுத்தி வரும் மூக்கடைப்புக்கு இது நல்ல மருந்தாகும்.
- ஒரு தேக்கரண்டி கருஞ்சீரக தூளை, 50 மி.லீ தேங்காய் எண்ணெய் சேர்த்து சூடாக்கி, அதில் இரண்டு சொட்டு மூக்கில் விட்டால் மூக்கடைப்பு விலகும்.
- ஒரு தேக்கரண்டி கருஞ்சீரகத் தூளை வெந்நீர், தேன் கலந்து பருகினால் சிறுநீரகக் கற்களும் பித்தப்பைக் கற்களும் கரையும். இதை காலை, மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டு வரவேண்டியது அவசியம்.
- தொடர் இருமலால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு தேக்கரண்டி கருஞ்சீரக தூளை, அரை தேக்கரண்டி அரைத்த பூண்டு விழுதுடன் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். இது நுரையீரலில் தேங்கியிருக்கும் சளியை அகற்றும்.





# சஜித்தை நீக்க திட்டம்?

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் பதவிகளில் இருந்து சஜித் பிரேமதாசவை நீக்க புதிய சதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்தியொன்று உலாவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் அதற்கு தலைமை தாங்கி வருவதாக அறியக்கிடைத்துள்ளதுடன் அவருடன் இன்னும் சிலர் இணைந்து செயற்படுவதாகவும், எனினும், இந்த சதித் திட்டங்கள் தொடர் தோல்விகளை சந்தித்து வருவதாகவும் கூறப்படுகிறது. எதிர்க்கட்சி தலைமைப் பதவியில் இருந்து சஜித்தை நீக்கி அந்தப் பதவியை பெற்றுக்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள உறுப்பினர்களில் ஒருவர் ஐக்கிய மக்கள் கூட்டணியில் உள்ளவர்களிடம் உதவி கோரியுள்ளாராம்.

## அரசியல் அந்தப்புரம்

கனுஷியா புஷ்பகுமார்

## பொறிகளில் சிக்கியுள்ள சஜித்!



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியில் கிடைத்த தேசியப்பட்டியலில் இருந்து டலஸ் அழகப்பெரும நீக்கப் பட்டமை தொடர்பில் தற்போது விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவும் தேசிய பட்டியலில் தனது பெயரை முன்வைத்துக் கொண்டதையடுத்து, டலஸ் அழகப்பெருமவின் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடாளுமன்றத்தில் இருந்து ஜனாதிபதியை தேர்வு செய்யும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராக டலஸ் அழகப்பெரும முன்வைக் கப்பட்டார்.

அவருக்கு இம்முறை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட வழங்காததன் மூலம் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியால் ஜனாதிபதியாக முன்வைக்கப்பட்டவர் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு தகுதியற்றவர் என்பது போல் ஆகிவிட்டது எனக் கூறப்படுகின்றது. சஜித் பிரேமதாச தற்போது இவ்வாறான பல பொறிகளில் சிக்கியுள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அரசாங்கத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்



நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்களுக்கு தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்கு புறம்பாக அரசாங்க வாகனங்களை வழங்கினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தயாராக உள்ளதாக தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போதைய சட்ட கட்டமைப்பில் அரச வாகனங்களை வழங்குவதற்கான முறைமை இல்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனராம். எம்.பிக்களுக்கு வரியில்லா வாகன உரிமம் வழங்குவது நடைமுறையில் உள்ள சட்ட முறை என்றும், அதுமட்டுமின்றி, இது பொது நிதியை தவறாக பயன்படுத்துவதாகும்.

சட்ட முறைமைக்கு புறம்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் வாகனங்களை வழங்கினால் சட்டத்தின் முன் நிறுத்துவதாக சவால் விடுத்துள்ளனராம்.

# உத்தியோகபூர்வ வீடுகளுக்கு 80 பேர் வரிசையில்



மாதிவலயில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதியில், வீடுகளுக்காக சுமார் எண்பது புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

அவர்களுள், சுமார் அறுபது தேசிய மக்கள் சக்தி எம்.பி.க்கள் உள்ளடங்கின்றனர். இன்னும், ஏழு முன்னாள் எம்.பிக்கள் மாதிவலயில் உத்தியோகபூர்வ குடியிருப்பு வளாகத்தை விட்டு வெளியேறாமல் தங்கியுள்ளனர்,

இந்நிலையில், ஏறக்குறைய 110 எம்.பி.க்களுக்கு வீடுகளை வழங்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

# கட்டுநாயக்க விமான நிலையத்திலும் முன்னாள் அமைச்சர்கள் மோசடி




கட்டுநாயக்கா, சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத் தீர்வையற்ற வர்த்தக நிலையங்களுக்காக டெண்டர்களை அழைக்கும் சந்தர்ப்பத்தில், முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட மோசடி சம்பவங்கள் தற்போது வெளியாகியுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கத் தீர்வையற்ற வர்த்தக கடைத் தொகுதியில் “கோர் கிரெகரி” வகையிலான இரு கடைகளை வாடகைக்கு வழங்குவது தொடர்பிலான டெண்டரை மோசடியான முறையிலான விடயங்களுடன் இந்திய நிறுவனமான ப்ளெமிங்கோ நிறுவனத்திடம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடி சம்பவம் தொடர்பில் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

# ஹைக்கூ கவிதைகள்



எத்தனை கோடை என்றாலும்
குளிக்கையில்
சிலிர்க்கிறது
முதல் குவளைத் தண்ணீர் ..

தேடியது கிடைக்கவில்லை
கிடைத்ததிலும் தேடினேன்
நிம்மதியை....

தாஜ்மஹால் அழகு
கிளியோபட்ரா அழகு
பட்டாம் பூச்சி அழகு
சொக்கும் அழகென்றால்
உங்கள் கண்கள் தானா ?

கூடவே இருந்தும்
இல்லாதது போல்
இருந்தால்
அதுவே தனிமை

வேறெங்கும் தேடி தேடி
ஊக்கத்துக்கு பிறரை நாடி
அலைந்திடும் நேரம் எள்ளி
நகையாடும் உன் உள்
போராற்றல் !

மாற்றம் இல்லாத
அன்பொன்று உண்டு
அதன் பெயர் தான்
சுயம் என்கிற சான்று!

நீயே நான்
நானே நீ
பின் மதத்திற்கு
என்னடா வேலை ?

எம்.எஸ்.நஸீர்,
மன்னார்.




# கொடூர சடங்கு

பிரேசில் நாட்டின் அமேசான் மலைக்காடுகளில் வாழும் “சதேரே-மாவே” பழங்குடியின மக்கள் தங்கள் இனத்தின் பதின்ம வயது சிறுவர்களை வீரர்களாக உருவாக்கும் நிகழ்ச்சியாக இந்த **'Bullet Ant Glove'** என்கிற சடங்கை ஏற்பாடு செய்கிறார்கள். “புல்லட் எறும்புகள்” என்று அழைக்கப்படும் கொடூர எறும்புகளை இயற்கையான முறையில் மயக்கமடையச் செய்து அவற்றை ஒரு பெரிய கையுறையின் மேற்பகுதியில் நூற்றுக்கணக்கில் விட்டு அந்தப் பகுதியை அடைத்து விடுகின்றனர்.

அந்தக் கையுறையின் மேற்பகுதிக்கும் உள்பக்கத்திற்கும் இடையில் ஒரு மெல்லிய சணல் துணியைக் கொண்டு தடுப்பு அமைக்கப்படுகிறது. அதாவது அந்தக் கையுறையின் உள்பக்கத்திற்குள் எவரேனும் கையை நுழைத்தால், அந்தக் கையுறையின் மேற்பகுதியில் உள்ள அந்த எறும்புகளால் சணல் துணியின் தடுப்பு மூலமாகக் கொட்ட மட்டுமே முடியும், கொட்டி



சதையைப் பிய்த்து இழுக்க முடியாது. புதிய வீரர்களை உருவாக்கும் நிகழ்ச்சியாக இந்தத் துன்பத்தைத் தாங்கும் சடங்கினை பின்பற்றுகின்றனர். எறும்புகள் மயக்கம் நீங்கி மீண்டும் விழித்தெழுந்த பிறகு, சிறுவன் தன் கையைக் கையுறையில் நுழைக்க வேண்டும்.

இந்தச் சடங்கின் நோக்கம் 10 நிமிடங்கள் முழுவதும் கையுறையை அணிந்து எறும்புகளின் கொட்டுதலைத் தாங்குவதாகும். நிகழ்ச்சி முடிந்ததும், எறும்புகளின் விஷத்தால் பாதிக்கப்பட்ட அந்தச் சிறுவனின் கையின் இயக்கம் தற்காலிகமாக நின்று விடும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அந்தச் சிறுவர்கள் 20 முறை இந்தச் சடங்குக்கு உட்படுத்தப்பட்டு அந்த வலியை தாங்க வேண்டும்.

இந்த சடங்கின் போது எறும்பின் கொட்டின் வலியானது ஒரு துப்பாக்கி குண்டு பட்டதைப் போல உணர வைக்குமாம், மேலும் 24 மணி நேரம் வரை இந்த வலி நீடிக்கும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கூறுகிறார்கள். ஒரு சிலருக்கு கடுமையான ஒவ்வாமையின், விளைவால் மூச்சு திணறலும் ஏற்படுமாம்.

எஸ்.நிஷாந்தன், கல்முனை.

# இப்படி செய்து பாருங்கள்



⏮ தொடர்ச்சியாக இரண்டு முறை யாரையும் போனில் அழைக்காதீர்கள். அவர்கள் முக்கிய வேலையாக இருக்கலாம், அல்லது பேச முடியாத சூழ்நிலையில் இருக்கலாம்.

⏮ ஹோட்டலில் சாப்பிடலாம் என நண்பர் உட்பட யார் அழைத்தாலும், மெனுகார்டில் விலை அதிகமுள்ள எதையும் ஓர்டர் செய்யாதீர்கள். அழைத்தவரையே உங்கள் விருப்பப்படி ஓர்டர் செய்யுங்கள் என வேண்டலாம்.

⏮ மற்றவர்களின் கருத்துக்கும் மதிப்பளியுங்கள்.

⏮ அடுத்தவர்கள் பேசும்போது இடைமறிக்காதீர்கள். அவர்கள் கொட்டட்டும். இறுதியில் அவர்களுக்கே நல்லது தெரிந்துவிடும்.

⏮ நீங்கள் கிண்டலடிப்பதை சம்பந்தப்பட்டவர் இரசிக்கவில்லை என்றால், மீண்டும் அதைச் செய்துவிடாதீர்கள். அவரை உற்சாகப்படுத்துங்கள். உங்கள் மதிப்பை அது மேம்படுத்தும்.

⏮ யார் உதவினாலும் பாரபட்சமின்றி நன்றி சொல்லுங்கள்.

⏮ பொதுவில் புகழுங்கள். தனியாக இருக்கையில் குறைகளை சுட்டிக்காட்டலாம்.

⏮ உடல்பருமனை ஒருபோதும் கிண்டலடிக்காதீர்கள்.

⏮ யாரும் தனக்கு மருத்துவரிடம் செல்ல வேண்டும் என்று கூறினால், உடனே என்ன நோய்க்கு என்று கேட்டுவிடாதீர்கள். அவர்களின் தனிப்பட்ட நோய்கள் பற்றி மற்றவர்களுக்கு தெரியக்கூடாது என்று கருதலாம்,

கி. வீகாஷினி,
புத்தளம்

# யாரும் இல்லை தானே கள்வன்!

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்பர்"**

நம் எல்லோருக்கும் பிடித்தமான விஷயம் பண்பாட்டின் புனிதம் பற்றிப் பேசுவதும் இலக்கியங்களிற் கூறப்பட்ட பிரிவற்ற காதலைப் பற்றியும் அவர்களின் மெல்லிய உணர்வுகளைப்பற்றிப் பேசுவதுமாகும். முக்கியமாக சங்க இலக்கியம் குறிப்பிடும் காதற் காட்சிகளை வியந்து கூறி அகமகிழ்ந்திருப்பதுமாகும்.

"யாயும் ஞாயும் யாராகியரோ?"

இவ்வகையிற் புகழ் பெற்றது. எனது தாய் யாரோ? உனது தாய் யாரோ? எனது தந்தை யாரோ? உனது தந்தை யாரோ ? நீயும் நானும் ஒருவரை ஒருவர் ஒரு போதும் அறிந்ததில்லை. என்றாலும் செம்புலத்திலே பெய்த மழை நீர் அம்மண்ணோடு; கலந்து செந்நிறமாகினாற் போல எம் இதயங்களும் ஒன்றாகி விட்டன. என்ற பொருளைத் தரும் யாயும் ஞாயும் யாராகியரோ என்ற குறுந்தொகைப் பாடல். இக்காதல் நிலத்தினும் பெரியது வானினும் உயர்ந்தது. நீரினும் அளவற்றதாக இருந்தது. இவ்வாறான அழகிய காதல் இலக்கியங்களில் அகம் ஆகியது. ஆனால், அந்தக் காதலிலும் தோல்விகள் இருந்தன. பெண்களின் புலம்பல்கள் வெளிப்பட்டன.புலவர்கள் சிலரேனும் அவ்வாறான காட்சிகளைத் தராமல் விடவில்லை.

யாருமற்ற இடத்தில் தலைவன் தன்னைப் புணர்ந்து சென்று விட்டான். அவன் தான் என்னைக் காதலித்து உறவு கொண்டவன் என்று சொல்ல எனக்கு எந்த ஆதாரமும் இல்லை.

அவனே பொய்த்தான் எனில் நாம் என்ன செய்வது என்கிறது கபிலர் பாடிய ஒருபாடல்.பெண்ணின் ஆதரவற்ற தன்மையை பெண் இவ்வாறு கூறுகிறாள்.

"யாரும் இல்லை தானே கள்வன்
தான் அது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு நாம் மணந்த ஞான்றே."
(குறு: 25)

இப்பாடலில் தலைவன் அவளை விட்டுச் சென்றதால் ஏற்பட்ட தலைவியினது துயரம் வெளிப்படுகிறது. அவர்கள் இருவரும் நீர் ஒழுகுகின்ற அருவிக்கரையிலே சந்தித்தார்கள்.

குறிஞ்சியிலிருந்து வருகின்ற நன்னீரருவியிலே ஆரல் மீனைத் தேடிய குருகு அதனைக் கொத்துவதாகிய தன் செயலிலேயே கண்ணாக இருந்தது. தலைவன் தலைவியை மணந்ததை அல்லது சேர்ந்ததை அதுவும் பார்க்கவில்லை, தலைவன் தலைவியின் உறவின் அல்லது தலைவியின் அக ஒழுக்கத்திலே அவர்களுக்குள் உண்டான மெல்லிய ஊரார் அறியாத உறவின் நெருக்கத்தை அவள் அவனுடன் கொண்டிருந்தாள். அதேநேரம் பொய்த்து விட்ட தலைவனை அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் பொய்த்தால் நான் என்ன செய்வது என்ற துயரம் பாடலில் தொனிக்கிறது. சாட்சியாக இருக்கக் கூடியது மீனைக் குறிவைத்துக் கொண்டிருந்த குருகுதான். ஆனால், அதுவும் பார்க்கவில்லை என்பது அப்பெண்ணின் கையறு நிலையை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

தலைவனிடம் தன்துயரத்தைக்




கூறுமாறு அலவனிடம் (நண்டிடம்)பேசும் தலைவி தலைவன் பிரிந்ததால் தான் அடைந்த துயரத்தை நெஞ்சொடு கிளத்தல் முறையிலே தனக்குத் தானே ஒருபெண் பேசுகிறாள் (அகம் : 170) நண்டிடம் தன் துயரத்தைக் கூறுகிறாள்.

"கானலும் கழறாது கழியும் கூறாது
தேன்இமிர் நறுமலர்ப் புன்னையும் மொழியாது
ஒருநின் அல்லது பிறிது யாதும் இலனே
இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்
கமம் இதழ் நாற்றம் அமிழ்தென நசைஇ
தண் தாது ஊதிய வண்டினம் களிசிறந்து
பறைஇ தளரும் துறைவனை நீயே
சொல்லல் வேண்டுமால் அலவ பல்கால்
கைதை அம் படுசினை எவ்வமொடு
அசாஅம்
கடற் சிறுகாக்கை காமர் பெடையொடு
கோட்டு மீன் வழங்கும் வேட்டம்மடி பரப்பின்
வெள்இறாக் கனவும் நள்ளென் யாமத்து
நின் உறு விழுமம் களைந்தோர்
தன் உறு விழுமம் நீந்துமோ எனவே"


செம்புலப் பெயனீரார்

40. யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புல பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

எ - து. இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், பிரிவரெனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறியது.



எனது துயரத்தை கடற்கரைச் சோலையும் அவனுக்குச் சென்று இடித்துக் கூறாது. உப்பங்கழியும் அவனுக்குச் சொல்லாது. நறிய மலர்களைப் பூக்கும் புன்னையும் மொழியாது. உன்னை அல்லாது எனக்குத்துணை ஒருவரும் இல்லை. எனக்குத் தூது சொல்ல யாருமில்லை அலவனே! நீதான் அவனிடம் தூது செல்லவேண்டும் தாழைமரத்தின் கிளையிலே பசிக்கு உணவின்மையால் தன் பெடையோடு வருந்தியிருக்கும் கடற்காக்கை வெள் இறால் மீனைப் பிடித்து உண்பதாகக் கனாக்காணும் கும்மிருட்டிலே இரவின்கண் வந்து பலநாளும் உன்னுடைய துன்பத்தை களைந்தவள்.உன் பிரிவால் தான் அடைந்த துன்பத்தைக் கடக்க வல்லவளோ என்று அவனிடத்துச் சென்று கேட்பாயாக என்கிறாள்.

எனவே, தேனினும் தித்திப்பான காதல்; மட்டுமல்ல பெண்களைக் கைவிட்டுச்சென்ற காதலும் இருந்திருக்கிறது.

அதனால்தான் களவு மணத்துக்கு கட்டுப்பாடு உண்டாக்கினர். சடங்குகளை ஏற்படுத்தினர். பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்பர்.

**- தகைசால் பேராசிரியர்**
**அம்மன்கிளி முருகதாஸ்**




# நபீலின் "தென்னம் படல் மறைப்பு"

## -நூலுருப் பெற்ற பத்தி எழுத்துக்கள் குறித்த ஒரு பார்வை




ஒரு கலைஞனை நினைவுகள் எப்போதும் மொய்த்திருக்கின்றன என்பதற்கு இந்த நூலின் 61 பத்தி எழுத்துகளும் சாட்சி. நபீல் இறந்த காலத்தை நிகழ்காலத்துக்கு இழுத்துக் கொணரும் ஒரு வித்தையை இந்தக் கட்டுரைகளில் நிகழ்த்திக் காட்டுகிறார். நபீலின் சிறுவயது உலகம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் பிரதேசம், அதன் மாந்தர்கள், ஒரு சமூகத்தின் வேரும் விழுதுமான நிகழ்வுகள், பாரம்பரியத்தின் சாராம்சங்கள், வழக்காறுகள், வட்டார வார்த்தைப் பிரயோகங்கள், விதம் விதமான பறவைகள்,மீன்கள், மரம் செடி கொடிகள்,பூக்கள், கிழங்குகள், தெருக்கள், விளையாட்டுகள், பலகாரங்கள், நகைகள், பண்டிகைகள்,திருவிழாக்கள், வானொலி,தொலைக்காட்சி, சினிமா என அவர் காற்சட்டைக் காலத்தில் தத்தித் தத்தி நகர்ந்த தடங்கள் எல்லாம் இந்த நூலிலே வருகின்றன.

இவ்வளவும் எழுதியவர் பால்யகால சிநேகிதிகளைப் பற்றி ஏதாவது எழுதியிருக்கிறாரா என்று பூதக்கண்ணாடி வைத்துத் தேடிப்பார்த்தேன். ஆங்காங்கே மிகவும் முன்னெச்சரிக்கையுடன், தமிழ் எழுத்தாளர்களுக்கேயுரிய கடமை-கண்ணியம்-கட்டுப்பாடுடன் அதையும் கூட லேசாகத் தொட்டு, 'நீளம் பாய்ந்து' சென்றிருக்கிறார்.

நபீலின் மொழியழகு பல இடங்களில் கிறங்க வைப்பவை. பல்வேறு குணாதிசயங்கள் கொண்ட பாத்திரங்களை அவர் அறிமுகப்படுத்திச் செல்கிறார். ஆலமரங்களில் தொங்கும் பொடி விழுதுகளை விலக்கி , பூவலில் நீரள்ளித் தந்து வயல் வெளிகளுக்கு அழைத்துச் செல்கிறார்.

கீழே ஹறிக்கேன் லாம்புகள் ஆடியபடியிருக்கும் மாட்டு வண்டிகளைக் காட்டுகிறார். காட்டின் ரகசியங்களைக் கொண்டிருக்கும் தாழம்பூ அத்தரின் வாசத்தை மூக்கின் ஆழத்துக்குக் கொணர்கிறார்.

தூக்கத்தில் குழந்தை முகம் மலர்ந்து சிரிக்கும் போது வானவர்கள் பூக்களைக் காட்டுவதாகக் கூறும் உம்மாவை அறிமுகப் படுத்துகிறார். அடைமழை கொஞ்சம் கொஞ்சமாகப் பெய்து தாழ்வாரமெங்கும் தோன்றி கொப்புளித்துக் கொண்டிருக்கும் குமிழிகளைக் காண்பிக்கிறார். பூப்பெய்திப் பாளை தள்ளுகின்ற கமுகு மரங்களின் மணத்தை முகரச் செய்கிறார். இத்தகைய இளந்தலைமுறை மொழியழகனைக் கண்டு எவ்வளவு காலமாகின்றது ?

இதுவரை நபீலின் 2 கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. கவிஞராக அறியப்பட்ட நபீலின் முதலாவது உரைநடை நூல் இது. பத்தி எழுத்துகளின் தொகுப்பு.

இந்தப் பத்தி வெளிவந்து கொண்டிருந்த காலத்தில் நாடெங்கும் கொரோனா பீதி நிலவியது. கொவிட்-19 தடுப்பூசி கூடப் போட்டுக் கொள்ளாமல் நபீல் இந்தப் பத்தியெழுத்துக்குத்தான் முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருந்தார். இது எவ்வளவு பெரிய அர்ப்பணிப்பு !

நபீலின் பத்திகள் தன்னெழுச்சியுடன் உருவானவை. தன் கவித்துவமான மொழியைப் பெரும்பாலான பத்திகளில் மிகவும் கவனத்துடன் கையாள்கிறார். 'காலண்டர் என்பது' , 'பழைய பேப்பர்' , 'கறுப்பு வெள்ளை', 'கழிசான் காலம்', 'வானொலிமாமா', 'திரை அருகில்' ஆகிய பத்திகளை அவர் இன்னும் சிறப்பாக எழுதியிருக்க முடியும். உணர்வுகள் பின்தள்ளப் பட்டு வெறும் விபரங்கள் இவற்றில் முன்னிலை பெறுவது இவற்றின் குறைபாடு.

சில பத்திகள் சிறுகதையின் எல்லைக் கோட்டுக்குச் சென்று நிற்கின்றன. 'மூத்தப்பாவும், வண்டிமாடும்','அத்தர்', 'புள்ளிம்மா', 'கலியாணம் வாங்க', 'கடிதங்கள்', 'வெள்ளம்' , 'ஔவியம்' ,'கடிதங்கள்' , 'பூணாரம்' ,'பஸ் போகுது' என்பவை சிறுகதைகள் ஆகியிருக்க வேண்டியவை. பத்திரிகையின் பலிபீடத்தில் இவை பத்திகள் ஆகிவிட்டன. சுவாரஸ்யமானதொரு நூலைத் தந்தமைக்காக நபீலுக்கும், காலச்சுவடு பதிப்பகத்துக்கும் வாழ்த்துகள்.

**- உமா வரதராஜன்**

# எழுத்தாளர் வல்லிக்கண்ணன்

## (12.11.1920 - 09.11.2006)



ரா. சு. கிருஷ்ணசாமி என்கின்ற இயற்பெயரைக் கொண்ட வல்லிக்கண்ணன் தமிழ் நாட்டை சேர்ந்தவர். இவர் எழுத்தாளர், பத்திரிகையாளர், விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் எனும் தகைமைகளைக் கொண்டவர். எழுத்தாளராவதற்காக அரசுப்பணியைத் துறந்த இவர் சிறுகதை, புதினம், குறும்புதினம் என 70க்கும் மேற்பட்ட படைப்புகளைத் தந்தவர். இவருடைய "மனுஷி" என்கின்ற சிறுகதை இந்தியாவின் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இவரின் சிறுகதைத்தொகுப்பு தமிழ் வளர்ச்சித்துறையின் 2002 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பெற்றது. "புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்" நூலுக்காக 1978 இல் சாகித்திய அகடெமி விருதினைப்பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**இவரது நூல்கள்:** பாரதிதாசனின் உவமை நயம் (1946), புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (1977), சரஸ்வதி காலம் (1986), பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை (1981), தமிழில் சிறு பத்திரிகைகள் (1991)




### ஆக்கங்களை அனுப்பலாம்

"இலக்கியம் லயம்" பக்கத்திற்கு ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. இலக்கிய கட்டுரைகள், நிகழ்வுகள், மாற்று சிந்தனைகள் என இன்னோரன்ன அம்சங்களை நீங்கள் அனுப்பலாம். அவை தரம் கண்டு "ஒருவன்" ஞாயிறு பத்திரிகையில் பிரசுரிக்கப்படும். ஆக்கங்களை unicode முறையில் டைப் செய்து மின்னஞ்சலில் அனுப்பலாம். அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி
**oruvanelakkiyam@gmail.com**

# கழுதைப் புலிகள்

உதவாத மரம்
வெட்டித் தீர்த்தேன்
வேறு மரமா இல்லை
பொன் சிட்டுக்கு ..!

கூட்டிப் பெருக்கி
குசினியிலும்
சேர்த்த கழிவு
வீசியெறிந்தாள்
கடைக்காரி ...
வெட்டியாய் தானே இருக்கு
வெறும் காணி..!

இடைவெளி பிழைத்த
கம்பியிலே
சிக்கிக் கிழிந்தது
வௌவால் ஒன்று..!

சந்து வழி
கூடிய நாயிரண்டு
கல்லெறிந்து
விளையாடும்
கூட்டமொன்று ..!

பாயிலேயே கழித்த
பாட்டி
இழுக்குதின்னும்
சாகுதேயில்லை...
சனியன்
ஓடிப்போன
கடைசிப் பொண்ணு
உடைந்து போன
காதல்
பகிர்ந்து விட்ட
வீடியோ துண்டு
பத்து முறை
பார்த்தும்
குற்ற விரை
குனியவில்லை!

தெரு
போதையிலே
பிச்சைக்காரன்
போகாமல்
போதாமல்
பிதற்றுகிறான் ...!

விமர்சித்தே களைத்து
திரும்பும்
இரவு ரயில்
ஊளையிட்டு
விழுங்கிச் சென்றது
இன்னொரு நாளை ..!



**- முத்துலிங்கம் ஜெயகாந்தன்**




# வஸீம் கொலையில் சந்தேகிக்கப்படும் அந்த நபர்கள்...



வஸீம் தாஜுதீன் விவகாரத்தில், கொலையின் பின்னர் மேலதிக ஆய்வுக்காக எடுக்கப்பட்ட வஸீமின் உடற் பாகங்கள் சில காணாமல் போனமை தொடர்பில் சி.ஐ.டி. முன்னெடுத்த விசாரணைக்கு அமைவாக முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், அவர்களில் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனநாயக்க, முன்னாள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஆனந்த சமரசேகர ஆகியோருக்கு எதிராக சட்ட மா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் தண்டனை சட்டக் கோவையின் 198 ஆவது அத்தியாயத்தின் கீழ் தண்டனைக் குரிய குற்றம் ஒன்றினை செய்துள்ளதாக கூறி வழக்கு தொடரப்பட்டது. எவ்வாறாயினும், வழக்கு விசா–ரணை ஆரம்பத்தில் ஆனந்த சமரசேகரவும், பின்னர் அனுர சேனநாயக்கவும் உயிரிழந்தனர்.

எனினும், கொலையாளிகள் இதுவரை கண்டறியப் படவில்லை.

வஸீமின் மரணத்தை கொலை என உறுதி செய்ய நடந்த சட்டப் போராட்டங்கள் ஏராளம். வஸீமின் காருக்குள் தீ பரவ இரசாயனம் ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளதாக சந்தேகிக்கும் சான்றுகள் உள்ளதாக அரச இரசாயன பகுப்பாய்வாளரால் அறிக்கை கொடுக்கப்பட்ட நிலையிலும், வஸீமின் ஜனாஸா அவரது காரின் சாரதி ஆசனத்துக்கு பக்கத்து ஆசனத்தில் ஆசனப்பட்டி அணிந்திருந்த நிலையில் மீட்கப்பட்டும் கூட அதனை கொலை என தெரிவிப்பதற்கு 3 வருடங்களுக்கு மேல் ஆகியது. அத்துடன் 2 பிரேத பரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டிட்யிருந்தது. இந்தப் படுகொலை தொடர்பில் மீண்டும் தற்போது பேசப்படுகிறது.

**தாஜுதீனின் பணப்பை சம்பவ இடத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப் பட்டிருந்தது**

### கொலை என கருதப்படுவதற்கான மூன்று காரணங்கள்

ராஜபக்ச குடும்பத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களில் வஸீம் தாஜுதீனின் படுகொலை முக்கியமானது. இந்த படுகொலை தொடர்பில் ராஜபக்சக்கள் மீதுவிரல் நீட்ட 3 முக்கிய விடயங்கள் காரணமாவதாக கூறப்படுகின்றது.

கொலைக்கான முதலாவது காரணமாக கருதப்படுவது, ஹெவ்லொக் கால்டன் றக்பி கழகங்கள் குறித்த முறுகல் நிலையாகும். கால்டன் விளையாட்டு கழகமும் அது சார்பான செயற்பாடுகளும் ராஜபக்ச குடும்பத்தை மையப்படுத்தியது என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.

இரண்டாவது காரணம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் மனைவி ஆவார். கொலை நடக்கும் போது சிரந்தி ராஜபக்சவின் சிரிலிய மன்றத்துக்கு செஞ்சிலுவை சங்கத்தினால் வழங்கப்பட்ட டப்ளியூ. பி. கே. ஏ.0642 எனும் டிப்பெண்டர் ரக வாகனம் தொடர்பானது. இவ்வண்டி 2011.08.11 ஆம் திகதி சிரந்தி ராஜபக்சவுக்கு செஞ்சிலுவை சங்கத் தலைவர் ஜகத் பாலசூரியவினால் கையளிக்கப்பட்டதாகும். வஸீம் கொலை நடந்த போது, வஸீமின் வாகனத்தை பின் தொடர்ந்து சென்றதாக சி.ஐ.டி. அடையாளம் காணப்பட்ட வண்டி இந்த டிபண்டர் வாகனத்தை ஒத்தது என கருதப்பட்டது. அத்துடன், எந்தவொரு காரணமும் இன்றி, குறித்த டிபண்டர் வாகனத்தின் நிறம் இரு தடவைகள் மாற்றப்பட்டிருந்தன. இது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்திருந்தது. அடுத்த காரணம், வஸீம் கொலை தொடர்பில் 2015 ஆம் ஆண்டின் பின்னர் விசாரணை நடத்திய சி.ஐ.டி.யினர் பல தடயங்களை வைத்து, வஸீமின் வாகனத்தை பின் தொடர்ந்த கொலைக்கார கும்பல் சிரந்தி ராஜபக்சவின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டிருந்த கடற்படை சிறப்புக் குழுவினரே என சந்தேகித்து அந்த கோணத்தில் விசாரணைகளை நடத்தினர். இதற்காக அவர்கள் குறித்த பாதுகாப்பு குழுவின் நாளாந்த பதிவுப் புத்தகத்தை ஆராய்ந்தனர். இதன்போது நாளாந்த பதிவுப் புத்தகத்தின் 6 பக்கங்கள் கிழிக்கப்பட்டு, வேறு பக்கங்கள் செலோடேப் கொண்டு ஒட்டப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அந்த பக்கங்கள் வஸீம் கொலை நடந்த தினத்துக்குரியதாகும். இந்த நிலையில், அன்று கடமையிலிருந்த கடற்படையினரிடம் இது தொடர்பாக விளக்கமளித்து தகவல்களை தருமாறு சி.ஐ.டி யினர் கோரிய போதிலும் அவை வழங்கப்படாததால் வஸீம் கொலையாளியை கண்டறியும் விசாரணையில் தேக்க நிலை ஏற்பட்டது.

இந்த விசாரணை தேக்க நிலைக்கு மைத்திரி – ரணில் கூட்டாட்சியும் பதில் சொல்ல வேண்டும் என்ற குற்றச்சாட்டுகளும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்படி நல்லாட்சியின் போது கூட அந்த அரசாங்கமும் விசாரணைகள் முன் கொண்டு நகர்வதை தடுக்கும் வகையில் செயற்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் நிலவச் செய்தன. தேர்தல் காலத்தில் மட்டும் அவர்கள் வஸீம் கொலை மீது அக்கறை காட்டினர் என்பது கவனிக்கத்தக்கது.



**தாஜுதீன் காரில் சடலமாக மீட்கப்பட்ட போது, சாரதி ஆசனத்தில் யாருமே இருக்கவில்லை. பக்கத்து ஆசனத்தில் தான் வஸீமின் உடல் மீட்கப்பட்டது அப்படியாயின், வாகனத்தை ஓட்டியவர் யார்? இது விபத்து சம்பவமாக இருந்து காரை வேறொருவர் செலுத்தியிருந்தால் அந்த சாரதிக்கு என்ன நடந்தது..?**

### சம்பவத்தின் முக்கிய திருப்பம்

ஆம். தாஜுதீன் காரில் சடலமாக மீட்கப்பட்ட போது, சாரதியின் ஆசனத்தில் யாருமே இருக்கவில்லை. அத்துடன், பக்கத்து ஆசனத்தில் தான் வசீமின் உடல் மீட்கப்பட்டது. அப்படியாயின், வாகனத்தை ஓட்டியவர் யார்? இது விபத்து சம்பவமாக இருந்திருந்தால் காரை வேறொருவர் செலுத்தியிருந்தால் சாரதியின் சடலம் ஏன் மீட்கப்படவில்லை?

தீயணைப்பு படையினர் அழைக்கப்பட்டிருந்தும் அவர்களிடம் ஏன் வாக்குமூலம் பெறப்படவில்லை? சாலிகா மைதான பாதுகாப்பு ஊழியவர்களிடம் ஏன் விசாரணை நடத்தப்படவில்லை? தொலைபேசி உரையாடல்கள் தொடர்பிலும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

அதுமட்டுமன்றி, தாஜுதீனின் பணப்பை சம்பவ இடத்திலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தூரத்தில் கண்டெடுக்கப்பட்டிருந்தது. கார் நுவரெலியாவில் மீட்கப்பட்டிருந்தது. இதன் பின்னணி என்ன?

உண்மையில் தாஜுதீன் கடத்தப்பட்டாரா?

(விபரங்கள் அடுத்த வாரம்...)

# பாடசாலை வேலைகளை வட்ஸ்அப் ஊடாக அனுப்புவதால் பிள்ளைகள் டிஜிட்டல் திரைக்கு அடிமையாகி வருகின்றனர்

## -குழந்தைகளுக்கான கண் மருத்துவ நிபுணர் அனுஷா தென்னேகும்புர தெரிவிப்பு

## சுற்றறிக்கைகள் செயல்படுத்தப்படுவதில்லை, இதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்...





பாடசாலை மாணவர்களுக்கு வட்ஸ்அப் மூலம் வீட்டு வேலை பாடங்களை அனுப்புவதன் காரணமாக மாணவர்கள் டிஜிட்டல் திரைகளுக்கு அடிமையாகின்றனர். எனவே இதனை தடுப்பதற்கு, கல்வி அமைச்சு, சிறுவர் விவகார அமைச்சு உட்பட அரசாங்கமும் இப்போதே நடவடிக்கை எடுக்க வேண்டும் என கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் குழந்தைகளுக்கான கண் மருத்துவ நிபுணர் அனுஷா தன்னேகும்புர தெரிவித்தார்.

டிஜிட்டல் திரைகளின் பயன்பாட்டால் இன்று பிள்ளைகள் நாள்பட்ட கண் கோளாறுகள் மற்றும் உளவியல் தாக்கங்கள் காரணமாக பலவித பிரச்சினைகளுக்கு ஆளாவதுடன், அவை தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கொழும்பு சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நிலவரப்படி, உலகில் சுமார் 30 சதவீதம் குழந்தைகளுக்கு அஸ்டிஜிமாடிசம் உள்ளது எனவும், அவர்கள் வளர்ச்சி குறைபாடுகளால் அவதிப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். 2050 ஆம் ஆண்டுக்குள் இந்த நிலை 50 சதவீதத்தை எட்டும் எனவும் இது மிகவும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். பாடசாலை வேலைகளை வட்ஸ்அப் மூலம் மாணவர்களுக்கு அனுப்ப வேண்டாம் என கல்வி அமைச்சின் மூலம் சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ள போதிலும் அவை கருத்திற் கொள்ளப்பட்டதாக தெரியவில்லை எனவும் அவர் கவலை தெரிவித்தார்.



மேலும் அவர் தெரிவிக்கையில், பிள்ளைகளின் பார்வை வளர்ச்சியில் குறைப்பாடு, மூக்குக் கண்ணாடி அணிய வேண்டிய நிலை ஏற்படுதல், கண் எரிச்சல், கண் அலர்ஜி, கண்புரை, குழந்தை பருவ கண் புற்றுநோய் ஆகியன டிஜிட்டல் திரை பாவனையின் மூலமே அதிகமாக ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

இப்போதெல்லாம் குழந்தைகள் விளையாடுவதை நிறுத்திவிட்டனர். டிஜிட்டல் திரைகளைப் பார்ப்பதே அவர்களின் பொழுது போக்காக இருந்து வருகின்றது. டிஜிட்டல் திரையின் மீது அவர்களின் அவதானிப்பு அதிகமாவதால் அவர்களின் தொலைநோக்கு பார்வை மிகவும் பலவீனமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், லேடிரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனைக்கு வருகை தரும் குழந்தைகளில் அநேகர் கண் பார்வை குறைபாடுகள் காரணமாக சிகிச்சை பெறவே வருகின்றனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, இங்கு உரையாற்றிய கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான மனநல மருத்துவர் ஸ்வர்ணா விஜேதுங்க குறிப்பிடுகையில், ”18 மாதங்கள் முதல் 2 வயது வரையிலான குழந்தைகள் டிஜிட்டல் திரைகளைப் பயன்படுத்துகின்றனர். இது மிகவும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. ஆகையினால், பெற்றோர் சில மணிநேரங்களையாவது பிள்ளைகளுக்காக ஒதுக்குதல் வேண்டும்” என்றார்.

மேலும், குறைந்தது ஒரு மணி நேரமாவது பெற்றோர் பிள்ளைகளுடன் விளையாட்டில் ஈடுபடுவது முக்கியம். அவ்வாறு செய்யாவிடின் குழந்தைகளுக்கு கண் நோய்கள், அறிவுத்திறன் குறைபாடு, கல்வியில் தடைகள், உடல் செயல்பாடு பாதித்தல், உடல், மனநிலை பாதிப்பு போன்ற பாதகமான விளைவுகள் ஏற்படும். இவற்றை தவிர்ப்பதற்கு பெற்றோர் கூடியவரையில் பிள்ளைகளுடன் நேரத்தை செலவிடுவதே பயனுடையதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.




# ஒருவன் சினிமா

## அடுத்த பாய்ச்சலுக்கு தயாரான சிவகார்த்திகேயன்



'மகாராஜா', 'பார்க்கிங்', 'ரிவால்வர் ரீட்டா' உட்பட பல படங்களை தயாரித்த சுதன் சுந்தரம், 'எஸ்.கே.24' படத்தைத் தயாரிக்கிறார். 'டான்' படத்தை தொடர்ந்து இதிலும் அனிருத் இணைந்திருக்கிறார். ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் தயாராகி வரும் "SK 23" படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கிறது.

இந்நிலையில், தனது அடுத்த படமான "SK24" ஆரம்பித்துவிட்டார் சிவகார்த்திகேயன். இதற்கான படப்பூஜை சென்னையில் எளிமையான முறையில் நடந்தது.

## 'ஸ்வீட் ஹார்ட்'

அறிமுக இயக்குநர் ஸ்வினீத் எஸ்.சுகுமார் இயக்கத்தில் உருவாகி வரும் 'ஸ்வீட் ஹார்ட்' எனும் படத்தில் ரியோ ராஜ், கோபிகா ரமேஷ், அருணாசலேஸ்வரன், ரெஞ்சி பணிக்கர், துளசி உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். இவர்களுடன் நகைச்சுவை நடிகர் ரெடின் கிங்ஸ்லி சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கிறார்.

பாலாஜி சுப்பிரமணியம் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருக்கிறார். இந்த திரைப்படத்தை வை.எஸ்.ஆர் பிலிம்ஸ் நிறுவனம் சார்பில் யுவன் சங்கர் ராஜா தயாரித்திருக்கிறார். படத்தின் பர்ஸ்ட் லுக்கை சிம்பு, யுவன் சங்கர் ராஜா ஆகியோர் வெளியிட்டனர்.




## திருநங்கைகளை மேம்படுத்தும் 'சைலண்ட்'




'சைலண்ட்' படத்தில் ஆணாகவும், பெண்ணாகவும் புவனேஸ்வரி என்கிற புவனேஸ்வரன் கேரக்டரில் நான் நடித்திருக்கிறேன். திருநங்கைகளையும், அவர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்தும் படமாக இது இருக்கும்"

–'சைலண்ட்' பட நாயகன் முரளி ராதாகிருஷ்ணன்




சினிமா விமர்சனம்

# 'நயன்தாரா' ஆவணப்படம்

## (Nayanthara beyond the fairy tale)

**இயக்கம்: அமித் கிருஷ்ணன்**



நயன்தாராவின் பிறந்தநாளை முன்னிட்டு நெட்ஃப்ளிக்ஸ் ஓ.டி.டி தளத்தில் வெளியாகியது 'நயன்தாரா – பியொண்ட் த ஃபேரி டேல்' என்ற ஆவணப்படம்.

நயன்தாரா – விக்னேஷ் சிவன் தம்பதிக்குக் கடந்த 2022ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இந்தத் திருமணத்தை அடிப்படையாகக் கொண்டு நயன்தாராவின் முழு சினிமா பக்கத்தை அலசுவதாக இந்த ஆவணப்படத்தை எடுத்திருக்கிறார்கள். இதில் நயன்தாரா, "மற்றவரின் சந்தோஷத்தைப் பார்த்து மக்கள் நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் உணர வேண்டும் என்பதே என் எண்ணம்!"என ஒரு வசனத்தைக் கூறுகிறார்.

கன்னட நடிகர் உபேந்திரா, நடிகர் நாகர்ஜுனா, இயக்குநர் விஷ்ணு வரதன், அட்லீ, ராதிகா சரத்குமார் என சினிமா நட்சத்திரங்களின் பேட்டியும் இந்த ஆவணப்படத்தில் அடங்கியிருக்கிறது. சினிமா மீது ஆர்வமில்லாத பெண்ணாக இருக்கும் டயானா, நயன்தாராவாக உருவெடுத்தது தொடர்பாக நயன்தாராவை அறிமுகப்படுத்திய இயக்குநர் சத்யன் அந்திக்காடு எடுத்துச் சொல்கிறார்.

இரண்டாவது திரைப்படமே உச்ச நடிகருடன் நடிக்கும் வாய்ப்பெல்லாம் ஒரு நாயகிக்கு அவ்வளவு எளிதாகக் கிடைத்துவிடாது. அந்த வாய்ப்பு இந்த 'லேடி சூப்பர் ஸ்டாருக்கு' கிடைத்தது. அது பற்றியும் சுவரஸ்யமான தொனியில் தேவையான விஷயங்களை மட்டும் சொல்கிறார் இயக்குநர் சத்யன் அந்திக்காடு.

'கவிதாலயா புரொடக்ஷன்ஸ்' நிறுவனத்தின் தயாரிப்பில் உருவான 'ஐயா' படத்தின் மூலம்தான் கோலிவுட்டில் அடியெடுத்து வைத்தார் நயன்தாரா. அவரின் வசீகரிக்கும் முகம் குறித்தும் அவரின் நடிப்பு குறித்தும் பல சுவாரஸ்யங்களை கூறுகிறார் கே. பாலசந்தரின் மகள் புஷ்பா கந்தசாமி.

இப்படியான நல்ல தொடக்கத்தைக் கொண்ட இந்த ஆவணப்படம் அடுத்தடுத்து மேடு பள்ளங்களில் ஏறவும் இறங்கவும் செய்கிறது. இதனைத் தொடர்ந்து 'கஜினி' திரைப்படத்தில் இவருடைய தோற்றம் குறித்து எழுந்த உருவக்கேலிகள் தொடர்பாகவும் நயன்தாரா இதில் பேசியிருக்கிறார். 'பில்லா' பல பக்கங்களை எடுத்துக் கூறி வேகத்தைக் கூட்டி ஆழ்ந்து கவனிக்க வைக்கிறார்கள்.

ஆனால், அதன் பிறகு உடனடியாக, திருமண வாழ்க்கைக்கு சென்றுவிடுவது கூடுதல் ஏமாற்றமே. அதை எடுத்துச் சொன்ன விதமும் சோர்வையே உண்டாக்குகிறது.

ஆவணப்படத்தின் நீளத்தில் கவனமாக இருந்த குழு அதன் தரத்திலும் கவனமாக இருந்திருக்கலாம். நயன்தாரா குறித்து ஏற்கெனவே தெரிந்த பல விஷயங்களே இதிலும் கொட்டிக் கிடக்கின்றன. அதிலும் சொல்லப்பட்ட பெரும்பான்மையான விடயங்களை மேலோட்டமாகவே தொட்டுச் சென்றிருக்கிறார்கள். மென்மையாகத் தொடங்கிய இந்த ஆவணப்படம் நயன்தாரா பற்றித் தெரியாத பல முக்கியமான விஷயங்களை நமக்குக் கொடுப்பதில் தட்டுத் தடுமாறியிருக்கிறது.

கதாபாத்திரம் குறித்து அனல் பறக்கும் கதைகளை எடுத்துக் கூறிய இந்த ஆவணப்படம், நயன்தாராவின் அடுத்தடுத்த பயணங்கள் மீதும் ஆழமாகக் கவனம் செலுத்தியிருக்கலாம்.

இதன் பிறகு நேரடியாக 'நானும் ரௌடிதான்' திரைப்படம், தமக்குள் எப்படிக் காதலை மலரச் செய்தது என இயக்குநர் விக்னேஷ் சிவனும் நயன்தாராவும் எடுத்துரைக்கிறார்கள். நயன்தாராவும் விக்னேஷ் சிவனும் காதலிப்பதாகச் செய்திகள் வெளியானதும் விக்னேஷ் சிவன் பற்றி வந்த மீம்களையெல்லாம் எப்படி விக்னேஷ் சிவன் நேர்மறையாக எதிர்கொண்டார் என்பதிலிருந்து தொடங்கி அவர் பற்றி அறியாத

## Face of the week




## ஆரம்பமானது 'சூர்யா 45' படப்பிடிப்பு



சூர்யாவின் 45வது படத்தின் படப்பிடிப்பு அண்மையில், கோவையில் தொடங்கியது. இந்த படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக திரிஷா நடிக்கிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். ஆர்.ஜே. பாலாஜி எழுதி, இயக்கும் இந்த படத்தை டிரீம் வாரியர் பிக்சர்ஸ் சார்பில் எஸ்.ஆர்.பிரபு தயாரிக்கிறார்.

படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. அமானுஷ்ய சக்தி பின்னணியில் உருவாகும் பொழுதுபோக்கு படமாக இது இருக்கும் எனக் கூறப்படுகிறது. மௌனம் பேசியதே, ஆறு, ஆயுத எழுத்து படங்களுக்குப் பிறகு சூர்யாவுடன் இணைந்து திரிஷா இதில் நடிக்கிறார்.

## திருமண பந்தத்தில் இணைந்த பாகுபலி நடிகர்



'பாகுபலி' நடிகர் சுப்பராஜ், தனது 47 வயதில் திருமண பந்தத்தில் இணைந்துள்ளார். இவர், தமிழில் விஜய் நடித்த 'ஆதி', 'போக்கிரி', ஜெயம் ரவி நடித்த 'எம். குமரன் சன் ஒஃப் மகாலட்சுமி', சிம்பு நடித்த 'சரவணா' உட்பட பல படங்களில் நடித்துள்ளார். 47 வயதாகியும் திருமணம் செய்யாமல் இருந்த இவர், அண்மையில், தனது திருமண புகைப்படத்தை தனது இன்ஸ்டாகிராமில் வெளியிட்டுள்ளார்.

## சீனாவில் மகாராஜா

விஜய் சேதுபதி நடிப்பில் இந்த ஆண்டு வெளிவந்து மாபெருமளவில் வெற்றியடைந்த படம் மகாராஜா. வித்தியாசமான திரைக்கதையில் உருவாகியிருந்த இப்படத்தை, இயக்குனர் நித்திலன் சுவாமிநாதன் இயக்கியிருந்தார்.




கடந்த ஜூன் மாதம் வெளிவந்த இப்படம் ரூ. 100 கோடிக்கும் மேல் வசூல் செய்து சாதனை படைத்திருந்தது. இந்நிலையில், கடந்த வாரம் மகாராஜா படத்தை சீனாவில் வெளியிட்டிருந்தனர். 40 ஆயிரம் திரையரங்குகளில் வெளிவந்த இப்படம், 5 நாட்களில் இந்திய மதிப்பில் ரூ. 4.15 கோடி வசூல் செய்துள்ளது.

## 'சூது கவ்வும்' விரைவில் 3ஆம் பாகம்




சிவா, வாகை சந்திரசேகர், கருணாகரன், ராதாரவி, எம்.எஸ். பாஸ்கர், அருள்தாஸ், ரமேஷ் திலக், யோக் ஜேபி, ஹரிஷா ஜஸ்டின், கராத்தே கார்த்தி, கல்கி நடித்துள்ள படம், 'சூது கவ்வும் 2'. வரும் 13ஆம் திகதி திரைக்கு வருகிறது. திருக்குமரன் எண்டர்டெயின்மெண்ட் சார்பில் சி.வி.குமார், தங்கம் சினிமாஸ் சார்பில் எஸ்.தங்கராஜ் தயாரித்துள்ளனர்.

படம் குறித்து பட நாயகன் சிவா கூறுகையில், 'சூது கவ்வும்' 2ஆம் பாகத்தில் நான் நடிக்கிறேன் என்றாலும், இது 'சூது கவ்வும்' படத்தின் முற்பாதியாக உருவாகிறது. அதற்குப் பிறகு தற்போதைய படத்துடன் தொடர்பு ஏற்படும். திரைக்கதை எனக்கு மிகவும் பிடித்தது. அந்த கதைக்குள் வருவது, கருணாகரனை சந்திப்பது உட்பட பல சுவாரஸ்யமான திருப்பங்கள் இருக்கிறது. இதன் 3வது பாகம், 'சூது கவ்வும்: தர்மம் வெல்லும்' என்ற பெயரில் உருவாகிறது. அதிலும் நாங்கள் இருப்போம்" என்று தெரிவித்தார்.

## 100 கோடிக்கு விற்பனையான கங்குவா

பிரம்மாண்ட பொருட்செலவில் எடுக்கப்பட்டு கடந்த 14ஆம் தேதி வெளிவந்த திரைப்படம் கங்குவா. இயக்குனர் சிறுத்தை சிவா இயக்கிய இப்படத்தை ஸ்டுடியோ க்ரீன் ஞானவேல் ராஜா தயாரித்திருந்தார். இப்படத்தில் சூர்யாவுடன் இணைந்து திஷா பாட்னி, பாபி தியோல், நட்டி நட்ராஜ், கருணாஸ் உள்ளிட்ட பலரும் நடித்திருந்தனர்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இப்படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றது. இதனால் வசூல் சரிவை சந்தித்தது. ஆனாலும், கங்குவா படம் தயாரிப்பாளருக்கு பெரிதளவில் நஷ்டத்தை




ஏற்படுத்தவில்லை என திரை வட்டாரத்தில் கூறுகின்றனர். இந்த நிலையில், கங்குவா படத்தை 'ப்ரைம் OTT' தளம் ரூ.100 கோடிக்கு வாங்கியுள்ளது என கூறப்படுகிறது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 01 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.